VISIT…

விடியலைத் தேடி

1

"அன்பாய்ச் சொன்னால் புரியாதவர்களுக்கு அடித்துத்தான் தெரிய வைக்க வேண்டும். சரி, அடிப்பதற்குத்தான் தைரியம் இல்லை என்றால் அதட்டியாவது பேச வேண்டும். எதற்கும் துணிவு இல்லாமல் எனக்கென்று வாய்த்திருக்கிறீர்களே! எல்லாம் என் தலைவிதி!" என்று கணவனைக் கடிந்த தனபாக்கியம் அதே வேகத்தில் பக்கவாட்டில் சுவர் ஓரமாய் பதுங்கியிருந்த அண்ணணிடம் திரும்பினாள்.

அந்தச் சுவருக்குள்ளேயே போய்விட முடிந்தால் நன்றாயிருக்கும் போல இருந்தது, அனுபமாவுக்கு. இந்தச் சித்தியின் பாட்டைக் கேட்கும் அவசியம் இராது போகுமே. ஆனால் அதற்கு வழியில்லாததால் அவள் என்ன பாடினாலும் கேட்டுத்தானே தீர வேண்டும்.

பார்வையைத் தரையில் பதித்தபடி அசையாமல் நின்று கொண்டிருந்த மைத்துனர் மகளைப் பார்க்கையில் தனபாக்கியத்தின் சீற்றம் இன்னமும் அதிகரித்தது. "ஏண்டி, சரியென்று தலை வாத்தது சொல்லாமல் இந்த அழிச்சாட்டியம் பண்ணுகிறாயே, உன்னை என்ன அங்கே போய் சாணி அள்ளவும்

வரட்டி தட்டவுமா சொல்லுகிறார்கள்? அரண்மனை போல வீடு இருக்கிறது; ஆள் அம்பு எல்லாம் இருக்கிறது. அங்கே போய் அல்லி ராணி மாதிரி அரசாண்டு கொண்டு இரு என்றால் பெரிய ராங்கி பண்ணுகிறாயே. பார்க்கிறவர்கள் நாங்கள் என்னமோ உன்னைப் பாழும் கிணற்றில் தள்ளப்போவதாக அல்லவா நினைப்பார்கள்!'' என்றாள், கோபத்துடன்.

பாழும் கிணறேதான். ஆனால் அதைச் சொல்லி, சித்தியின் சினத்தை மேலும் தூண்டிவிட்டுப் பிரியமற்றுப் பேசாமலே நின்றாள் பெண்.

''ஊமைக்கோட்டான் போல நிற்பதைப் பார். நீ சும்மா நின்றால் விட்டுவிடுவோம் என்றா நினைத்தாய்? எந்த ராஜா சந்தைக்குப் போனாலும் நாளைக்கு மாப்பிள்ளை வீட்டிலிருந்து வரத்தான் போகிறார்கள்; திருமணத்தை உறுதி செய்து உனக்குப் பூ வைத்துவிட்டுத்தான் போகப் போகிறார்கள். ஏதாவது வம்பு கிம்பு பண்ணுவது என்றால் அப்புறம் இந்த வீட்டில் ஒரு நிமிடம் இருக்கக் கூடாது; இப்போதே சொல்லிவிட்டேன். ஆமாம்.'' என்று சித்திக்காரி தீர்மானமாகச் சொல்லவும் அனுபமா திணறினாள்.

மவுனமாக மறுப்பைக் காட்டித் தள்ளிவிட முடியாது போல் தெரிகிறதே.

மெல்ல நிமிர்ந்து, ''த... தயவு செய்து இ.... இந்த இடம் வேண்.... டாம் சித்தி'' என்றாள் இறைஞ்சுதலாக.

எதிர்பார்த்தது போலவே சித்தியின் கலர்நாக்கு அவளை மட்டுமின்றி அவளைப் பெற்றவர்களையும் கிழித்துக் கூறு போட்டது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னே, ஒரு பேருந்து ஓட்டுநரின் பிழையால் ஏற்பட்ட விபத்தில் உயிர் இழந்தவர்கள் அவர்கள். சின்னப்பிள்ளைகளை மடியில் வைத்துக் கொண்டு முன் சீட்டில்

அமர்ந்தவர்கள் இரண்டு சீட் பின்னே இருந்த ஓர் இடத்தில் மகளை அமர வைத்திருந்தார்கள். தனியே அமர்ந்திருந்த சிறுமி பயந்து விடக் கூடாது என்று அவ்வப்போது திரும்பிப் பார்த்துப் புன்னகை செய்த தாயின் குங்கும முகம் அப்போது கூட அவளுக்கு நினைவிருந்தது.

பின்னே இருந்ததால் உயிர்பிழைத்த போதும் அன்பான உறவுகளை இழந்து தனியாக நின்று தவிக்கும் கொடுநிலைக்கு அனுபமா ஆளாக நேர்ந்தது.

பத்துவயதுப் பெண்ணை அவள் தலையில் கட்டி விட்டுப் பொறுப்பில்லாமல் போய்ச் சேர்ந்துவிட்டதாக அனுபமாவுடைய பெற்றோர் மேல் குற்றம் சாட்டினாள் தனபாக்கியம். இன்னொருத்தியாக இருந்திருந்தால் பிச்சையெடுத்துத் தின்னட்டும் என்று தலையில் தண்ணீர் தெளித்து தெருவுக்கு விரட்டியிருப்பாளாம். அவளது இளகிய குணத்தால் அப்படிச் செய்ய மனம் வரவில்லையாம். பெற்ற பெண்ணைப் போலப் பாராட்டி சீராட்டி வளர்த்த பாவத்துக்குப் பாம்பாக மாறி நெஞ்சிலேயே கொத்துகிறாளாம்.

சிற்றன்னையின் பேச்சில் இருந்த பொய்கள் எப்போதும் போலவே அன்றும் அனுபமாவின் நெஞ்சில் கொதிப்பூட்டின.

பொறுப்பில்லாதவர்களா அவளுடைய பெற்றோர்? தலைச்சன் பெண்ணாகப் பிறந்ததால் அவர்கள் அலுத்துக் கொண்டது இல்லை. மாறாக அவளது திருமணத்திற்காக என்று அப்போதே சேமிக்கத் தொடங்கியிருந்தார்கள்.

அந்தப் பணத்தை எல்லாம் 'காப்பாளர்' என்கிற பெயரில் பெற்று, குதிரை வாலில் கட்டிக் கரியாக்கியது இதே சித்தியும் சித்தப்பாவும்தானே.

அத்தோடு அம்மாவின் நகைகளை எல்லாம் வேக வேகமாக உருமாறி சித்தியின் பெரும் உடம்பை அலங்கரித்துப் பின்

அவையும் அடகுக்கடை, ஏலம் என்று மறைந்துவிட வில்லையா?

இதில் எதுவும் அனுபமா அறியாத கதையல்லவே! சின்னஞ் சிறுவயதில் சரியாகப் புரியாவிட்டாலும் அவ்வப்போது மனதில் பதிந்துவிட்ட சில காட்சிகள், பேச்சுகளைப் பிற்பாடு வயதுடன் அறியவும் வளர்ந்தபின் கூட்டிக் குவித்து யோசித்து நிச்சயமாக உணர்ந்து கொண்ட உண்மைகள் ஆயிற்றே.

பத்து வயதில் தண்ணீர் தெளித்துத் தெருவுக்குத் துரத்தாத காரணமும் அவள் அறிந்ததுதான்.

அப்பாவின் 'ஆயுள் காப்பீடு' பணம்!

அப்போது உயிரோடு இருந்த அனுபமாவின் தாய்வழிப் பாட்டிமுன் வந்து, பேத்தியைத் தானே வளர்ப்பதாகக் கூறிய போது, அண்ணனுக்குச் செய்ய வேண்டிய கடமை, இரத்தபாசம் அது இது என்று முதலைக் கண்ணீர் விட்டு அவளை அங்கேயே இருத்திக் கொண்டதன் ஒரு காரணம் அந்தப் பணம்.

அடுத்தது சம்பளம் இல்லாமல் கிடைத்த வேலைக்காரி.

பாத்திரம் துலக்கி, வீடு பெருக்கி, துணி துவைத்து, அந்த மாதிரி வேலைகளைச் செய்யப் பிடிக்காமல் அனுபமா முதலில் முரண்டு அழுதது உண்டு.

ஆனால் அவளது ஆவல்களைப் போலவே அழுகைக்கும் அந்த வீட்டில் மதிப்பு இருந்தது இல்லை.

அவளது சின்ன எதிர்ப்புக்கும் கூடச் சித்தி காளியாட்டம் ஆடுவதும் சித்தப்பா ஒத்துப் பாடுவதும் ஒருவாறு பழக்கப் பட்டு போயிற்று. சிறுவயதில் சித்தி சட்டெனக் கைநீட்டிவிடுவதும் கூடத்தான்.

ஆசைப்பட்டால் அதை நிறைவேற்றுவதற்கும், அடிபட்டு

வலித்தால் அணைத்துத் தேற்றுவதற்கும் அம்மா வரமாட்டாள் என்பதை ஒருவாறு உணர்ந்து மெல்ல மெல்ல சூழ்நிலைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள் அனுபமா. அதிலும் ஒரு சூட்டுக்கோல் அனுபவத்துக்குப் பிறகு எதிர்ப்பை அடியோடு விட்டு விட்டாள்.

பத்து வயதுச் சிறுமிக்கு உரிய ஆசைகள் அத்தனையையும் தொண்டைக்குக் கீழேயே அடக்கி நிறுத்திக் கொண்டாள். காலை எழுந்ததிலிருந்து சித்தி இடும் வேலைகளை முகம் கோணாமல் செய்தாள். தந்ததை உண்டு வளர்ந்தாள்.

அவர்கள் உருப்படியாகச் செய்த காரியம் ஒன்றே ஒன்று. அவளைப் படிக்க வைத்தார்கள். ஊரார் கண்துடைப்புக்காகச் செய்ததுதான் என்றாலும் பள்ளி நேரங்கள் அவளுக்குப் பெரும் ஆறுதலைத் தந்தன. பைத்தியம் பிடிக்காமல் காத்தன என்றே கூறலாம்.

கல்லூரிப் படிப்பு கட்டிவராதென்று சித்தி படிப்பை நிறுத்தச் சொன்னபோது தாங்க மாட்டாமல் இரவெல்லாம் அழுதாள் அனுபமா. அழுகையினூடேயோசித்து, பெரிய படிப்பு படித்து, நிறைய சம்பாதித்துத் தருவதாகச் சித்தியிடம் வாக்கு கொடுத்து மேலே படிக்க அனுமதி வாங்கினாள்.

கல்லூரிப் பருவம் ஏதேதோ கனவுகளை வளர்த்தது. என்றோ ஒரு நாள் விடியும். அழகான ராஜகுமாரன் போல ஒருவன் வந்து இந்த இருளில் இருந்து அவளை மீட்டு வெளிச்சத்துக்கு அழைத்துச் செல்வான். சிரிப்பு, சந்தோசம், என்று பத்து வயதுக்கு முன்னே அவள் அறிந்திருந்த அனைத்துமான வாழ்வு மீண்டும் கிட்டும். இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஒரு நாள்....

அதுவரை வெறும் வசவோடு நில்லாமல் வீட்டை விட்டு வெளியேறு என்றதும் அவள் திகைத்தாள். வெளியேறினால்....

சட்டென அனுபமாவின் முகம் கன்றியது.

மைத்துனர் மகளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த தனபாக்கியத்துக்கு உற்சாகம் உண்டாயிற்று. மானத்துக்கு அஞ்சுகிறாள். இனி இவளை மண்ணோடு மண்ணாய் நசுக்குவது எளிது.

''பின்னே என்னவென்று நினைத்தாய்? சொல் பேச்சு கேட்காத சுழுதைகளுக்குச் சும்மா சோறு போட்டுக் கொண்டு இருப்பதற்கு இதென்ன தரும சத்திரமா?''

'சும்மாவா சோறு போடுகிறாள்' என்று உள்ளூரப் பொருமிய அனுபமா அதை மறைத்து, ''நான் தான் வேலை பார்த்துநிறைய சம்பாதித்து, சம்பளம் முழுவதையும் உங்கள் கையிலேயே தந்து விடுகிறேன் என்றேனே சித்தி?'' என்றாள் கெஞ்சுதலாகவே.

''என்னா நிறைய...ய்ய? யாரானும் அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பா ஆகிறபோது அந்தக் கதையைச் சொல்லு! நானும் மறுவார்த்தை பேசாமல் கேட்டுக்கொள்கிறேன்'' என்றாள் தனபாக்கியம் நக்கலாக. ''நீ என்னாடி பெரிய படிப்பு படிக்கிறாய்? வெறும் பி.ஏ. அதுக்கு மேலே ரெண்டு வருசம் படித்து முடிச்சுவிட்டு அந்த முனைவீட்டுப் பையன் மளிகைக் கடையில் கணக்கு எழுதுகிறான். நீயானால் பொட்டைப் பிள்ளை. கடைகளில் கூட வேலை கொடுக்க மாட்டான். நீதான் நிறய்....ய்ய சம்பாதித்து கொண்டு வந்து கொட்டப் போகிறாய்; நானும் எண்ணமாட்டாமல் மாயப் போகிறேன்'' என்று இளக்காரம் பேசினாள்.

அவமானத்தை விழுங்கிக் கொண்டு, ''பெண்களுக்குச் சில சலுகைகள் உண்டு, சித்தி. எளிதாக வேலை கிடைக்குமாம்'' என்று கூறிச் சமாளிக்க முயன்றாள் சின்னவள்.

''கேப்பையிலே நெய் வடிகிறது என்றால் கேட்கிறவனுக்குத்

தான் புத்தி வேண்டும். என்னமோ, உனக்குத் தருவதற்காகவே நல்ல நல்ல வேலைகளைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துக் கொண்டு கம்பெனிக்காரர்கள் எல்லாம் காத்துக் கிடக்கிற மாதிரிப் பேசுகிறாயே. இதை நம்புகிற அளவுக்கு நான் ஒன்றும் தற்குறியில்லை. சொன்ன பேச்சைக் கேள். மரியாதையாக நாங்கள் பார்த்திருக்கிற மாப்பிள்ளையைக் கட்டிக்கொள். உனக்கும் நிம்மதி, எங்களுக்கும் பொறுப்பு தீரும். மற்றபடி மாட்டேன் கீட்டேன் என்றால் நான் பொல்லாதவளாக இருப்பேன்'' என்று இளக்காரத்தில் தொடங்கி மிரட்டலில் முடித்தாள் தனபாக்கியம்.

இனிமேல்தானே பொல்லாதவளாக இருப்பாளாம்! இது வரை ரொம்ப நல்லவளாக இருந்ததாக நினைப்பு போல! ஆனால் அதைப்பற்றி ஆராய்கிற நேரம் இது அல்ல; ஆராய்ந்து பயனும் இல்லை.

உடனடிப் பிரச்சினைக்கு மனதைத் திருப்பி, ''அவர்... அந்த ஆளுக்கு வயது நிறைய இருக்கும் போலத் தெரிகிறது சித்தி.... சித்தப்பாவைவிட அதிகம் தெரிகிறதே....'' என்றாள் மெதுவாக.

''தெரிந்தால் என்ன? பித்த நரையாகக்கூட இருக்கலாம். அப்படியே வயதானாலும்தான் என்ன? உன் சித்தப்பாவுக்கு பத்து மடங்கு சம்பாதிக்கிறாரே!'' என்றாள் சித்தி, ஏதோ சம்பாதனை ஒன்றுதான் ஒரு மணமகனுக்குரிய இலட்சணம் என்பது போல்.

''பிள்ளைகள்கூட நிறைய சித்தி.''

''பிள்ளைகள் என்று சொல்லாதே. பெண்கள் என்று சொல்லு. ஐந்தும் பெண்கள். திருமணம் செய்து தூரத்தி விட்டால், போனதும் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றுக் கொடுத்தால்தான் அவ்வளவுதான். கிழவன் உன் காலடியில் விழுவான். கிழவனைக் கைக்குள் போட்டுக் கொண்டால்

பட்டும் வைரமுமாக மினுக்கலாமே!''

அசுசியாய்த் தொண்டை வரை கசந்தது அனுபமாவுக்கு.

கிழவன் என்று அவள் வாயாலேயே சொல்லுகிறாள்; அவனுக்குப் போய்.... சை. அந்தப் பெண்களைத் துரத்துவ தாமே! வீட்டுப் பெண்களைத் துரத்துவது அவளுக்குச் சம்மதம் இல்லை என்பதோடு துரத்தினால் ஓடுவதற்கு அவர்கள் அப்பாவிகளும் அல்ல.

முன்தினம் ஏதோ, சித்தப்பாவுக்கு வேண்டியவர்கள் என்று எண்ணி, சித்தி ஏவியபடி அனுபமா காபி, பலகாரம் எடுத்து வைத்த போது அந்த ஐந்து பெண்களும் - மூத்தவளுக்கு நிச்சயமாய் அனுபமாவை விட வயது கூடுதலாகத் தான் இருக்கும். சங்கேதமாய் ஜாடை பரிமாறிக் கொண்ட விதத்தி லேயே ஒரு திமிர்த்தனம் தெரிந்தது. இன்ன மாதிரி விஷயம் என்று உணர்ந்து, உள்ளுரத் திகிலுடன் அவள் அமர்ந்திருந்த போது அருகில் அமர்வது போல ஒருத்தி சடையைப் பிடித்து இழுத்துப் பார்த்தாள். ஒருத்தி கிள்ளவே செய்தாள்.

இந்த நாத்தனார் வானரங்களை எப்படி சமாளிப்பது என்று எண்ணிக் கலங்கியவளுக்கு இவர்களுடைய தந்தைதான் கல்யாண மாப்பிள்ளை என்று அறிந்தபோது மயக்கம் போடாத குறைதான். கூடவே அந்தப் பெண்களின் ஆத்திரத் தையும் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் பெற்றவனிடம் காட்டமுடியாத, கோபத்தை அவளிடம் காட்டுவது நியாயமில் லையே!

இல்லை. இது விடிவே இல்லாத கும்மிருட்டு. இதை ஒத்துக்கொள்ளக்கூடாது. எப்பாடு பட்டாகிலும் இதிலிருந்து தப்பியே ஆக வேண்டும். தப்புவதற்கு வழியே இல்லை என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் வாணிலிக்குத் தப்பி அடுப்பில் விழுந்த கதையாகிவிடக் கூடாதே என்பது தான் அவளது கவலை.

அனுபமா வாய் வார்த்தையாக எவ்வளவோ மறுத்தபோ தும் அதைச் சற்றும் மதியாமல் மறுநாள் விசேஷத்துக்குரிய வேலைகளில் பெரியவர்கள் இருவரும் மும்முரமாய் இறங்கி னர்.

சித்திதான் வேற்று இரத்தம்; அவளைப் பற்றிய அக்கறை அணுவளவு இல்லை. இந்தச் சித்தப்பா அப்பாவின் உடன் பிறப்பாயிற்றே. கொஞ்சமேனும் கசிவு இராதா என்று அவரி டம் மன்றாடிப் பார்த்தாள் அனுபமா.

எல்லாவற்றையும் பொறுமையாக - அல்லது சித்தி சொல்லு கிற மாதிரி ஒரு கல்லுளிமங்கத்தனத்துடன் கேட்டிருந்துவிட்டு, தள்பாக்கியத்தின் கணவராக அவர் சொன்னார் - ''இப்போது நான் சொல்வதைக் கேள். உன் கல்யாணம் காட்சிக்கு என்று உன் அப்பன் எந்தப் பணமும் வைத்துவிட்டுப் போகவில்லை. உன் சாப்பாட்டுக்கும் படிப்புக்கும் எனக்கு ஏகப்பட்ட செலவு. இதற்குமேல் திருமணச் செலவு செய்ய நாங்கள் தயாரில்லை. சொல்லு, எந்தச் செலவும் இல்லாமல் கட்டிக் கொள்கிறவன் எவனாவது இருந்தால் கூட்டிக்கொண்டு வா, பார்க்கலாம். அதற்கு வக்கு இல்லாதவள் வாயைத் திறக்கப்படாது. வறட்டுத் தவளை மாதிரி வேண்டாம் வேண்டாம் என்றால் பெல்ட் பிய்ந்துவிடும் - உன் தோலோடு சேர்ந்து'' என்று மிரட்டினார் அவர்.

''அய்யோ! பெல்ட் எதுக்குங்க? உங்கள் கை வலிக்காது? அனுபமாக் கண்ணுக்கு இதிலே ஒரு தடவல் போதுமே'' என்று, எங்கிருந்தோ மறைந்து நின்று கேட்டு விட்டுப் பூனை மாதிரி ஓசைப்படாமல் வந்து நின்று பேசிய சித்தியின் கையில் இருந்த சூட்டுக் கோலைக் காணவும் அனுபமா அயர்ந்து போனாள்.

பினாடிக்குள் காளி ரூபம் எடுத்து, ''மறந்து போகலை தானே? வாயை மூடிக் கொண்டு உள்ளே போடி, நாயே''

என்று உறுமினாள் தனபாக்கியம்.

''ஒரு வக்கு இல்லாவிட்டாலும் வாய் மட்டும் இருக்கிறது. எனக்கு ஒளித்து உங்களிடம் வந்து நிற்கிற சாமர்த்தியத்தைப் பாருங்களேன்!'' என்று தனபாக்கியம் பேசுவதைக் கேட்டபடியே பேசாமல் உள்ளே சென்றாள் அனுபமா.

சித்தி, சித்தப்பா இருவரும் சொன்னது போல அனுபமாவுக்கு வக்கில்லாமல் போய்விடவில்லை.

அவளுக்காகவே அவளை மணக்க ஒருவன் தயாராக இருந்தான். ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் அவன் வீட்டில் ஆயிரம் பிரச்சினைகள். வேற்று சாதி, வேலையில்லாத துன்பம், பெற்றோரின் பணத்தாசை, தங்கை திருமணம்... என்று எல்லாமே பிரச்னைதான்.

ஆனாலும் கூடத் 'துணிவோடு வீட்டை விட்டு வந்துவிடு. எப்படியோ சமாளித்துக் கொள்ளலாம்' என்று அவளை வற்புறுத்திக் கொண்டுதான் இருந்தான்.

''நீ கிடைப்பதே எனக்கு லட்ச ரூபாய் கிடைப்பது போல. நாம் எப்படியும் சமாளித்துக் கொள்ளலாம் வந்துவிடு'' என்று கல்லூரி பேருந்து நிறுத்தத்தில் அவளிடம் எத்தனைமுறை கெஞ்சியிருப்பான்!

அவளுக்குத்தான் அதற்கு மனம் ஒப்பவில்லை. காதல் அது இது என்று வீட்டை விட்டு பிறர் அறியாமல் வெளியேறுவது கேவலம். பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டுமே தவிர அதற்குப் பயந்து ஓடி அவமானத்தை இழுத்துக் கொள்ளக்கூடாது என்று மறுத்துக் கொண்டு இருந்தாள்.

ஆனால் வீட்டுப் பெரியவர்களின் போக்கு அவளைக் கழுத்தைப் பிடித்து அந்தப் பாதைக்குத் தள்ளுவது போலத் தோன்றியது அனுபமாவுக்கு.

2

மதுரநாயகியின் மகள் ஒருவரும் அறியாமல் எவனுடனோ ஓடிப் போனாள் என்கிற பேச்சு வந்து விடக்கூடாது என்று அனுபமா எவ்வளவோ முயன்ற போதும் மறுநாள் பூ வைப்பது என்ற பெயரில் அந்த வீட்டில் மற்றவர்கள் அடித்த கூத்து அவளை அந்த முடிவுக்கே விரட்டியடித்தது.

அன்று சூட்டுக்கோலைப் பார்த்ததும் பழைய நினைவுக்கு அவளது தேகம் பதறியது உண்மைதான். ஆயினும் அவளது மறுப்பு மட்டும் வெற்றி பெறுமானால் எத்தனையோ சூட்டுப் புண்களைத் தாங்கவும் அவள் அப்போது தயாராகவே இருந்தாள்.

ஆனால் உடம்பெல்லாம் சூடு வாங்கிக் கொண்டாலும் சித்தப்பா சித்தியின் மனம் சற்றும் இளகும் போலத் தோன்றாத தால் அனாவசியமாய்ச் சூடு வாங்கி இருக்கிற ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்கிற எண்ணத்தில் அதற்குமேல் மறுத்துப் பேசுவதை நிறுத்திக் கொண்டாள்.

ஒருவேளை படிதாண்டிச் சென்றுதான் ஆகவேண்டும் என்றாகிவிட்டால்! எத்தனையோ ஆபத்துகளுக்கும், விபத்துக்களுக்கும் கூட அவள் தயாராகத்தானே இருந்தாக வேண்டும். எத்தனை சினிமாக்களில் என்னென்ன பார்த்தாயிற்று! எந்த அளவுக்கு அவளது ஆரோக்கியம் அவளுக்கு அவசியப்படுமோ, யாரறிவார்? காலில் சூட்டுப் புண்ணுடன் கடுகி ஓடுவது சாத்தியமாகுமா? அனாவசியமாக ரகுபதிக்கு வேறு தொல்லை கொடுத்து விடக் கூடாது...

அன்று முழுவதும் சூட்டுக்கோல், அதற்காகவே மூட்டிய கரியடுப்பில் சொருகப்பட்டுக் கனன்று கொண்டே இருந்தது.

அவ்வப்போது 'அங்கே பார்த்தாயா?' என்கிற மாதிரி ஒரு பார்வையை அடுப்பின் பக்கம் செலுத்திக் காட்டிய படியே மைத்துனர் மகளை அடைக்காத்தாள் தனபாக்கியம்.

ஐந்து மகள்கள் புடை சூழ மாப்பிள்ளை வர, கூடவே சில்லரைக்கு வீங்கும் சில தொத்தல்களும் உடன் வந்தன.

''சின்னம்மாளுக்கு நிறையப் பூ வைங்கடி பெண்களா, அவள் நெடுங்காலம் பூவோடும் பொட்டோடும், வாழட்டும்'' என்று தன் ஆயுளை நீடிக்கக் குறுக்கு வழி தேடினார், மணமகன்.

வாய்ப்புக் கிட்டியது என்று பூவைக்கிற சாக்கில் அனுபமாவின் கூந்தலைக் கண்டபடி முரட்டுத்தனமாக இழுத்து வலிக்கச் செய்து வதைத்தார்கள்.

பல்லைக் கடித்துச் சகித்தாள் பெண்.

குட்டுக்கோவின் மகிமை என்று தனபாக்கியம் பெருமிதப் பட, பாய்வதற்குமுன் புலி பதுங்கித்தான் ஆக வேண்டும் என்று நினைத்தாள் அனுபமா.

எல்லோரும் பேசினார்கள்; சிரித்தார்கள்; விருந்து உண்டார்கள். கைகழுவி வரும்போது ஒரு சிறு இடை வெளியில் மாப்பிள்ளை மனிதர் தனியே நிற்பதை அனுபமா கண்டாள்.

பிறர் கவனத்தை ஈர்த்து விடாதபடி எச்சரிக்கையுடன் அவரை அணுகினாள். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''பாருங்கள் அய்யா.... இந்தக் கல்.... வந்து.... எனக்குத் திருமணம் செய்து கொள்ளவே விருப்பம் இல்லை'' என்றாள் தனிவான குரலில் அவசரமாக.

அவளைப் பார்வையால் விழுங்கியபடி ''இப்படிச் சொல்லுகிற பெண்கள் கட்டிலைக் கண்டதும் ஆளே மாறிவிடுவார்கள்'' என்று ஒரு மாதிரி இளிப்புடன் சப்புக் கொட்டவும் முகம் கன்ற விரைந்து விலகிப்போனாள் அவள்.

ஆனால் அரைகுறையாக உருவாகியிருந்த எண்ணம் அவளுள் வலுக்கத் தொடங்கியது.

கிளம்புகையில், விடை பெறும் சாக்கில் அவள் அருகே வந்து, ''இப்போதே சொல்லி விட்டேன். எண்ணி பத்தாம் மாதம் எனக்கு ஆண்பிள்ளை பெற்றுத் தராவிட்டால் உன்னை லேசில் விடமாட்டேனாக்கும்'' என்று மாப்பிள்ளைக் கிழவன் அவளது கன்னத்தை நிமிண்டக் கைநீட்டவும் சரேலென்று பின்னே நகர்ந்து விலகிக் கொண்டாள் அனுபமா.

அவளுள் வலுப்பெற்றிருந்த எண்ணத்தை எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்று தீர்மானித்தாள்.

கடைசி கடைசியாக, ''அப்போது...'' என்று தலையைச் சொறிந்த சித்தப்பாவிடம், ஐந்து பெண்களும் ஆங்காரத்துடனும், சித்தி, சித்தப்பா ஆவலுடனும் பார்த்திருக்க, ''இந்தாருங்கள்'' என்று மூன்று நூறு ரூபாய்க் கட்டுகளை அலட்சியம் போலக் காட்டிக் கொடுத்து விட்டு, ''மீதியைக் கல்யாணம் முடிந்த பிறகுதான் தருவேன்'' என்று கூறி, அவளிடம் 'உனக்கான விலைதானடி' என்பது போல ஓர் உரிமைப் பார்வையை அந்தக் கிழட்டு மணவாளன் செலுத்தியபோது, உள்ளிருந்த தீர்மானத்தை உயிரைக் கொடுத்தேனும் நிறைவேற்றியே தீரவேண்டும் என்கிற வைராக்கியமே உண்டாகிவிட்டது அனுபமாவுக்கு.

திருமண கோஷ்டியினர் சென்றபின் அவசர அவசரமாக மகளிடம் ஓடிவந்தாள் தனபாக்கியம். ''பூ வைக்கும் போது உன் கழுத்தில் ஏதோ நகை போட்டாற்போல இருந்ததே... அடேடே.... இந்த மூன்று பட்டைச் சங்கிலியா? கனமாயிருக்குதா? கழற்றித்தா, எத்தனை பவுன் இருக்கும் என்று பார்க்கலாம்'' என்று கூறி, அனுபமா கழற்றி எடுக்குமுன் அவசரமாகத்தானே கழற்றி எடுத்துத் தூக்கிப் பார்த்துவிட்டு அவசரமாகத் தன் கழுத்தில் அணிந்து இங்கும் அங்கும்

திரும்பிக் கண்ணாடியில் அழகு பார்த்தாள்.

அந்த நேரத்தில் சிற்றன்னையிடம் சற்றுப் பரிதாபம் கூட உண்டாயிற்று அனுபமாவுக்கு.

விரைவிலே ஒருநாள் இந்த நகை, பணம் எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்தாக வேண்டிய கட்டாயம் வருமே, அப் போது இந்த சித்தி எப்படித் தாங்குவாள்? பாவம். தாங்க மாட்டாமல் மாரடைப்புக்கூட வந்துவிடக்கூடும்...!

எப்போதுமே காலை வேளைகளில் ஓர் இரண்டு மணி நேரம் அதிகம் இருக்கக்கூடாதா என்று அடிக்கடி மனம் சலிப்பாள் அனுபமா. ஆனால் அன்று பொழுதை நெட்டித் தள்ள வேண்டியது ஆயிற்று.

எப்படியோ கைப்பழக்கத்தில் சமையல் செய்து, மற்ற வேலைகளையும் செய்து முடித்துக் கிளம்பியபோது தனபாக்கி யம் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டாள். ''கல்யாணம் நிச்சயம் ஆன பெண்ணா நீ... ஒருகண் போல ஒருகண் இருக்குமா? திருஷ்டிபட்டுப் போகும். அதனால் நீ இனிமேல் கல்லூரி கில்லூரின்னு வீணாகப் பணத்தைச் செலவு பண்ணி அலைய வேண்டாம்'' என்றதும் அனுபமாவுக்கு நெஞ்சு கலங்கிப்போ யிற்று.

உடனே சமாளித்து, ''என்... என் உபகாரச் சம்பளப் பணம் இ... இருக்கிறதில்லையா, சித்தி? அதை வாங்கிக்... அதை எப்படி வாங்குவது என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளத்தான் போகிறேன் சித்தி. அந்தப் பணத்தை அனாவசியமாய் விடுவானேன் சித்தி? ஆனால் உங்களுக்குப் பிரியம் இல்லா விட்டால் போகவில்லை...'' என்று கூறி நல்லபிள்ளை போல உள்ளே செல்லத் திரும்பினாள்.

அவசியம் என்று ஆகி விட்டால் பொய் புகலவும் வந்துவிடும் போலும்!

அவள் எதிர்பார்த்தது போலவே பணம் என்றதும் தனபாக்கி யம் மாறினாள். ''இல்லை இல்லை... நான் ஒன்றும் உன்னைத் தடுக்கவில்லை. தாராளமாகக் கல்லூரிக்குப் போய் விட் டுவா... இன்னமும் நீ என்னத்திற்காக விழுந்து விழுந்து கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும் என்று... நான் உனக்காகத் தான் பார்த்தேன், கண்ணு. ஆனால் நீ சொல்லுகிற மாதிரி அந்தப் பணத்தையும்தான் எதற்கு விடுகிறது? ஏதோ, கஷ்டப் பட்ட வீட்டில் பிறந்து வளரும்படியாய் உன் தலையில் எழுதிவிட்டார். அந்தப் பணம் வந்தால் உருப்படியாய் ஒரு சீர்செனத்தி செய்யலாமில்லையா? போ கண்ணு... போய் பணத்தை முழுசாக வாங்கி வா...'' என்று அனுமதி கொடுத் தாள் தனபாக்கியம்.

அனுபமாவுக்குச் சீர்செய்கிறாளாம் சித்தி! சூரியன் மேற்கில் உதித்துவிடாதோ?

அவளது மனம் மீண்டும் மாறிவிடுமுன், தப்பித்தேன் பிழைத்தேன் என்று அவசர அவசரமாக வீட்டைவிட்டு வெளியேறினாள் அனுபமா.

வழக்கம்போல பேருந்து நிறுத்தத்தில் ரகுபதி நிற்பதைச் சுற்றுத் தொலைவிலேயே அனுபமா பார்த்துவிட்டாள்.

பேருந்து நிறுத்தத்துக் கூரையைத் தாங்கி நின்ற இரும்பு தூணில் மேல் ஒரு காலை லேசாக மடித்து முட்டுக்கொடுத்தாற் போல் சாய்ந்து அவன் நிற்பதைக் காணுகையில் அவளுக்கு ஏதோ உறுத்தியது.

ஒரு காலை மடித்து.... ஒடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு போல... சேச்சே.

மீனைப் பிடித்ததும் லபக்கென்று விழுங்கி அதை அடியோடு ஒழித்து விடுகிற கொக்கு எங்கே? ஒரு கொடிய நரகத்திலி ருந்து அபலை மீட்டு சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லப்போ

திரும்பிக் கண்ணாடியில் அழகு பார்த்தாள்.

அந்த நேரத்தில் சிற்றன்னையிடம் சற்றுப் பரிதாபம் கூட உண்டாயிற்று அனுபமாவுக்கு.

விரைவிலே ஒருநாள் இந்த நகை, பணம் எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்தாக வேண்டிய கட்டாயம் வருமே, அப் போது இந்த சித்தி எப்படித் தாங்குவாள்? பாவம். தாங்க மாட்டாமல் மாரடைப்புக்கூட வந்துவிடக்கூடும்...!

எப்போதுமே காலை வேளைகளில் ஓர் இரண்டு மணி நேரம் அதிகம் இருக்கக்கூடாதா என்று அடிக்கடி மனம் சலிப்பாள் அனுபமா. ஆனால் அன்று பொழுதை நெட்டித் தள்ள வேண்டியது ஆயிற்று.

எப்படியோ கைப்பழக்கத்தில் சமையல் செய்து, மற்ற வேலைகளையும் செய்து முடித்துக் கிளம்பியபோது தனபாக்கி யம் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டாள். ''கல்யாணம் நிச்சயம் ஆன பெண்ணா நீ... ஒருகண் போல ஒருகண் இருக்குமா? திருஷ்டிபட்டுப் போகும். அதனால் நீ இனிமேல் கல்லூரி கில்லூரின்னு வீணாகப் பணத்தைச் செலவு பண்ணி அலைய வேண்டாம்'' என்றதும் அனுபமாவுக்கு நெஞ்சு கலங்கிப்போ யிற்று.

உடனே சமாளித்து, ''என்... என் உபகாரச் சம்பளப் பணம் இ... இருக்கிறதில்லையா, சித்தி? அதை வாங்கிக்... அதை எப்படி வாங்குவது என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளத்தான் போகிறேன் சித்தி. அந்தப் பணத்தை அனாவசியமாய் விடுவானேன் சித்தி? ஆனால் உங்களுக்குப் பிரியம் இல்லா விட்டால் போகவில்லை...'' என்று கூறி நல்லபிள்ளை போல உள்ளே செல்லத் திரும்பினாள்.

அவசியம் என்று ஆகி விட்டால் பொய் புகலவும் வந்துவிடும் போலும்!

அவள் எதிர்பார்த்தது போலவே பணம் என்றதும் தனபாக்கி யம் மாறினாள். ''இல்லை இல்லை... நான் ஒன்றும் உன்னைத் தடுக்கவில்லை. தாராளமாகக் கல்லூரிக்குப் போய் விட் டுவா... இன்னமும் நீ என்னத்திற்காக விழுந்து விழுந்து கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும் என்று... நான் உனக்காகத் தான் பார்த்தேன், கண்ணு. ஆனால் நீ சொல்லுகிற மாதிரி அந்தப் பணத்தையும்தான் எதற்கு விடுகிறது? ஏதோ, கஷ்டப் பட்ட வீட்டில் பிறந்து வளரும்படியாய் உன் தலையில் எழுதிவிட்டார். அந்தப் பணம் வந்தால் உருப்படியாய் ஒரு சீர்செனத்தி செய்யலாமில்லையா? போ கண்ணு... போய் பணத்தை முழுசாக வாங்கி வா...'' என்று அனுமதி கொடுத் தாள் தனபாக்கியம்.

அனுபமாவுக்குச் சீர்செய்கிறாளாம் சித்தி! சூரியன் மேற்கில் உதித்துவிடாதோ?

அவளது மனம் மீண்டும் மாறிவிடுமுன், தப்பித்தேன் பிழைத்தேன் என்று அவசர அவசரமாக வீட்டைவிட்டு வெளியேறினாள் அனுபமா.

வழக்கம்போல பேருந்து நிறுத்தத்தில் ரகுபதி நிற்பதைச் சற்றுத் தொலைவிலேயே அனுபமா பார்த்துவிட்டாள்.

பேருந்து நிறுத்தத்துக் கூரையைத் தாங்கி நின்ற இரும்பு [illegible] மேல் ஒரு காலை லேசாக மடித்து முட்டுக்கொடுத்தாற் போலச் சாய்ந்து அவன் நிற்பதைக் காணுகையில் அவளுக்கு [illegible] ஏதோ உறுத்தியது.

[illegible] காலை மடித்து.... ஒடுமீன் ஓட உறுமீன் வருமளவும் [illegible] கொக்கு போல... சேச்சே.

[illegible] நினைத்ததும் லபக்கென்று விழுங்கி அதை அடியோடு [illegible] கொக்கு எங்கே? ஒரு கொடிய நரகத்திலி [illegible] ஆளாகப் போய் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லப்போ

மொட்டைத்தலைக்கும்
போல என்ன முட்டாள்
ஆனாலும்....
அனுபமாவின் கலங்
கொள்ள மறுத்தது.
ஆனால் அதிலேயே
சுள்ளாக அவளைக் க
சிரித்தபடி உற்சாகத்து
பெருமூச்சுடன் இருக்கை
பேருந்திலிருந்து இற
நோக்கி நடந்தாள் அனு
திரும்பினான்.
அவளைப் பார்ப்ப
அவனது முகபாவனை
அழுகை வரப் பார்த்த
அவளிடம் அன்பு
இருக்கிறார்களே!
தன்மனதில் இருப்ப
விட்டு ஒருமூச்சு அழ
தன்னைக் கட்டுப்படு
தாள் அனுபமா.
கல்லூரி தொடங்குகி
மானவியரின் கூட்டம்
அடித்து மகிழ வந்த
ஜாகூம் இங்கே கூட

ழுங்காலுக்கும் முடிச்சிடுவது
னமான உவமை!

ருந்த மனம் சுலபத்தில் அமைதி

ந்து உழல முடியவில்லை. அதற்
கிட்ட ரகுபதி வாய் நிறையச்
கையாட்டவும், ஒரு நிம்மதிப்
பிட்டு எழுந்தாள் அவள்.

டைபாதையில் ஏறி ரகுபதியை
அவனும் ஆவலோடு அவளை

சந்தோஷம் என்பது போன்ற
அவளுக்குக் கண்ணோரம் கரித்து

டக்கூட உலகத்தில் மனிதர்கள்

யெல்லாம் அவனிடம் கொட்டி
டும் போல வந்தது அவளுக்கு.

முயன்றபடியே சுற்றுமுற்றும் பார்த்

நேரம் என்பதால் பஸ் நிறுத்தத்தில்
ந்தது. கூடவே அவர்களை 'சைட்'
யோக்களின் கூட்டமும் இருந்தது.

இப்போது முடியாது.

கிற ரகுபதி எங்கே?

மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சிடுவது போல என்ன முட்டாள் தனமான உவமை!

ஆனாலும்....

அனுபமாவின் கலங்கியிருந்த மனம் சுலபத்தில் அமைதி கொள்ள மறுத்தது.

ஆனால் அதிலேயே கிடந்து உழல முடியவில்லை. அதற்குள்ளாக அவளைக் கண்டுவிட்ட ரகுபதி வாய் நிறையச் சிரித்தபடி உற்சாகத்துடன் கையாட்டவும், ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் இருக்கையைவிட்டு எழுந்தாள் அவள்.

பேருந்திலிருந்து இறங்கி நடைபாதையில் ஏறி ரகுபதியை நோக்கி நடந்தாள் அனுபமா. அவனும் ஆவலோடு அவளை நெருங்கினான்.

அவளைப் பார்ப்பதே சந்தோஷம் என்பது போன்ற அவனது முகபாவனையில் அவளுக்குக் கண்ணோரம் கரித்து அழுகை வரப் பார்த்தது.

அவளிடம் அன்பு காட்டக்கூட உலகத்தில் மனிதர்கள் இருக்கிறார்களே!

தன்மனதில் இருப்பதையெல்லாம் அவனிடம் கொட்டி விட்டு ஒருமூச்சு அழவேண்டும் போல வந்தது அவளுக்கு.

தன்னைக் கட்டுப்படுத்த முயன்றபடியே சுற்றுமுற்றும் பார்த்தாள் அனுபமா.

கல்லூரி தொடங்குகிற நேரம் என்பதால் பஸ் நிறுத்தத்தில் மாணவியரின் கூட்டம் இருந்தது. கூடவே அவர்களை 'சைட்' அடித்து மகிழ வந்த ரோமியோக்களின் கூட்டமும் இருந்தது.

ஊகூம் இங்கே கூடாது. இப்போது முடியாது.

ரகுபதியின் முகத்தைப் பாராமல் அவன் அருகே சென்று நின்று, வேறு எங்கோ பார்த்தபடி ''நான் கல்லூரிக்குள் சென்றுவிட்டு ஒர் அரை மணி நேரம் பொறுத்து, இந்த கூட்டம் கலைந்ததும் வருகிறேன். அதுவரை நீங்கள்....'' என்று தொடங்கிய அனுபமா சட்டெனத் தடுமாறினாள்.

அரை மணி நேரம் இதே இடத்தில் காத்துக் கிட என்று அவனிடம் - அவளாக இதுவரையிலும் பிடி கொடுத்துப் பேசியிராத ஒருவனிடம் எப்படி அவளால் சொல்ல முடியும்?

அவளது தவிப்பை உணர்ந்தவன் போலக் குரலில் கனிவு சொட்டப் பேசினான் ரகுபதி. ''அரை மணி நேரமும் இங்கேயே நிற்க வேண்டும் என்றாலும் நிற்கிறேன். அல்லது அதோ அந்தக் காபிக் கடையில் காபி குடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். சரிதானா? நீ நிம்மதியாக கல்லூரிக்குச் சென்றுவிட்டு வா. அவசரப்படாமல் நிதானமாக வரலாம். நான் வேறு எங்கும் போய்விட மாட்டேன்'' என்று இதமான குரலில் பெருந்தன்மையோடு பேசி அனுப்பி வைத்தான், ரகுபதி.

நன்றியோடு நோக்கிய விழிகள் நனைந்திருப்பதைக் கண்ட தும், ''சீச்சீ.... பைத்தியம். எதற்கு அழுகை? ஆறு மாத காலமாய் உனக்காகக் காத்துக் கிடக்கிறேன். இந்த அரை மணி நேரத்தானா பெரிது? போ. தைரியமாய்ப் போய் வா'' கரிசனமும் கண்டிப்புமாகப் பேசி அவளை அனுப்பி வைத்தானா, ரகுபதி.

[illegible] அரை மணி நேரம் கூட அவளால் [illegible] இருக்க முடியவில்லை. உடம்பு சரியில்லை என்று கூறி வகுப்பிலிருந்து கிளம்பி வந்து விட்டாள், அனுபமா.

[illegible] கூறியிருந்தபடி, காபிக் கடையில் ரகுபதி [illegible], அங்கே காபி ஆற்றுகிறவனிடம் ஏதோ [illegible].

அவளது நிலைமைக்கு அப்போது சற்றும் பொருந்தாத அந்தச் சிரிப்பினால் இரண்டாம் முறையாக அவளுக்கு உறுத்தல் ஏற்பட்டது.

ஆனால் உடனே அதற்காகத் தன்னையே கடிந்து கொண்டாள். அவன் ஏன் சிரிக்கக் கூடாது? அவளுக்குக் கஷ்டம் என்றால் அதற்காக அவனும் உம்மணாமூஞ்சி ஆகிவிட வேண்டுமா? முதலில் அவளது துன்பம் என்ன என்பதே அவனுக்குத் தெரியாதே.

அவள் தயக்கமும் கலக்கமுமாக நிற்கையிலே, காபி ஆற்றுகிறவன் ரகுபதியிடம் ஏதோ கூற, அவனும் சட்டெனத் திரும்பிப் பார்த்துவிட்டு, அவசரமாக எழுந்து வந்தான்.

தம்ளரில் பாதி காபியை மீதி வைத்துவிட்டு அவன் விரைந்து வரவும் அவளுக்கு மனம் உருகிவிட்டது. அவன் அருகில் வந்ததும், ''காபியைக் குடித்து முடித்துவிட்டே வந்திருக்கலாமே'' என்றாள் மெதுவான குரலில்.

''என்னம்மா நீ? நீ ஏதோ கவலையில் இருக்கிறாய், எனக்குக் காபி தொண்டைக்குள் இறங்குமா? ஏதோ, நீ வரும்வரை நேரம் போக்குவதற்காகத் தான் காபி வாங்கினேன்'' என்று ரகுபதி கூறவும் அனுபமாவுக்கு மேலும் உள்ளம் பாகாய் உருகியது.

''சொல்லு அனும்மா, என்ன விஷயம்? இங்கேயே சொல்லுகிறாயா? அல்லது அந்தப் பூங்காவுக்குள் போய்விடலாமா? இருக்கிற கெட்ட நேரத்தில் கல்லூரி ஆசிரியை யார் கண்ணிலும் ரகுபதியோடு பேசிக்கொண்டு இருப்பது பட்டு அதுவேறு ஆபத்தாகிவிடக் கூடாது என்று எண்ணி அவனோடு பூங்காவுக்குள் சென்றாள் அனுபமா.

ஒரு மரத்தடியில் அமர்ந்தனர்.

சில வினாடிகள் பேசாமல் இருந்த அனுபமா திடீரென்று

கேட்டாள். ''ரகுபதி நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே, வந்து.... வீட்டை விட்டு வெளியேறி உங்களோடு வந்துவிடும்படி அழைப்பீர்களே, அது உண்மைதானே. வெறும் வெற்று வார்த்தைகள் அல்லவே? இப்போது நான் அப்படி வந்துவிட்டால் என்னைக் கைவிட்டு விடமாட்டீர்களே?''

வியப்பும் பிரமிப்புமாக வாயைப் பிளந்தான் ரகுபதி.

ஆறு மாதங்களாக அவள் பின்னோடு அலைந்து, கெஞ்சிக் கூத்தாடி, இது பயனற்ற முயற்சியாக முடிந்து விடப்போகிறது என்று கிட்டத்தட்ட அலுத்துச் சலித்துப் போய் விட்டுவிடலாமா என்று யோசிக்கத் தொடங்கியிருந்த அவனுக்கு முதலில் அனுபமாவின் பேச்சை நம்பக்கூட முடியவில்லை.

ஆனால் அவளது விழிகளில் இருந்த தீவிரத்தை உணர்ந்ததும் அவசர அவசரமாக, ''உண்மைதான். உண்மையேதான்'' என்று அடித்துச் சொன்னான்.

அவ்வளவு நேரம் இறுகிப் போயிருந்த அனுபமா ஓர் ஆறுதல் பெருமூச்சுடன் மரத்தண்டின் மேல் சாயவும், அதற்கு மேல் விவரம் கேட்டான் அவன்.

வீட்டில் நடந்ததை அவள் சுருக்கமாகக் கூறி முடித்தாள்.

சுருக்கிடாமல் கவனத்துடன் கேட்டிருந்தவன், அதற்குமேல் அனாவசியப் பேச்சுகளில் நேரத்தை வீணடிக்காமல், மேற்கொண்டு செய்ய வேண்டியதைத் திட்டமிடத் தொடங்கினான்.

அவன் சொன்ன நள்ளிரவுப் புறப்பாடு திகிலூட்ட, ''அதை [illegible] கல்லூரிக்கு வருவது போல வந்து அப்படியே [illegible]மே'' என்றாள் அனுபமா.

''யோசிக்காமல் பேசாதே, அனுபமா'' என்று கடிந்தான் ரகுபதி. உடனே குரலில் குழைவைப் பூசி, ''பகலில் ஒன்று [illegible]ருக்கும். அடுத்து மக்கள் வேலை, வேடிக்கை என்று [illegible] அலைகிற நேரம். யாராவது உன் சித்தி,

சித்தப்பாவுக்கு வேண்டியவர்கள் பார்த்துத் தொலைத்துவிட்டால் அப்புறம் உன் கதி என்ன ஆகும்? அந்தக் கிழவன் வீட்டில்.... என்று இழுத்தான்.

அதற்குமேல் அனுபமா மறுப்பாளா, என்ன? அவள் தலையாட்டவும் அவன் மேலும் தொடர்ந்தான்.

''ஒரேயடியாக உற்சாகம் போலக் காட்டிக் கொள்ளாதே, அனுபமா. உன் சித்தி சித்தப்பாவுக்குச் சந்தேகம் வந்துவிடும். ஏதோ, என் தலைவிதி என்பது போலச் சற்று வாடினாற்போலவே முகத்தை வைத்துக்கொள். நான் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதுவரை இந்த உபகாரச் சம்பளப் பணத்தை வாங்குகிற நாடகத்தையே நடித்துக்கொண்டிரு. அப்போது தான் கிளம்புகிற நாள் போன்ற விவரமெல்லாம் உன்னிடம் சொல்ல முடியும்.''

நெஞ்சு படபடக்கத் தலையாட்டினாள் அவள்.

''துணிமணி என்று அதிகம் வேண்டாம். இரண்டு சேலை எடுத்து வைத்துக் கொள். போதும் அப்புறம்..... அன்னிக் கண்ணு, அந்தக் கிழவன் ஏதோ நகை வேறு கனமாய்ப் போட்டதாகச் சொன்னாயே. அதையும் எடுத்து வந்துவிடுகிறாயா? அந்த வில்லர்களுக்குச் சரியான தண்டனையாக இருக்கும்'' என்று சிரித்தான் ரகுபதி.

முகத்தில் வெறுப்பு படர, ''சீச்சி, அதை நான் விரலால் கூடத் தொடமாட்டேன்'' என்று அவள் அறிவிக்கவும், அதற்குமேல் அவளை வற்புறுத்தவில்லை அவன். ''போகிறது விடு. உன் சித்தியின் பேராசைக்கு அடி கொடுத்தாற்போல் இருக்குமே என்று பார்த்தேன். மற்றபடி அந்த நகை நமக்கு எதற்கு? நீ என்னோடு வருவதே கோடி ரூபாய் மூலதனம் என்னோடு வருவது போல'' என்று உணர்ச்சி பொங்கக் கூறவும் அவள் அமைதியுற்று அவனை நோக்கி முறுவலித்தாள். பெரும் துன்பத்திலிருந்து தப்பிவிடப் போகும் நிம்மதியோடு, இருளின் போர்வையில் அன்றைய நிகழ்ச்சிகளை அசை போட்ட அனுபமாவுக்கு அன்று மூன்றாவது தடவையாக மனதில் உறுத்தியது.

ரகுபதி ஏன் அவளைக் கோடி ரூபாய் மூலதனம் என்று சொல்ல வேண்டும்? அவள் அவனோடு வருவது சொர்க்கமே வருவதுபோல என்று கூறியிருக்கலாமே. அதைவிட்டுப் பணம் வருவது போல என்றது அவளைக் கலங்கச் செய்தது.

கூடவே இன்னொன்றும் தோன்றியது. அவளுக்குத்தான் கஷ்டப்பட்டு கஷ்டப்பட்டு பழக்கமாகிவிட்டதால் நல்லதில்கூட அல்லலையே காணத் தோன்றுகிறதோ?

ஏதோ, கிடைப்பதற்கு அரிய பொருளாய் அவளை எண்ணுகிறான். அதைக் கோடி ரூபாய் என்றால் என்ன? கொண்டாடும் சொர்க்கம் என்றால் என்ன? எல்லாம் ஒன்று தான் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு, ஒருவாறு அமைதி பெற்று உறங்கத் தொடங்கினாள், அனுபமா.

3

''அனுப்பூ.... கண்ணு, அனுப்பூ' என்று குழைவும் கொஞ்சலுமாகத் தனபாக்கியம் அழைப்பது கேட்கவும் அனுபமா [illegible] பற்றிக்கொண்டு வந்தது.

[illegible] தாயார் மதுரவல்லி வங்க எழுத்தாளர் [illegible] ரசிகை. அவரது படைப்புகளில் ஒன்றின் [illegible] பெயரையே ஆசைமகளுக்குச் [illegible]

இந்தாடி, ஏய், தண்டம் என்பன போன்ற வார்த்தைகளா லேயே அவளை அழைத்துப் பழகியிருந்த தனபாக்கியத்துக்கு அவளது உண்மைப் பெயர் நினைவிருப்பதுகூட ஆச்சரியம் தான். அதற்குமேல் பலபடி போய், 'அனுப்பூ அனுப்பூ' என்று கொஞ்சுவது போல அந்த அழகிய பெயரைக் கொலை செய்கையில் அனுபமாவுக்கு எரிச்சல் உண்டானதில் வியப் பில்லை. ஆயினும் உள்ளூர இருந்த வெறுப்பையோ கோபத் தையோ வெளிக்காட்டுவது நல்லது அல்ல என்பதை உணர்ந்தி ருந்ததால், முகத்தில் எந்தவித மாறுதலையும் காட்டாமல் முன்னறைக்குச் சென்றாள்.

முன்னறையில், ஓணான் போலத் தலையை நீட்டி உள்பக்க மாக ஆவலோடு நோக்கியபடி அமர்ந்திருந்த கிழட்டு மனவா ளனை அவரது பெயரும் அதுதான். அழகிய மணவாளப் பெருமாள் - கண்டதும் அவளது கால்கள் தானாகவே 'பிரேக்' போட்டது போல நின்றன.

ஒரு சின்ன முறுவல் செய்வதுகூட ரகுபதி சொன்னது போல அதிகப்படியாகவும் தோன்றிவிடலாம் என்பதோடு அது அடியோடு முடியாத காரியமாகவும் பட்டது.

ஆனால் அதே சமயத்தில், அவள் விரும்பியது போலத் திரும்பிச் சென்று விடுவது கூட அவர்களை குறைந்த பட்சம் சித்தியை உஷார்ப்படுத்திவிடக்கூடும் என்று தோன்றவே அப்படியே நின்றாள் அவள்.

அதற்குள்ளாக அவள் கையைப் பார்த்துவிட்டு,

''அய்யோ, அய்யோ, மாவாடி ஆட்டினே? எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். உன் பூப்போலக் கையெல்லாம் புண் ணாகிப் போகும் கண்ணு, இதுபோல வேலை செய்யாதே செய்யாதேன்னு?'' என்று நாக் கூசாமல் புளுகினாள் தனபாக்கி யம்.

பூப்போலக் கைகளா? பத்து ஆண்டுகளாகப் பாத்திரம்

துலக்கி, துணி துவைத்து, மசாலா அரைத்து, மாவாட்டி.... சருமத்தில் தெரியாதிருக்குமா? உடைந்த நகங்களும், சொர சொரப்பான உள்ளங்கையும் விரல்களும், அங்கங்கே சிறு காய்ப்புகளும் காண்போருக்கு உண்மையைச் சொல்லாவா?

இது போல வேலை செய்யாதே என்றாளாமே! அன்றுகூடக் ''கல்யாணம் முடிவாயிட்ட வீடு. சாயந்திரமானா யாராவது விசாரிக்க என்று வருவார்கள். அவர்கள் முன்னால் நீ மாவு ஆட்டிக்கொண்டிருந்தால் நன்றாக இராது. அதனாலே இப் போதே ஆட்டிவிடு'' என்று தனபாக்கியம் ஏவினதால் அல்லவா மூன்று மணிக்கே மாவு ஆட்டத் தொடங்கினாள் அனுபமா!

விஷயம் இப்படி இருக்க என்ன இலகுவாகப் புளுகுகிறாள் இந்தச் சித்தி!

உள்ளூரப் பொறுமியபடி முகம் மாறாமல் அப்படியே நின்றாள் அனுபமா.

பெண் ஏதும் பேசப்போவது இல்லை என்கிற தைரியத்தில் தனபாக்கியத்தின் கற்பனை சிறகடித்துப் பறந்தது.

''பாருங்கள் மாப்பிள்ளை, அப்பன் ஆயி இல்லாத பொண்ணு, அதுவே எனக்கு ஒரு பரிதாபம். எங்களுக்கும் வேறே குழந்தை குட்டி என்று இல்லையா, இவளே மகள் மாதிரி தீர்மானித்து விட்டோம். ஒரு துரும்பை எடுத்து இந்தப் பக்கம் அந்தப் பக்கம் போடச் சொல்லியிருப்பேனா? ஒரு வேலை செய்யவிட மாட்டேனே. ஆனால் இவளுக்கும் பாச மானகுதான். எல்லாம் சித்தியே செய்யணுமே என்ற வருத்தம். [illegible] இதைப் போல ஏதானும் இழுத்துப் [illegible] கொண்டு செய்து உடம்பைக் கெடுத்துக் கொள் [illegible] மகம்....'' என்று உதட்டைப் பிதுக்கி, தோளைக் [illegible] பெருங்கால மருமகனிடம் ஏகமாய் அங்கலாய்த்துக் [illegible]

''ஹிஹிஹி....'' என்று வழிந்தார் வந்தவர். ''இருக்கட்டும், இருக்கட்டும், எல்லாம் எத்தனை நாள்? எண்ணிப் பத்து நாள்தானே. அப்பப்போ ஏதாவது கூடமாட ஒத்தாசை செய்வதில் தப்பில்லை. இப்போது...'' என்று அவர் ஏதோ சொல்லத் தொடங்குமுன் குறுக்கே விழுந்து பேசினாள் தனபாக்கியம்.

''கூடமாட ஒத்தாசையா? விடுவேனா? விடமாட்டேன் என்பதால் எனக்குத் தெரியாமலே அத்தனை வேலையும் செய்து முடித்து விடுவாள். அவ்வளவு பாசம். அது மட்டும் இல்லை. ஒரு நகை, நல்ல துணி என்றால் நான் போடாமல் தான் மட்டும் மாட்டிக்கொள்ளவே மாட்டாள். நீங்கள் அன்றைக்குக் கொடுத்த சங்கிலியைக்கூட அப்படித்தான் போடவே மாட்டேன் என்று உள்ளே வைத்து விட்டாள். எனக்கு அது மாதிரி இல்லையாம். அதனாலேயே அந்தப் பட்டையும் கட்டமாட்டாளாம். இந்த கோராமையை எங்கே போய்ச் சொல்லட்டும்?'' என்று புலம்பியபடியே புதுமாப்பிள்ளையின் முகத்தை ஓரக் கண்ணால் நோட்டம் விட்டாள் அவள்.

அங்கே கலக்கத்தைக் காணவும், ''ஏண்டி கண்ணு, அப்படித் தானே?'' என்று மகளிடம் கேட்டாள்.

அந்த எண்ணிப் பத்தே நாளில் பெரிதும் கலங்கிப் போயிருந்த அனுபமா சித்தியின் பேச்சைக் கவனிக்கவே இல்லை.

இன்னும் இருப்பவை பத்தே தினங்கள். அதற்குள் ஏதாவது ஒரு திட்டமிட்டு இந்த வீட்டை விட்டு அனுபமா வெளியேறி ஆக வேண்டும். ஆனால் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கூறிப் பிரிந்து சென்ற ரகுபதி அதன்பின் அவள் கண்ணில் படவே இல்லை.

மெய்யாகவே அவர்களது பிற்கால வாழ்க்கைக்கான ஏற்பாடுகள் ஏதும் செய்து கொண்டு தான் இருக்கிறானா அல்லது சும்மா பொழுது போக்கிற்காக 'ரோடு சைடு ரோமியா' வாக அவள் பின்னே அலைந்தவன் அவளது நிலைமை அறிந்ததும் சுமை ஏற்க மனமின்றித் தலைமறைவாகி விட்டானா?

அப்படி அவன் ஓடிவிட்டிருந்தால் இனி அவள் கதி என்ன? இந்த... இவனோடு... சிக்கி அதை விடக் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்வது மேல்.

இருபது வயதில் உயிரை விடுவது என்பது அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் அவளது ஆசைக் கனவுகளில் ஒன்றுகூட நிறைவேறாமல் சாவதா என்று ஒரு வேதனை; அதைவிடவும், சாக முயன்று முடியாமல் அரை உயிராய்ப் பிழைக்க நேர்ந்துவிட்டால்? மேலே நினைக்கவே அவளுக்குப் பயமாக இருந்தது.

திடுமெனச் சித்தி அவளை நோக்கி ஏதோ கேட்கவும் என்னவென்று புரியாமல் திகைத்து விழித்தாள் அனுபமா.

ஆனால் தனபாக்கியத்தின் கண்களில் கடுமை, ஏறவும், அதற்குமேல் என்ன ஏது என்று யோசிப்பதை விடுத்து, ''ஆ...ஆமாம்... சித்தி'' என்று சிற்றன்னைக்கு ஒத்து ஊதிவிட்டாள்.

'அப்படிச் சொல்லு' என்கிற பாவனையில் மகளைப் பார்த்துவிட்டு, மீண்டும் விருந்தாளியிடம் திரும்பினாள் பெரிய மனுஷி. ''பார்த்தீர்களா? உங்கள் முன்னாலேயே என்ன பொய்சொல்லுகிறாள் என்று கேட்டீர்களா? தாய்க்கும் மேலா வளர்த்து விட்டேன் இல்லையா? அதனாலே சித்திக்கு இருப்பதுபோது தான்மட்டும் பட்டும் நகையுமாக அணிந்து கொள்ளவா முடியவே முடியாது என்று அடம்பிடிக்கிறாள். அவளிடம், நான் என்ன பண்ணட்டும்? ஒன்று சொன்னால் நூறு பிடியாய் நின்று விடுவாளே!'' என்று புலம்பியபடியே ஓரக் கண்களால் மீண்டும் மணமகனின் முகத்தை நோட்டம் விட்டாள்.

சித்தி போகிற 'ரூட்' அப்போதுதான் புரிய உளம் குன்றினாள் அனுபமா.

ஆனால் வந்த மனிதனும் தினறுவதைக் கண்டதும் உள்ளூர ஒரு திருப்தியும் உண்டாயிற்று. முக்கால் கிழமான பிறகு சின்னப் பெண் தேடுகிறவன் கொஞ்சமேனும் கஷ்டப்பட வேண்டாமா?

சற்று தினறிவிட்டு பேரம் பேசத் தொடங்கினார் பெருமாள். ''பாருங்கள், ஏதோ இரண்டு சேலை என்றால் பரவாயில்லை. தரலாம். நகைகிகை என்று வந்தால் சரிப்படாதே...''

தனபாக்கியமும் விடுகிறவள் அல்ல. வீட்டுப் பெண்ணின் மீது கிழவன் கொண்ட மோகத்தில் முழுமையாக லாபம் காண விரும்பினாள்.

விடாக்கண்டன் கொடாக்கண்டன் கதைதான்.

இந்த இழுபறியைக் கேட்டு அறுவருப்புற்றவளாக, ''சித்தி, கையில் மாவு காய்கிறது'' என்று காட்டி உள்ளே செல்ல நகர்ந்தாள் அனுபமா.

தனபாக்கியத்துடன் பேரம் பேசியபடியே அவ்வப்போது அவளைக் கண்களால் விழுங்கிக் கொண்டிருந்த மணவாளப் பெருமாளுக்குத் தாங்க முடியவில்லை. ''ஒடிப் போய்க் கையைக் கழுவிக் கொண்டு வந்துவிடு, கண்ணு. நான் கார் கொணாந்திருக்கேன். ரெண்டு பேரும் ஜோடியாய்க் கடைக்குப் போய், முகூர்த்தப் பட்டு, முதல் இராத்திரி சேலை எல்லாம் உனக்குப் பிடித்ததாய், உனக்குப் பொருத்தமாய் உடம்பு மேலே வைத்துப் பார்த்து வாங்கி வரலாம்'' என்று குழைந்து வழிந்தார்.

''அனுப்பூ என்னை விட்டு விட்டுத் தனியே எங்கும் வராது'' என்றாள் தனபாக்கியம் பெருமையாக. அதேசமயம் பெண்ணுக்குப் பேச வேண்டிய விதத்தை உணர்த்தி, ''அத்தோடு

கல்யாணத்துக்கு முன்னே மாப்பிள்ளைகூடப் பெண்ணை அனுப்புகிறது எங்களுக்குப் பழக்கம் இல்லை'' என்று எடுத்துக் கொடுத்தாள்.

வாழ்வில் முதல் தடவையாகச் சித்திக்கு உள்ளூர நன்றி தெரிவித்தாள் அனுபமா. உள்ளிருந்தபடியே, ''எனக்குப் பார்த்து வாங்கத் தெரியாது, சித்தி. அதனால் வேண்டியதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். நான் மாவைப் பார்க்கப் போகிறேன். இல்லாவிட்டால் அதில் பூச்சி கீச்சி விழுந்துவிடும்'' என்று மெல்லிய, ஆனால் தெளிவான குரலில் கூறிப் பின்புறம் ஆட்டுக்கல்லின் பக்கம் சென்று ஒதுங்கிக் கொண்டாள்.

அப்போதும் சித்தி சேலை மாற்றச் சென்ற போது வீட்டு மனிதன் போல உள்ளே வந்து அவளை வெறித்துப் பார்த்தபடி நின்றபோது, அவளுக்கு ஏகுபதி மறுநாளே அவளை அழைத்து சென்றுவிட மாட்டானா என்று இருந்தது.

நூரப் போ என்று சொல்லவும் முடியாமல், அங்கிருந்து விலகி எங்கும் செல்லவும் இயலாமல் அருவெறுப்பும் வெறுப்புமாய் அவள் தவிக்கையில், சேலை மாற்றிக் கொண்டு வந்து சேர்ந்தாள் தனபாக்கியம். ''அட, கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டு போய் விடப்போகிறது. இன்னும் பத்து நாளில் உங்கள் வீட்டுக்கு வந்துவிடப் போகிறவள். அப்புறம் அவளை ஆசை தீர என்ன வேணுமின்னாலும் செய்யுங்க [illegible] போது வாருங்கள், கிளம்பலாம்'' என்று இன்னமும் [illegible] பிரசமாகக் கேலி செய்தபடி, அவரைக் கையைப் பிடித்து [illegible]முழுத்துச் செல்லாத குறையாக அவள் அழைத்துச் [illegible]கையில் அனுபமாவின் உடம்பு பதறியது.

[illegible] நேரத்தில் மட்டும் ஏகுபதி வந்திருந்தால் போட்டது [illegible] அவனோடு கிளம்பிச் சென்றிருப்பாள்.

[illegible] அவளை அழைத்துச் செல்லப்போகும் இடம் எது?

அங்கே இருவரும் வயிறு வளர்ப்பது எப்படி? என்று எல்லா விவரங்களையும் முதலிலேயே நன்றாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணியதெல்லாம் அன்றைய நிலையில் அடியோடு மறந்து போயிற்று.

முதலில் இங்கிருந்து வெளியேறியாக வேண்டும். இந்தக் கொதிக்கிற எண்ணைக் கொப்பரைக்குத் தப்பி எங்காவது சென்றே ஆக வேண்டும். அது என்ன எங்கே என்பதெல்லாம் சென்றபிறகு பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். 'காப்பாற்றப்பா' என்று கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டியதுதான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்....

அவளை மேலும் இரண்டு நாட்கள் கலங்க வைத்த பின்னர், ஒருவாறு தரிசனம் தந்தான் ரகுபதி.

பஸ் நிறுத்தத்துக் கூட்டத்தை லட்சியமே செய்யாமல், ''ரகுபதி!'' என்று அவனிடம் ஓடிச் சென்றாள் அனுபமா.

ஆனால் வழக்கத்துக்கு மாறாகச் சுற்றுப்புறச் சூழலுக்கு மதிப்புக் கொடுத்தான் அவன். அவளை அறியாதவன் போல எங்கோ பார்த்தபடி, 'அரை மணி நேரம் கழித்து பூங்கா மரத்தடிக்கு வா' என்று முணுமுணுத்துவிட்டு காபி 'பங்க்'கை நோக்கி நடந்தான்.

அடுத்த முப்பது நிமிடங்களையும் நெட்டித் தள்ளிவிட்டு, ஓடோடிச் சென்று அவளைச் சந்தித்தாள் அனுபமா. ''நாலு நாட்களாக உங்களைக் காணாமல் பயந்தே போனேன், ரகுபதி,'' என்றாள் குரல் நடுங்க.

''எதற்காகப் பயப்பட வேண்டும்? நான்தான் ஏற்கனவே சொன்னேனே. சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும்என்று. இதோ பார்த்தாயா?'' என்று இடது கையை நீட்டிக் காட்டினான் ரகுபதி.

இன்னதென்று வரையறுக்க முடியாதபடி அவன் குரலில்

தெரிந்த மாற்றம் அவளை உறுத்த, அதைப்பற்றிக் குழம்பியபடியே அவனது நீட்டிய கரத்தைப் பார்த்தவளுக்கு அங்கே எதுவும் புரியவில்லை.

''எ.... என்ன?'' என்று அவள் விசாரிக்கவும் அவன் முகம் கடுத்தது.

''இதோ இங்கே பார்' என்று கை மணிக்கட்டை வலது கையால் தொட்டுக் காட்டினான். ''முன்னெல்லாம் இங்கே ஒரு கைக்கடிகாரம் இருந்தது. எப்படி எப்படி முயற்சி செய்தும் மொத்தமாய்ப் பணம் பெயரவில்லை. நீயும் அங்கிருந்து பைசா கொண்டுவர முடியாது என்று சொல்லிவிட்டாய். எவ்வளவு சிக்கனமாகச் செலவு செய்தாலும் ஆயிரம் ரூபாயாவது இல்லாமல் முடியுமா? அதனால் கைக்கடிகாரத்தை விற்று சமாளித்தேன்.''

பாகாய் உருகி அவனது இடது கையைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள் அனுபமா. ''சாரி, ரகுபதி. நான் அங்கே பட்ட கஷ்டத்திலேயே உழன்று கொண்டு இருந்தேனா? உடனே கண்டு கொள்ளத் தெரியவில்லை. ரொம்பவும் சாரி. ஆனால், நூற்று மட்டும் உறுதி, நான் என்னால் இயன்ற மட்டும் உழைத்து உங்களது இழப்புகளை ஈடுபோல் ஈடுகட்டிவிடுவேன்'' என்றாள் கண்களில் கசிவுடன்.

''நீ இந்த வார்த்தை மறக்காமல் இருந்தால் போதும்'' என்று அலட்சியமாய் அதற்கு மேல் வேறு பேசாமல் தன் திட்டத்தை விளக்கினான்.

''முதலில் நாம் வயிறு வளர்ப்பதை நன்றாகக் கவனித்துக் கொள் அனுபமா. அப்புறம் குழந்தை பிறந்தபின் சொல்லிக் கொண்டிருக்க நேரம் இல்லை. அதற்குள் உன் வீட்டார் யாராவது பார்த்து விட்டாலும் ஆபத்து. அதனால் ஒரே தடவையில் புரிந்து கொள்ள வேண்டியது. இன்றிரவு... எதற்கும் இன்னொரு நாளும் இடம் கொடுத்து பார்ப்போம். இன்றைக்கு அப்படி இன்றிரவு

முடியாமல் போனால் நாளை இரவுபன்னிரெண்டு மணிக்கு மேல் நீ வீட்டை விட்டுக் கிளம்ப வேண்டும். உன் சித்தப்பா சித்தி இருவரும் அயர்ந்து உறங்குகிறவர்கள் தானே? இல்லையென்றால் தூக்க மாத்திரை தருகிறேன். அவர்கள் சாப்பாட்டில் எப்படியாவது கலந்துவிடு'' என்று கூறியபடி சட்டைப் பைக்குள் கைவிட்டான் ரகுபதி.

''வேண்டாம், அவசியமிராது'' என்று மறுத்தாள் அனுபமா. ''சித்தி சித்தப்பா இரண்டு பேருமே படுத்தால் கட்டையாய் நீட்டிவிடுகிற ரகம். இருவரும் போட்டி போட்டுக் கொண்டு விடுகிற குறட்டையால் எனக்குத்தான் தூங்க முடியாது'' என்று இலகுவாகப் பேச முயன்றாள் அனுபமா.

''ரொம்பவும் நல்லது. பன்னிரண்டு மணிக்கு மேல் வீட்டை விட்டு வெளியேறி வலப்புறமாய் நட. தெரு முனை தாண்டியதும் இடது பக்கம் முதல் சந்தில் ஆட்டோவோடு காத்திருக்கிறேன். ஆட்டோவில் ஏறி விட்டாயானால் அப்புறம் உனக்கு அந்த வீட்டுக் கஷ்டம் அத்தோடு தீர்ந்தது'' என்றான் அவன்.

அந்த வீட்டுக் கஷ்டம் மட்டும்தானா? உன் துன்ப காலம் அத்தோடு தீர்ந்தது என்று இவன் ஏன் சொல்லவில்லை?

ஆனால் கைக்கடிகாரம் வரை அதுதான் அவனது ஒரே சொத்தாகக்கூட இருக்கக்கூடும். அதைக்கூட அவளுக்காக விற்றிருப்பவனிடம் நன்றி இல்லாத்தனமாக எதையும் கேட்க மனம் இன்றித் தலையை மட்டும் ஆட்டி வைத்தாள் அவள்.

ஒரு வினாடி மவுனத்தின் பின், ''முதலில்...'' என்று எதையோ கேட்க அவள் வாயெடுத்தபோது கையை உயர்த்தி அவளது பேச்சை நிறுத்தினான் ரகுபதி. ''அனுபமா, இப்போது தான் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம். வாந்தியில் கறுப்பாக ஏதோ விழுந்தது என்பதைக் காக்காய் காக்காயாய் வாந்தி எடுத்ததாகச் சொல்கிற உலகம் இது. நாம் இருவரும் தனியே பேசிக் கொண்டு இருப்பதை

யாராவது பார்த்து, சும்மா சொன்னாலே ஆபத்து. அதை மிகைப்படுத்தி வேறு உன் சித்தி காதில் போட்டு விட்டால், முக்கால் கிணறு தாண்டிய கதையாய் எல்லாம் வீணாகிவிடும். அறைக்குள் அடைத்துப் போட்டுக் கையைக் காலைக் கட்டியாவது உன்னை அந்தக் கிழவனிடம் ஒப்படைத்துவிடுவார்கள். அதனால் நாம் உடனே பிரிந்து சென்றுவிடுவதுதான் நல்லது. இரவு தூங்கி விடாதே. கவனமாகயிரு. வருகிறேன்'' என்று விரைந்து விலகிப் போனான்.

வீட்டை விட்டு வெளியேறுவது இவ்வளவு எளிதாக இருக்கக்கூடும் என்று அனுபமா எதிர்பார்க்கவே இல்லை.

ஒரு சூட்டுக் கோலுக்கு அஞ்சி, இந்த மாதிரிக் கல்யாணத்தை எதிர்ப்பே இல்லாமல் அனுபமா ஏற்றுக் கொள்வாள் என்று நினைத்த சித்தியால் எப்படி நம்ப முடிந்தது என்று ஆச்சரியமாய் இருந்தது அவளுக்கு.

சிறு வயதில் இருந்து அவளுக்கு அனுபமா பணிந்து போவது பழக்கம் தான். அதிலும் சூட்டுக் கோலைக் காட்டி மிரட்டினால் அவள் மண்டியிடுவாள் என்றாலும் கூட இது பெரிய விஷயம் இல்லையா?

[illegible] வேறு போக்கிடம் இல்லாதவள் என்பதால் [illegible] சியமாக இருக்கக்கூடுமோ?

[illegible], சித்தி சித்தப்பாவின் அலட்சியம், அல்லது [illegible] அவளுக்கு துணை செய்ய எந்தவிதத் தடங்கலும் [illegible] வீட்டை விட்டு வெளியேறிச் சென்று, ரகுபதி [illegible] ஆட்டோ ரிக்ஷாவில் ஏறிக் கொண்டாள் [illegible]

[illegible] முன்னாலேயே சொல்லி வைத்திருப்பான் [illegible] அடுத்து ரகுபதி ஏறியதும் ஆட்டோ [illegible]

தப்பிவிட்ட ஆனந்தத்தைச் சற்று நேரம் கண்மூடி அனுபவித்தவள் ரகுபதி பக்கம் திரும்பினாள்.

இப்போது எங்கே போகிறோம், இருவருக்கும் எங்கே திருமணம் நடக்கப் போகிறது? எப்போது? குடித்தனம் எங்கே?.... அச்சத்தினாலும் கவலையினாலும் அடங்கிக்கிடந்த கேள்விகள் முட்டி மோதிக் கொண்டு கிளம்பின.

ஆனால் பேசுவதற்காக அவள் வாயைத் திறக்கவும், ரகுபதி உதட்டில் ஒரு விரலை வைத்து எச்சரிக்கை செய்து மறுகையால் ஆட்டோ ஓட்டியின் முதுகைச் சுட்டிக் காட்டினான்.

அதுவும் சரிதான்.

சிரமப்பட்டு ஆர்வத்தை அடக்கிக் கொண்டாள் அனுபமா.

முடிவே இல்லாத பயணம் போல் வெகு நேரம் ஓடியபின் ஆட்டோ, அழுது வடிந்துகொண்டிருந்த ஒரு பெரிய கட்டிடத்தின் முன் நின்றது. அவ்வளவு பெரிய கட்டிடத்துக்கு மிகவும் குறைவான அளவு விளக்குகள் சற்று இருண்ட குகை போன்ற தோற்றத்தைக் காட்டின.

ஒண்டுக் குடித்தனமா? உள்ளே எத்தனை குடும்பங்கள் வசிக்கின்றனவோ! அது பரவாயில்லை. ஆனால் எப்போது திருமணம்?

பையைத் தூக்கிக் கொண்டு இறங்கி, ரகுபதியிடம் ஒண்டிய படியே அவனோடு நடந்தாள் அனுபமா.

''சற்று பொறு. இதோ வருகிறேன்'' என்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான் ரகுபதி.

கதவைத் திறந்ததும் உள்ளிருந்த வந்த வெளிச்சம் அவளுக்கு வியப்பூட்டியது. என்ன இது என்று விழிகளைச் சுழலவிட்ட போது ''வாடகைக்கு வசதிமிக்க அறைகள் கிடைக்கும்'' என்று எழுதப்பட்டிருந்த போர்டு கண்ணில் படவும் குழப்பமுற்றாள்.

அப்படியானால் இது வீடல்லவா? ரகுபதி அவளை ஏன் இங்கே அழைத்து வந்திருக்கிறான்?

''க்குகும்.... என்று யாரோ தொண்டையைச் செறுமும் சத்தம் கேட்கவும் திரும்பிப் பார்த்தாள்.

கீழ் உதட்டில் லேசான பிதுக்கலுடன் அவளை ஏளனமாகப் பார்த்தபடி ஒரு நெட்டையான மனிதன் அவள் பின்னே நின்று கொண்டிருந்தான்.

அந்த நெடியவனின் பார்வையில் இருந்த ஏளனம் அவளது மனதில் சுருக்கெனத் தைத்தது.

4

[illegible]ரோ ஓர் இளைஞன்.

[illegible] அவனுக்கு அவன் அறிமுகமானவன் இல்லை.

[illegible] அறிந்திராத அவளை அவன் ஏன் அவ்வளவு ஏளனமாக நோக்க வேண்டும்?

[illegible] அவளது உடைகளில் இருந்த ஏழ்மை அவனுக்கு நியாயகாரமாகத் தோன்றுகிறதோ?

[illegible] பொருட்களைப் பற்றி அதிகம் அறிந்திராத [illegible] அவனுக்குக்கூட அவனது உடைகளின் நேர்த்தி [illegible] புரிந்தது.

ஆனால் அதற்கென்ன வந்தது. அவனிடம் பணம் இருக்கி றது; விலை உயர்ந்ததை வாங்கி அணிகிறான்; அவளிடம் இல்லை, சாதாரண நூல் சேலை அணிகிறாள். இதில் இளப்பத்திற்கு என்ன இருக்கிறது?

தன்னையறியாமல் தலை நிமிர்ந்துவிட, ''எ... என்ன'' என்று சற்று மிடுக்காகவே வினவினாள் அனுபமா.

அவனது லேசான தலையசைப்பில் இகழ்ச்சி நன்றாகவே வெளிப்பட்டது. மறைக்கும் முயற்சி ஏதும் அவன் செய்யவும் இல்லை. ஒருதரம் தோளைக் குலுக்கி விட்டு, ''வழி... உள்ளே செல்ல வழிவிட்டால் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்'' என்றான் போலியான வினயத்துடன்.

தனது சொந்த மனக்குழப்பத்தில் வாயில் வழியில் நட்டந டுவே தான் நின்றுவிட்டதை அப்போது தான் உணர்ந்த அனுபமாவுக்கு குப்பென்று முகம் சூடாகிச் சிவந்து போயிற்று. இதில் அவன் தான் தவறிழைத்தவன் என்கிற பாவனையில் மிடுக்காக வேறு பேசி விட்டானே! ஆனாலும் அதற்காக இப்படி மட்டம் தட்டிக் காட்ட வேண்டுமா?

குன்றிப் போய் எழும்பாத குரலில், ''சாரி'' என்று முணுமுணுத்து விட்டு சட்டென நகர்ந்து அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கியபடி ரகுபதியை நோக்கி விரைவாக நடக்கத் தொடங் கினாள்.

நல்லவேளையாக அதே நேரத்தில் ரகுபதியும் திரும்பி அவளை நோக்கி வரவும் சற்று நிம்மதியுற்றவளாகப் புன்னகை செய்தாள்.

அவள் என்னதான் ஏழை என்றாலும் அவளுக்காகவே என்னை நேசிக்கும் ஒருவன் இருக்கிறான் என்பதை அந்தத் திமிர் பிடித்தவனுக்குக் காட்டி விடும் வேகத்தில் ரகுபதியை

நெருங்கி நின்று ஒரு நிமிர்வுடன் அவனைப் பார்த்தாள்.

ஆனால், தனது நீண்ட கால்களால் கிட்டத்தட்ட அறையைக் கடந்து 'லிப்டை' நெருங்கி தன் வருகைக்காக காத்து நின்ற அவனது கீழ்க் கண் பார்வையில் ஏளனம் சற்றும் குறைந்திராத தைக் காணவும், ஏனோ அனுபமாவின் மனம் சோர்ந்தது.

தொய்ந்த பார்வையைத் திருப்புகையில் ரகுபதியின் கையில் இருந்த சாவி தென்பட்டது. ஒரே ஒரு சாவி மட்டும் அவன் கையில் இருக்கவும் மீண்டும் மனம் கலங்கியது.

திருமணம் என்று ஆகுமுன் ஓட்டலில் ஒரே அறையில் எப்படித் தங்குவது? அது சரியில்லையே. வீடு என்றால் பரவாயில்லை. எப்படியும், எவ்வளவு சின்னதான வீடு என்றாலும் சமையல் பகுதி ஒன்று இருக்கும்....

அவளது தயக்கத்தையும் கலக்கத்தையும் கவனியாது, ஒர பெரிய தான அந்த ஹாலில், அந்த நள்ளிரவிலும் [illegible] அமர்ந்திருந்தவர்களை ஒருகணக்கிடுதலுடன் [illegible] விட்டுக் கொண்டிருந்தான் ரகுபதி.

[illegible] எப்படியும் செலவைப் பாராமல் இன்னொரு [illegible] சொல்லித்தான் ஆக வேண்டும்.

''ரகுபதி..'' என்று அவள் இரண்டாம் முறையாகச் சற்று [illegible] அழைக்கவும், கவனத்தை அவளிடம் [illegible], ''உம்... உம்... சரி வா போகலாம்'' என்று லிப்டை [illegible] திரும்பினான் ரகுபதி. அவள் அசையாமல் நிற்கவும், [illegible] வினவினான்.

[illegible] ப்புடன், ''வந்து... வந்து ரகுபதி... நீங்கள் [illegible] சாவிதானே...'' என்று அவள் தொடங்கவும் [illegible] திரும்பினான் அவன். ''ஆமாம் ஒரே சாவி [illegible]. என்னிடம் இருக்கும் பணத்துக்கு ஒரே

ஒரு அறைதான் வாடகைக்கு எடுக்க முடியும். ஒரே அறையில் ஒழுங்காக இருக்க முடியாதா? அவ்வளவுக்கு என்மேல் நம்பிக்கை இல்லை என்றால் சொல்லிவிடு. இப்போதே ஆட்டோ பிடித்து வருகிறேன். நீ உன் கிழட்டுப் பணக்காரனி டமே போய்க் கொள்ளலாம்'' என்று அவன் வெடுவெடுக்கவும் அவளது விழிகளில் குபுக்கென நீர் நிறைந்தது.

உதட்டைப் பற்களால் அழுத்தி, அழுகையை அடக்க அவள் வெகுவாகப் பாடுபட்டாள். அவனுக்குக் கோபமூட்டி விட் டோமே, மெய்யாகவே திருப்பி அனுப்பிவிடுவானோ என்கிற அச்சத்தையும்தான்.

அவளது முகத்தையே கவனித்தபடி சில கணங்கள் சும்மா நின்ற ரகுபதி மீண்டும் பேசியபோது அவன் குரலில் எரிச்சல் மறைந்திருந்தது. ''அனுக்கண்ணு, என்னம்மா நீ? என்னிடம் உனக்குச் சந்தேகமா? எவ்வளவு ஆபத்துக்கிடையில் உன் கிழட்டுப் பணக்காரனுக்குத் தெரிந்தால் அவனுக்குக் கையா லாகா விட்டாலும் ஆள்விட்டு என்னை அடித்து நொறுக்கி விட மாட்டானா? அதைக்கூடப் பொருட்படுத்தாமல் உருப்படி யாக இருந்த ஒரே கைக்கடிகாரத்தையும் தியாகம் செய்து உன்னை மீட்டிருக்கிறேன். என்னையே நீ நம்பவில்லை என்றால் எனக்கு எப்படி இருக்கும்?'' என்றான் குழைவுடன்.

சற்று தெம்புற்று, ''இல்லை....'' என்று அவள் திரும்பவும் தொடங்கினாள்.

அவள் தலையைத் தாண்டிப் பார்வையை அங்கு மிங்கும் செலுத்தி விட்டு, ''எதுவானாலும் அறைக்குள் வந்து சொல்லு அனும்மா. இங்கே மற்றவர் பார்வையில் இலவச நாடகம் போட வேண்டாம். என்ன?'' என்று ஒரு செல்லக் கண்டிப்பு டன் கூறி அவனது பையைத் தோளுக்கு மாற்றிவிட்டு, அவளது பையை அவளது கையிலிருந்து எடுத்துக் கொண்டு

திரும்பி நடக்கலானான்.

மேலும் நின்று அவனுக்கு எரிச்சலூட்ட மனமற்று, கூடவே அவனது பேச்சினால் விளைந்த நம்பிக்கையுடன் அவனைப் பின் தொடர்ந்தாள் அனுபமா.

'லிப்டு' இரண்டாவது தளத்தை அடைவதற்கு ஆன நேரம் மிஞ்சி மிஞ்சி ஒரு நிமிடம் இருக்கலாம். அதற்குள்ளாக அந்த லிப்டை இயக்கிய பணியாளரின் பார்வையில் அனுபமாவின் முகம் கன்றிப் போயிற்று. முடிந்த அளவு ரகுபதியின் பின்னே ஒதுங்கி நின்றாள்.

இந்த ஓட்டலில் வேலை செய்யும் சாதாரண பணியாள். அவன் இங்கே தங்க வந்திருக்கும் பெண்ணை இப்படி வெறிப்பதா? இயல்பான் பண்பாடுதான் இல்லை என்றாலும் செய்கிற வேலைக்குத் தேவையான பயமும் இல்லையே! இது என்ன மாதிரி இடம் என்று அவள் மனம் கலங்கியது.

திருந்திருந்து ரகுபதி அவளை இங்கே ஏன் அழைத்து வந்தான்?

லிப்டு நின்று, கதவு திறந்ததும் அவசரமாகப் பாய்ந்து வெளியேறி நடந்தவளுக்குச் சற்று பொறுத்துதான் ரகுபதி [illegible] வராதது புரிந்தது.

திகைப்பை மட்டும் திருப்பிப் பார்த்தாள்.

அங்கே 'லிப்டு' பணியாள் ரகுபதியின் கையைப் பற்றி [illegible] ஏதோ சொல்வதைக் காணவும் அவளது [illegible] நின்று பின் துடித்தது.

[illegible] மாதிரி மட்டரக சினேகிதமெல்லாம் ரகுபதிக்கு [illegible] வேளை, இதைப் போன்ற பழக்கங்களை [illegible] லிப்டு விட அருள் செய் என்று வேண்டிக் [illegible]

ரகுபதியின் கையை மற்றவன் விடுவது தெரியவும் அவசர மாகத் திரும்பி நின்றாள் அனுபமா.

வேகமாக அவளோடு வந்து சேர்ந்து நடந்தபடி, ''கையில் கடிகாரம் இல்லை என்றால் இவனுக்கு இளக்காரமாக இருக்கி றது. கையைப் பிடித்து மணி கேட்கிறான்'' என்று வருந்தி னான் ரகுபதி.

அவனிடம் தோன்றிய பரிதாபத்தை மீறிக் கொண்டு அப்பாடி என்றிருந்தது அனுபமாவுக்கு. அவ்வளவு மோச மான அந்த மனிதன் ரகுபதிக்குப் பழக்கப்பட்டவன் இல்லை.

அவர்களது அறைக்குள் சென்றதும் இருபைகளையும் அங்கி ருந்த அலமாரியில் வைத்து விட்டு, அங்கே கிடந்த இரட்டைக் கட்டில்களில் ஒன்றில் அமர்ந்து, ''இப்போது சொல், உனக்கு என்னென்ன சந்தேகங்கள்? அல்லது என்னென்ன குழப்பங்கள் என்று சொல்'' என்றான்.

நம்பவில்லையா என்று அவன் மீண்டும் ஆத்திர பட்டு விடக்கூடாதே என்கிற சலனத்துடன் பேசினாள் அனுபமா.

''வந்து... வந்து ரகுபதி, நீங்கள் கைக்கடிகாரத்தை விற்று ஏற்பாடு செ.... செய்ததாகச் சொன்னதை.... நா... ன்.... நான் நமது திருமணம் அப்புறம் வசிக்கும் வீடு... இதற்கெல்லாம் ஏற்பாடு செய்ததாக நி.... நினைத்தேனா? இங்கே.... இப்படி ஓட்டலில் தங்க ஒருமாதிரியாக இருக்கிறது'' என்றாள் நலிந்த குரலில்.

''இவ்வளவுதானா?'' என்று இதமாகச் சிரித்தான் அவள். ''நீ நினைத்தது எல்லாம் சரிதான், அனும்மா. ஆனால் இன்று காலி செய்து வீட்டைத் தருவதாக சொன்ன பாவி இன்னும் இரண்டு நாள் கழித்துத் தான் வீட்டைத் தருவேன் என்கிறான். ஞாயிற்றுக் கிழமை காலையில் கோயிலில் திருமணத்தை

முடித்துக் கொண்டு நேரே வீட்டிற்குப் போகப் போகிறோம். அதுவரையில்... இரண்டு அறைகள் கூட எடுத்திருப்பேன் அனும்மா. எடுக்காத காரணம் ஒன்று... பணப் பற்றாக்குறை. அடுத்தது இது உன் வீட்டிலிருந்து வெகுதூரத்தில் இருக்கிறது என்கிற ஒரே காரணத்தால் ஆட்டோ டிரைவர் ஆலோசனை யின் பேரில் இந்த ஓட்டலுக்கு உன்னை அழைத்து வந்து விட்டேன். இந்த ஓட்டல் என்ன மாதிரியோ, உன்னைத் தனியாகத் தங்க வைப்பது சரியோ தவறோ என்கிற பயத்தில் தான் ஒரே ரூம் போட்டேன். எப்படியும் நாம் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள். இந்த இரண்டு நாட்களும், ஏதே ஒரு படத்தில் வருமே - அது போல நடுவில் ஒரு சாமி படத்தை வைத்துக் கொண்டு கட்டில்களைப் பிரித்துப் போட்டுப் படுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன். விருப்பம் இல்லை என்றால் வெளிப்படையாகச் சொல்லு. நான் வேண்டுமானால் இரவெல்லாம் வெளியே நின்று உனக்குக் காவல் காக்கிறேன்'' என்று நீளமாய் உணர்ச்சிகர மாய்ப் பேசி முடித்து விட்டு அலுப்புடன் சோம்பல் முறித்தான்.

கோமளவல்லியாக அவன் பேசியதைக் கேட்டபோது என்னவோ அவள் தான் அசட்டுத்தனமாக இல்லாத பொல்லாத கவலைப்ப டுவது போல உணர்ந்தாள் அனுபமா.

வீட்டை விட்டுக் கிளம்பும் போது மணி பன்னிரண்டு. இப்போது ஒன்றேனும் இருக்கும். இந்த நேரத்தில் அவனைக் கொலுக்கு, வெளியே நிறுத்துவது நியாயமாகுமா? அவனுக் கும் மனித, உடல்தானே. அவளைப் போலவே அசதியும் இருக்குமல்லவா.

அதெல்லாம் வேண்டாம்'' என்று முணுமுணுத்து வைத் தாள்.

அவள் முகம் வெளுவென மலர்ந்து போயிற்று. அடக்கமாட்

டாத சிரிப்பில் பற்கள் தெரிய, ''அனுக்குட்டிம்மா, நீ ஏதாவது சாப்பிட்டாயா, கண்ணு? எங்கே, இந்தக் களேபரத்தில் உனக்கு ஒன்றும் இறங்கியிராது. கீழே போய் ஏதாவது சாப்பிட்டு விட்டு வரலாமா, கண்ணு?'' என்று குழைந்தான்.

இந்த 'கண்ணு மூக்கை' எல்லாம் விட்டு விட்டு அவன் அனுபமா என்றாலே நல்லாயிருக்கும் போலத் தோன்றியது அவளுக்கு. அதை வெளிப்படையாகக் கூறமுடியாமல், ''இந்த நேரத்தில் என்ன சாப்பாடு கிடைக்கப்போகிறது?'' என்றாள் முணுமுணுப்பாகவே.

''அதென்ன அப்படிச் சொல்விவிட்டாய்?'' என்றான் ரகுபதி. ''இந்த ஒட்டலில் இருபத்திநாலு மணி நேரமும் சாப்பாடு கிடைக்குமாக்கும்'' என்று அறிவித்தவன், அவளது விழிகள் ஐயமாய் விரியவும், ''வரும்போது நீ பார்க்கவில்லை; கீழே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்களே. இந்த நடுநிசியில் சாப்பாடு கொடுக்கிறவன் நாள் முழுவதும் கட்டாயம் தருவான். அதனால் நாம் அங்கே போய்ச் சாப்பிடலாம் கண்ணு'' என்றான்.

அனுபமாவுக்குப் பசிதான். கிட்டத்தட்ட அன்று காலையில் இருந்தே அவளுக்கு எதுவும் இறங்கவில்லைதான். ஆனால் கீழே, மேசை மேல் தட்டுகளில் உணவோடு கூடக் கண்ணாடிக் குவளைகள். பாட்டில்களையும் கண்ட நினைவாலே உணவின் மீது ஆசை விட்டுப் போயிற்று.

காரணத்தைச் சொன்னால், உன்னைக் குடிக்கவா கூப்பிட்டேன் என்று சிடுசிடுப்பானோ என்று எண்ணிப் ''பசியில்லை'' என்றாள்.

ஆனால் அவளை உணர்ந்தவன் போல, ''அங்கே போகப் பிடிக்கா விட்டால் வேண்டாம், கண்ணு. ஆனால் பட்டினியாய் படுக்க வேண்டாம். சூடாகக் கொஞ்சம் பாலாவது கொண்டுவரச் சொல்கிறேன்'' என்று கூறி எழுந்தான் ரகுபதி.

திடுமென ஏதோ நினைவு வந்தாற்போல், ''அட, இதை மறந்தே போனேன் பார்'' என்று கூறி, பாண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்தான். ஒரு சிறு பொட்டாகத் தாலி கோர்க்கப்பட்டிருந்த மஞ்சள் சரடு அது!

''இதை அணிந்துகொள் அனுபமா'' என்று அவளிடம் நீட்டினான்.

இரண்டு நாள் கழித்து ஓமம் வளர்த்து மந்திரம் சொல்லி, வாழ்விலும், தாழ்விலும் இவளது கவுரவம் காப்பதாக உறுதி கூறி அணிவிக்க வேண்டிய திருமாங்கல்யம்! சும்மா அணிந்து கொள் என்றால் சில காலமாகக் கண்ட எத்தனையோ விபரீதங்களைப் போல அதுவும் மலைப்பாகவே இருந்தது அவளுக்கு.

''ஏ ...ன்?'' என்றாள் கலக்கத்துடன்.

''பாதுகாப்பாக இருக்கும், அனுபமா, வந்து.... அதாவது கல்யாணமான பெண் என்றால் யாரும் வாலாட்டத் துணியமாட்டார்கள் பார். அதுதான். அந்த மாதிரிப் பாதுகாப்பு அளிக்கத்தான் சொன்னேன்.''

[illegible] என்றிருந்தது அனுபமாவுக்கு. கழுத்தில் [illegible] இருந்திருந்தால் அந்த லிப்ட் ஆள் அப்படி [illegible] பார்த்திருக்க மாட்டானோ?

[illegible] தயக்கத்துடனேயே அவள் கையை நீட்டிய [illegible] ''நானே கட்டிவிட்டுமா கண்ணு?'' என்று ரகுபதி [illegible] சட்டெனப் பின்னடைந்தாள் அவள்.

[illegible] விளையாட்டுப் பொருளா, இன்று கட்டுவதும்,

இரண்டே நாட்களில் மீண்டும் அவிழ்த்துக் கட்டுவதும் என்ன விளையாடுவதற்கு?

''இல்லை, நானே....'' என்று கையை நீட்டி அதை வாங்கி வயிறு பிசையப் பிசையக் கழுத்தில் அணிந்து கொண்டாள்.

என்னவோ வீரதீரம் செய்து திருமணம் புரிந்து கொண்டது போல நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான் ரகுபதி. ''இது சரி. இனி யாரால் வாலாட்ட முடியும்? இந்த அரை மீட்டர் மஞ்சள் கயிற்றில் தொல்லைகள் எல்லாமே மாயமாகிவிடுவதை நான் எப்போதுமே கண்டிருக்கிறேனே'' என்று குதூகலமாகக் கூறியபடியே கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான் ரகுபதி.

அவ்வப்போது நேர்வது போல அப்போது ரகுபதியின் பேச்சில் அனுபமாவுக்குப் பிசிறு தட்டியது.

ஆனால் வழக்கமான நெருஞ்சி முள் உறுத்தல் அல்ல. கற்றாழைப் பழத்தின் முன் தொண்டையில் சிக்கிவிட்டாற் போலான மரண அவஸ்தை.

'எப்போதுமே கண்டிருக்கிறேன்' என்றால் என்ன அர்த்தம்? 'பல சமயங்களில் கண்டிருக்கிறேன்' என்பதுதானே? அப்படியானால் இதற்குமுன் பலமுறைகள் இவன் இது போல... இதே போல பெண்களை அழைத்துக் கொண்டு ஓட்டலில் தங்க வந்திருக்கிறான் என்பதுதானே அதன் பொருள்?

நினைக்கும்போதே நெஞ்சு பகீரென்றது அவளுக்கு.

இந்த ரகுபதியை பற்றி அவனது வாய் மூலமாக அறிந்தது தவிர அனுபமாவுக்கு வேறு எதுவும் தெரியாது. அவன் கூறியவற்றின் மெய் பொய் ஆராய்ந்து அவன் பாம்பா பழுதையா என்று பகுத்து அறிவதற்கான அவகாசமோ

வாய்ப்போ அவளுக்கு இருக்கவில்லை.

அவன் பாம்பாகவே இருந்தாலும் கயிறாகவே கருதித் தயங்காமல் பற்றித் தப்பியாக வேண்டியகட்டாய நிலை. தப்பி வந்து அப்பாடா எனுமுன் கயிறு பாம்பாக மாறி கொத்த வந்தால் என்ன செய்வாள்?

எதுவும் செய்ய இயலாதது போல மனமும் உடலும் சோர்ந்தது அவளுக்கு.

கால்கள் துவள ஒய்ந்து அமரும்போதே, இது அப்படி ஆற அமர உட்காரும் நேரமல்ல என்பது மனதில் உறைத்தது.

ஒருவேளை... ஒரு வேளை... ரகுபதி கெட்டவனாக இல்லாமலும் இருக்கலாம். அவன் அறிந்த மற்றவர்களின் அழுபவத்தைப் பற்றியும் அவன் அப்படிக் கூறியிருக்கலாம் என்றும் ஒருதரம் அவளுக்குத் தோன்றத்தான் செய்தது. ஆனால் அதை நம்பிக்கொண்டோ, அன்றி உடலும் மனமும் சோர்வுற்று ஒய்ந்துவிட்டேன், இனி வருவது வரட்டும் என்றோ அமைதி உட்கார்ந்திருப்பது அவளுக்குப் பெரும் கேடாக முடியாகும்.

முதல்நாளிலிருந்து ரகுபதியைப் பற்றிய உறுத்தல்களை எல்லாம் [illegible] பார்க்கையில் கேடுதான் என்று நிச்சயமாகவே தோன்றியது.

[illegible] தேடி ஓடி வந்தால் முடிவற்ற கும்மிருட்டுதான் [illegible] வேறு தோன்றிய தன்னிரக்கத்தை உதறி விட்டு [illegible]

[illegible] ரகுபதியின் தனியிடம் அல்ல. இங்கே தங்கமுடியாது [illegible] அவனால் தடுக்க முடியாது. இங்கிருந்து [illegible] போய் ரெயில் நிலையத்தில் 'வெயிட்டிங்

ரூமில்' இரவைக் கழித்து விட்டு மேலே யோசிக்கலாம் என்று அவனிடம் கூறிப் பார்க்கலாம். அவன் நல்லவனாக இருந்தால் அதற்குக் கட்டாயம் ஒத்துக்கொள்வான். அன்றி..... மறுத்தாலும் அவள் தனியாகக் கிளம்பி விடவேண்டியதுதான்.

அப்படித் தனியே கிளம்ப நேர்ந்தால் அப்புறம் என்ன செய்வது என்ற கலக்கத்தைப் பிடிவாதமாக ஒதுக்கிவிட்டு எழுந்தாள். அதைப் பிறகுதான் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்போது உடனடித் தீமையிலிருந்து விடுபடுவதுதான் முக்கியம்.

ரகுபதி கெட்டவன் தான் என்றாகிவிட்டால் அவனிடம் இந்த அறைக்குள் மாட்டிக் கொள்வது நல்லதல்ல என்று தோன்றவும் அறையைவிட்டு வெளியேறத் தீர்மானித்தாள் அனுபமா.

அவனுக்காக இங்கே காத்திருப்பதைவிட அவன் வழியிலேயே எதிர் கொண்டு தன் முடிவைக் கூறிவிட எண்ணித் தன் பையை எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

லிப்ட் பணியாளரின் பார்வை நினைவு வரவும் படி வழியாகவே இறங்க முடிவு செய்தாள்.

இவள் படி வழியே இறங்கிச் செல்லும்போது ரகுபதி லிப்ட் வழியே வந்து தேடுவானோ என்று தோன்றவும் மேசை மேல் இருந்த காகிதத்தில் கீழ்த்தளத்தில் சந்திக்குமாறு எழுதி வைத்து விட்டுக் கிளம்பினாள்.

ஆள் நடமாட்டம் படிகளில் கிட்டத்தட்ட இல்லைதான். ஆயினும் தனியே இறங்கும்போது யார் கவனத்தையும் ஈர்க்க மனம் இன்றி ஒசையற்ற விரைவுடனேயே இறங்கிக் கொண்டிருந்தாள் அனுபமா.

ஒரு தளத்துப் படிகளை இறங்கி முடித்து மறு திருப்பத்தை அவள் நெருங்கிக் கொண்டு இருந்த போது அது நேர்ந்தது.

அந்த நேரத்தில் அங்கே யாரும் தன் பேச்சை ஒட்டுக் கேட்கக்கூடும் என்ற எண்ணம் இல்லாததாலோ என்னவோ ரகுபதி உரக்கவே சொல்லிக் கொண்டிருந்தான். ''பாவில் கொஞ்சமாகவே சரக்கு சேர், பாண்டி. ஒரேயடியாகக் கட்டையாக நீட்டி விட்டாள் என்றால் அப்புறம் ஒன்றும் ரசிக்காது.''

ஒரேயடியாக எதிர்பாராதது என்று இல்லை. என்றாலும் நேரடியாகக் கேட்கையில் அனுபமாவின் நெஞ்சு குலுங்கிப் போயிற்று.

ஒரு கணம் நின்று சுதாரித்துக் கொண்டு, இனி அவனிடம் சொல்லிவிட்டு வெளியேற வேண்டியதுதான் என்று எண்ணி அடுத்த அடி எடுத்து வைத்த போது அந்தப் பாண்டியின் குரல் கேட்டது.

''எப்படித்தான் உனக்கென்று ரதி ரதியாய்க் கிடைக்கிறாள் போ? உள்ளே வரும்போது நாங்கள் நாலு பேரும் பார்த்துக் கொண்டே இருந்தோம். கிட்டுவுக்குத் தாங்கவில்லை. எனக் [illegible]'' என்ற குரலில் பொறாமை இருந்தது.

''[illegible] நாள் தாங்குங்கள். பிறகு உங்களுக்கில்லாமலா?'' [illegible] ரகுபதிதான். மகா பாவி!

''அடி முரடாய் லாட்ஜுக்குத்தானே?''

[illegible]? இதுகளுக்கு வேறே போக்கிடம் ஏது? அத்[illegible] ஒருதரம் உள்ளே கொண்டு வந்து விட்டால் [illegible] அழுகு அழிந்து வரும்படி நிற்கிற வரை வெளியே [illegible] என்ன?

[illegible] மேலும் கேட்டுக் கொண்டு நின்ற அனுபமா [illegible] பார்த்து தேகம் பதறியது.

5

அனுபமா, ரகுபதியை உளமாரக் காதலித்திருந்தால் அவனைப் பற்றிய சந்தேகம் வந்தபோதே, கிட்டத்தட்ட அது உறுதியானபோதே அவளது நெஞ்சு பிளந்து போயிருக்கும்.

ஆனால் அவளைப் பொறுத்தவரையில், அவளைக் காதலிப்பதாக அவளிடம் விடாமல் கூறி உருகுகிற இவன் ஒரு கொடிய விதியிலிருந்து அவளைக் காப்பாற்றுவதால் அவனுக்கு ஒரு நல்ல மனைவியாக இருந்து நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்று தான் எண்ணியிருந்தாள்.

அதே உறுதியில் தான் அவனோடு கிளம்பி வந்தாள்.

காதல் கண்ணையோ கருத்தையோ மறைக்காத காரணத்தினால், பெண்களுக்குரிய இயல்பான எச்சரிக்கை உணர்வினால் அவளுக்கு அவ்வப்போது நெருடல்கள் ஏற்பட்டன. சட்டென சந்தேகம் உண்டாயிற்று. அவனது ஒரு வார்த்தையில் அவன் கெட்டவன் என்று பெருமளவு நிச்சயமும் ஏற்பட்டிருந்தது.

ஆனால் அவனைக் கெட்டவன் என்று நிச்சயித்த போது, அவனை வண்டு இனமாக எண்ணி, அவளை ரசித்து விட்டு உதறிவிடும் நோக்கம் கொண்டிருக்கிறான் என்று மட்டுந்தான் எண்ணினாள்.

ரகுபதி பெண்ணாசை பிடித்தவன் என்பது உறுதியாகி விட்டால் அவனை விட்டு விலகிவிடுவது என்கிற முடிவுக்கு வந்திருந்த அவளது கவலையெல்லாம் அப்படி வெளியேறிய பின் தன்னந்தனியே என்ன செய்வது, எங்கே போவது, எப்படிப் பிழைப்பது என்பதில்தான் இருந்தது.

ஆனால் அவன் கெட்டவனாக மட்டும் இல்லாமல் அவளையே வைத்துவியாபாரம் செய்கிற அளவு கொடியவன் என்பது தெரிந்ததும் அவள் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளானாள்.

அதற்குமேல் ரகுபதியிடமிருந்து தப்புவது மிகவும் கடினம் என்பது புரியவும் நிலைகுலைந்து போனாள்.

இந்த ஓட்டல் அவன் அறியாத இடம் என்று சொன்னது முழுப்பொய். இது அவனது பாசறை. இங்கே அவனுடைய ஆட்கள் - அவனுடைய கூட்டாளியின் வாய் வார்த்தையின்படியே நாலுபேர் இருக்கிறார்கள். அதற்குமேலும் இருக்கக்கூடும்.

இவர்களில் ரகுபதி தவிர யாரையும் அனுபமாவுக்குத் தெரியாது. எதிரி இன்னார் என்று அறியாமல் அவர்கள் கண்ணுக்கு ஒளிந்து மறைந்து தப்புவது எப்படி?

அதே சமயம் ரகுபதியின் கூட்டாளிகளில் குறைந்த பட்சம் மூன்று நாலு பேர் அவளை அறிந்தவர்கள். இவர்களில் யார் எங்கிருந்து அவளை மடக்குவார்களோ?

அவனும் தப்பிச் செல்ல முயலக்கூடும் என்கிற எண்ணமே இல்லாதிருக்கும் போதே ஓடிவிடலாம் என்றாலோ இறங்கும் வழியில் ரகுபதியும் அந்தப் பாண்டியும் இருக்கிறார்கள்.

[illegible] அங்குள்ளவனும் ரகுபதியின் கூட்டாளியாகத்தான் [illegible] வேண்டும். மற்றபடி அவளை அப்படிப் பார்க்கும் [illegible] அவனுக்கு வருவதற்கில்லை.

[illegible] தேடித் தவித்தபடியே, அச்சத்தினால் நடுங்கிய [illegible] படுத்தி மெல்லப் பின்னடையத் தொடங்கி [illegible] மீண்டும் பாண்டியின் குரல் கேட்டது.

[illegible] ரகுபதி, இந்த மாதிரி லட்டுகள் உனக்குக் [illegible] இருக்கிறார்கள்? நமக்குக் கரணம் [illegible] பயிற்பதில்லையே?" என்று வியந்து

வினவினான் அவன்.

''அததற்கும் ஒரு பர்சனாலிட்டி வேணும், தம்பி.'' என்று கர்வத்துடன் பெருமையடித்தான் ரகுபதி.

கேட்க விரசமாயிருந்தது அனுபமாவுக்கு. 'பெரிய பர்சனா லிட்டி' இவனது மன்மத ரூபத்தைக் கண்டா அனுபமா மயங்கிப் போனாள். மண்ணாங்கட்டி! ஆறு மாதமாய் அவன் அவள் பின்னோலேயே விடாப்பிடியாக விரட்டிய போதும் அவனை அந்த மாதிரி அவள் எண்ணிப் பார்த்ததுகூட இல்லையே. இப்போதும் இப்படி ஒரு துன்பம் அவளை மிரட்டியிராவிட்டால்....

''....அதோடு பாண்டிப்பையா, ஒரு டெக்னிக்கும் தெரிய வேண்டும். முதலில் கொஞ்சம் பாவப்பட்ட ஒன்றுமில்லாததுக ளைத் தேர்ந்தெடுக்கத் தெரிய வேண்டும். சலிக்காமல் அவள் வருகிற இடத்தில் காத்துக் கிடந்து அவளுக்காகவே உயிர் வாழ்வது போல வசனம் பேச வேண்டும். அப்புறம் அதுகளாக லேசாகக் கனிகிற நேரம் கண்ணில்படாமல் ஏங்கவிட வேண் டும். அப்புறம் திடீரென்று முன்னாலே போய் நின்றால் கையை நீட்டிப் பறிக்க வேண்டியதே இராது. பழம் தானாக மடியில் விழுந்துவிடும். பிறகு... ஒரு தடவை வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டால் போதும். எவ்வளவு சண்டிக்குதிரை என்றா லும் சவுக்கினால் நாலு வாங்கினால் பணிந்து விடும்.''

பாவி... மகாபாவி... அவளுக்கு அவன் திட்டமிட்டிருந்த விதி இதுதானா? இப்படி எத்தனை பெண்களை அழித்திரு பான் இந்த நாசகாரன்! கடவுள் இவனை இன்னும் ஒன்று பண்ணவில்லையே!

ஆனால் இங்கே நின்று கடவுளை நொந்து கொண் இருப்பது மதியீனம். எந்த நேரமும் அவர்கள் மேலே வ தொடங்கலாம்.

அவள் திரும்பி வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

அது சரியே என்பது போல, ''சரி, சரி, நீ சீக்கிரம் பாலை எடுத்துவா, பாண்டி. ஏற்கனவே உன்னைத் தேடி இந்தத் தளத்தில் கண்டுபிடிக்க வேறு நேரம் ஆகிவிட்டது. இன்னும் பேசிக் கொண்டு நின்றால் அங்கே அவள் என்னைக் காணாமல் வெளியே வந்து தேடத் தொடங்கிவிடக் கூடாது. நான் கிளம்புகிறேன். பாலைக் குடித்து முடிக்கும்வரை கொஞ் சம் பதவிசாய்த்தான் நடந்து கொள்ள வேண்டும்'' என்றது ரகுபதியின் குரல்.

மனம் கொதித்தது அனுபமாவுக்கு. வெறிக் கூச்சலுடன் ரகுபதி மேல் பாய்ந்து கண் முகம் பாராமல் பிறாண்டி அவனை [illegible] சிந்த வைக்க வேண்டும் போல ஒரு வேகம் வந்தது.

[illegible]ஆனால் அது சிங்கத்தை அதன் குகையிலே சந்திக்கிற [illegible] .அதுவும் ஒரே ஒரு சிங்கத்தை மட்டுமல்ல. சிங்கக் [illegible]தானதையே. அவளைத்தான் குதறிவிடுவார்கள்.

[illegible]பழிவாங்குவதை விடப் பதுங்கித் தப்பித்துக் கொள்வது [illegible]புத்திசாலித்தனம்.

[illegible]மூளை .ஆவது ஓசை எழுப்பாமல் வேகமாக மேலே [illegible]யேறினாள்.

[illegible]பற்றிய ஐயமே இல்லாமல் ஜாலியாகச் சீட்டி [illegible] ரகுபதி வந்த சத்தம் அவளை மேலும் விரட்டியது.

[illegible]மேலத்தில் ஏறிச் சென்றவள் அடுத்த தளம் [illegible]தளத்தில் நின்றாள்.

[illegible]தளத்திற்குச் செல்லும் படிக்கட்டில் வழியை [illegible] (2)ரண்டு பேர் நின்று பேசிக் கொண்டு [illegible] ஒதுங்கி வழி விடாமல் அவளால் [illegible] போக முடியாது.

ஒருவேளை அவர்கள் ரகுபதியின் கூட்டாளிகளாக இருந்தால் அவர்களது கவனத்தைத் தன்மேல் திருப்ப அவளுக்கு விருப்பம் இல்லை.

ஆனால் அங்கேயே நின்று கொண்டு இருக்கவும் முடியாது. ரகுபதி விரைவிலேயே வந்துவிடக்கூடும்.

சிவப்புநிற அம்புக்குறி, லிப்டு மேலே ஏறிக் கொண்டு இருப்பதை அறிவித்தது.

அதை இயக்குபவனும் ரகுபதி ஆளாகவே இருக்கலாம்தான். ஆனால் லிப்டு இயங்கிக் கொண்டு இருக்கையில், உள்ளே ஆள் இருக்கும் போது அவனால் அவளை எதுவும் செய்யவோ, ரகுபதியோடு தொடர்பு கொள்ளவோ முடியாதல்லவா?

பொத்தானை அழுத்தி லிப்டு கதவு திறக்கவும் உள்ளே புகுந்துகொண்டாள்.

லிப்ட் பணியாளின் விழிகள் தெறித்துவிடும் போல அகன்றன.

அவனைக் கவனியாதவள் போலப் பார்வையைத் திருப்பிய வளுக்கு முகம் கன்றியது.

உடனிருந்த இரு ஜோடிகளும் அதைத் தனியறையாகவே பாவித்து சிங்கார லீலை நடத்திக் கொண்டு இருந்தனர்.

இந்த அகால நேரத்தில் ஜோடி ஜோடியாக ஏறுவதும் இறங்குவதும் பார்க்கப் பார்க்க இந்த இடத்தின் தன்மை பற்றி மேலும் தெளிவாக அனுபமா புரிந்து கொண்டாள்.

எந்தவிதமான சேதமும் இன்றி இங்கிருந்து அவள் எப்படித் தப்பிக்கப் போகிறாள்?

தப்பித்துத்தான் ஆக வேண்டும் என்ற திடம்கொள்கையில் ஒரு ஜோடி அந்தத் தளத்தில் வெளியேறத் தொடங்கவும்

அவளும் கூடவே வெளியேறி விட்டாள்.

லிப்ட் ஆள் ரகுபதியோடு சேர்ந்தவன் என்றால் மேலும் குழம்பட்டும் என்று மாடிப்படி மூலம் இன்னும் ஒரு தளம் மேலே சென்றாள். ஆனால் மேலே மேலே சென்று என்ன செய்வது? கீழிறங்கிச் சென்று அல்லவா வெளியறே வேண்டும்.

யோசித்தபடியே சுற்று முற்றும் பார்த்தாள். ஏதாவது மறைவிடம் கிடைத்தால் அங்கிருந்து வேறு சேலையைக் சுருட்டிக் கட்டாகக்கட்டி முக்காடு போட்டுக் கொண்டு வெளியேற முயற்சிக்கலாம் என்று எண்ணி மறைவிடம் தேடியபடியே மெல்ல நடந்தாள் அனுபமா. உட்புறமாய்ப் பூட்டியிருந்த அறைக் கதவுகளும் சுற்றி ஓடிய சிறுவராந்தாவும் மறைவிடத்தை அடியோடு மறுத்தன.

மேலும் அறைகளில் இருந்து வெளிப்பட்ட சத்தங்கள் காதில் விழ விழ மேலும் மனம் கூசி நொந்தது. இருந்திருந்து இந்த மாதிரி இடத்தில் மாட்டிக் கொண்டு விட்டாளே!

எங்கோ அந்த ஏளனப் பார்வைக்காரனின் நினைவு வந்தது. அவனும் இப்போது இப்படித்தானே இருப்பான்? இந்த மாதிரி பெண் என்று ஏளனமாகப் பார்த்தானோ என்னவோ?

மாடிப்படை திரும்பியபோது லிப்ட் திறந்து சிலர் வெளியே வந்ததும் பேச்சுக்குரலும் கேட்டது.

"[illegible]க் கவனிக்காத மாதிரி காட்டிக் கொண்டாள் [illegible] நாம் உன் ஆள் என்பது அவளுக்கு நன்றாகவே [illegible] என்பதுதான் என் ஊகம். நம்மை ஏய்ப்பதற்காக [illegible] இறங்கிவிட்டுப் படியேறி இங்கே வந்திருப்பாள் [illegible]கிறேன்" என்றான் ஒருவன். லிப்ட் இயக்குகிறவ [illegible] வேண்டும்.

[illegible] லிப்டானே என்று கலங்கிப் போனாள்

அனுபமா.

''நீ சொல்வது சரிதான். அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் என்னை ஏய்த்து எங்கே ஓடிவிடப் போகிறாள்? முன் தளம் முழுவதும் தேடி விட்டோம். இதுவும் அடுத்ததும் தானே பாக்கி? பார்த்துப் பிடித்து விடலாம் கழுதையை'' என்றான் ரகுபதி. ''பாண்டி! நீ அந்தப் பக்கமாய் வா. நான் இந்தப் பக்கமாய்ப் பார்க்கிறேன். வேலு, நீ லிப்டைப் பார்த்துக் கொள். அவளை இன்று உண்டு இல்லை என்று ஆக்கிவிடுகிறேன்.''

சில கணங்கள் பயத்தில் உறைந்து போய் நின்றாள் அனுபமா. இன்னும் சில நிமிடங்களில் இந்தப் பக்கம் ஒருவனும் அந்தப் பக்கம் ஒருவனுமாக வந்து அவளைப் பிடித்துச் செல்லப் போகிறார்கள். அப்புறம் உலகில் மகாக் கேவலமான ஒரு நிலைமை அவளுக்கு.

ஏதாவது அறைக் கதவைத் தட்டித் திறக்கச் செய்து புகலிடம் கேட்கலாம் என்றாலோ, இங்கே இருக்கக் கூடியவர்கள் தோற்றம் சீர்படுத்தி வந்து திறக்குமுன்பே காலம் தாழ்ந்து விடக்கூடும் என்ற பயம்.

அதைவிட ஏதாவது அறைக் கதவு திறந்திருந்தால் அனுமதி கேளாமலேயே உள்ளே சென்று அடைக்கலம் கேட்பது மேல் என்று தோன்றவும் அவசரமாக ஒவ்வொரு கதவாகத் திறப்பதற்கான கைப்பிடியைத் திருகிப் பார்த்தபடியே வேகமாக நடந்தாள்.

இருபுறமும் காலடி ஓசை நெருங்குவது கேட்டது.

இதுதான் கடைசி, இந்தக் கதவு திறக்கவில்லை என்றால் பிடிக்க வருகிறவர்களில் எவனாவது ஒருவன் கண்ணில் தென்பட்டாலும் பாய்ந்து வராந்தா கைப்பிடி சுவரில் ஏறி குதித்துஉயிரை விட்டு விட வேண்டியதுதான் என்ற முடிவுடன்

கதவுக் குமிழைப் பற்றினாள் அனுபமா.

நாலாவது மாடியிலிருந்து குதித்தால் உடனே உயிர் போகுமா என்று யோசித்தபடி கதவுக் குமிழைத் திருகியபோது சொர்க்க வாசல் போலக் கதவு திறந்தது.

யார், என்ன என்பன போன்ற அதட்டலான கேள்விகளை எதிர்பார்த்தபடி அவசரமாக உள்ளே சென்று கதவை சாத்தி விட்டுத் திரும்பியவள் அறையினுள் ஒருவரையும் காணாமல் திகைத்தாள்.

காலி அறையா? காலி அறையைப் பூட்டாமலா இருப்பார்கள்? அப்படி இருந்தால் தேடி வருகிறவர்களும் உள்ளே வந்து பார்க்க மாட்டார்களா என்று கலங்கியபோது குளியல் அறையிலிருந்து நீர் விழும் ஒலி கேட்டது.

கூட..வே வரந்தாவிலும் பேச்சுக் குரல் கேட்கவும் அவசரமாக அறையைப் பார்வையால் துழாவினாள். பக்கவாட்டில் 'சிட் அவுட்'டை மறைத்தாற் போல நீளமாக தொங்கிய திரையைக் காணவும் ஓடிச் சென்று அதன் பின்னே மறைந்து நின்றாள்.

''இங்கே இல்லை, பாண்டி.. அடுத்த தளத்தில் எப்படியும் பிடித்து விடலாம். அல்லது வேலு நம்மிடம் சொல்ல வந்த தகவல் மூலமாகவே இறங்கிப் போயிருப்பாளோ? ஆனால் கீழே சுசை கண்ணில் படாமல் அப்படித் தப்பிவிட முடியாது. வாருங்கள்..'' என்றபடி ரகுபதியின் குரல் தேய்ந்து மறைந்தது.

நிரந்தரமாகத் தப்பி விட்டதாகச் சொல்ல முடியாதுதான். ஆனாலும் அந்த வினாடி அளவில், அடுத்த சில நிமிடங்களுக்கு அவளுக்கு ஆபத்து இல்லை. அது மணிக்கணக்காகவும் நீடிக்குமானால் எப்படியும் இந்தக் கட்டிடத்திலிருந்து வெளியேறிவிடலாம். அவளுக்கு ஆபத்து காத்திருப்பது நிச்சயம். அதிலிருந்து தப்புவதற்கான வழிமுறைகளை அவள்

விரைவாகத் தேடிக் கண்டு பிடித்தாக வேண்டும்.

எப்படி யோசித்தாலும் முக்காட்டினுள் முகம் மறைத்துச் செல்வது ஒன்று தான் உருப்படியான வழியாகத் தோன்றியது. ஆனால் அவளை வலை போட்டுத் தேடத் தொடங்கிவிட்ட பிறகு, தனியே ஒரு பெண் முகம் காட்டாமல் சென்றால் அவள் யாரென்று பாராமல் போக விடுவார்களா?

எப்படி எப்படி யோசித்தாலும் இன்னொருவர் துணையின்றி இங்கிருந்து தப்புவது இயலாத காரியம் என்ற முடிவுக்கே வரவேண்டியிருந்தது.

குளியல் அறையில் இருப்பவர் - அவர் ஆணோ - பெண்ணோ? யாரென்றாலும் காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி அவரது உதவியைப் பெற்றால் ஒழிய அவளுக்கு விடிவு இல்லை.

இந்த அறைவாசி, ரகுபதி வகையறா போல ஒநாய் இனமாக இருந்து விடக்கூடாது என்று வேண்டியபடி மறைவாகவே நின்று கொண்டிருந்தாள்.

குளியலறை ஆள் வெளி வந்தபின் ஒரு நோட்டம் பார்த்துக் கொண்டு வெளிப்படுவது நல்லது என்பது ஒரு காரணம்.

யார் வரவுக்காகவோ - இந்த ஓட்டலின் தன்மைக்குச் சரியாக எண்ணிப் பார்த்தால் - ஒரு பெண்ணின் வருகைக்காகவே இந்த அறை ஆள் கதவைத் தாளிடாமல் இருந்திருக்கலாமோ என்று நினைத்தது அடுத்த காரணம். வருபவர் யாராயிருந்தாலும் அந்த முகத்தையும் பார்த்துக் கொண்டு அதற்குத் தக்க நடக்கலாம்.

அனுபமாவின் கணிப்பு ஓரளவு சரியாக இருந்தது.

சில வினாடிகளில் கதவைத் தட்டிவிட்டு கையில் 'ட்ரே'டன் ஒரு பெரிய பையன் உள்ளே வந்தான்.

குளியலறை சாத்தியிருப்பதைக் கண்டு அங்கே சென்று கதவைத் தட்டி ''நீங்கள் கேட்டது போலச் சூடாகப் பால் கொண்டு வந்திருக்கிறேன் சார்'' என்றான் உரத்த குரலில்.

சாரா? அப்படியானால் ஆண்தான். வயதானவராக இருந்தால் நல்லது.

குளியல் அறைக் கதவு திறந்தது. ''நீவந்து வெகு நேரம் ஆயிற்றா?'' என்று கேட்டது ஓர் ஆண் குரல்.

அய்யோ, இது வயதான குரல் அல்ல. பட்ட காலிலே படும் என்பது போலத் துன்பமும் விடாது போலத் தெரிகிறதே என்று கலங்கினாள் அனுபமா.

''ம்ம்.... இதோ பார் பையா, இன்னும் ஒரு சின்ன வேலை செய்து விடு. ஒரு பிளாஸ்கில் இன்னொரு கப் பால் கொண்டு வந்து வைத்தாயானால் பத்து ரூபாய் உனக்கு.... இந்த இரவு நேரத்தில் அலைக்கழிக்கிறேனே என்று இருக்கிறதா?''

பரவாயில்லை. ஏதோ கொஞ்சம் இறக்கம் இருக்கும் போலத் தெரிகிறது. ஒருவேளை அவளுக்கு உதவவும் முன்வரலாம்.

''அதெல்லாம் இல்லை சார்'' என்றான் பையன் பதிலாக. [illegible] ராத்திரிதான் சார் புல்வேலை. பகலெல்லாம் [illegible]. இதோ வர்றேன் சார்'' என்று வெளியே [illegible] பையன்.

[illegible] சென்றபின் அறையிலிருந்தவன் கூண்டுப் புலி [illegible] அங்கும் அலைந்து கொண்டு இருக்கவே, [illegible] பயமாக விட்டபடி அசையாமல் நின்றாள் [illegible] அந்தப் பையன் வந்து செல்லும் வரை அவள் [illegible] கட்டுப்படுத்திக் கொள்வது ஆபத்தாக முடியலாம். [illegible] பணியாள் என்பதால் அவன் மூலம் [illegible] தெரிவிடக் கூடுமே!

[illegible] என்னவோ, பையன் வெகு

துப் போய் விட்டதாலோ என்னவோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கையை ஓங்கிவிட்டாள்.

ஆனால் ஓங்கிய கை இறங்குமுன் சட்டென அவள் கையைப் பற்றித் தடுத்து நிறுத்தினான் அவன். ''என்ன தைரியம்! என்னிடமே கைநீட்டுகிறாயா? உள்ளதைச் சொன்னால் உடம்பு எரிச்சல் தாங்க முடியவில்லையாக்கும்!'' என்றான்.

''நான் எதையும் திருடவில்லை...''

அவளைப் பேசவிடாமல் குறுக்கிட்டு, ''இதை நம்புவதற்குக் காதில் பூவைத்த வேறு யார் அறைக்கேனும் போயிருக்க வேண்டும். நீ கையில் பையோடு ஒளிந்து கொண்டிருந்து கையும் களவுமாய்ப் பிடிபட்டபிறகும் திருடவில்லை என்று சாதிக்க உனக்கு எவ்வளவு திண்ணக்கம் இருக்க வேண்டும்! பையில் என்னென்ன திருட்டு சாமான்கள் வைத்திருக்கிறாய்? முக்கியமாக இந்த அறையில் என்னென்ன திருடினாய்?'' என்று அவளுக்குப் பேச இடம் கொடாமல் அவன் அடுக்கிக் கொண்டே போனான்.

அவளை ஒரு குற்றவாளியாக்கிவிடுவதில் அவனுக்கென்ன அப்படி ஒரு வெறி?

மீண்டும் பொறுமை இழந்து போய், ''நான் திருடியல்ல... திருடியல்ல... திருடியல்ல'' என்று கூச்சலிடத் தொடங்கியவள், அவளது பயங்கர கெட்ட நேரத்தின் விளைவாக ரகுபதியின் கூட்டத்தில் யாருக்காவது கேட்டு விடுமா என்ற பயம் வர, கம்மென அடங்கி குரலைத் தணித்து வெறும் கீறலில் முடித்தாள்.

அவனது பிடியிலிருந்து விடுபட முயன்றபடி சீறிய அவளை மாவை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு இகழ்ச்சியாக சிரித்தான் அவன். ''பத்துத்தரம் சொன்னால் பொய்யும்

மெய்யாகும் என்பதில் உனக்கு முழுநம்பிக்கை போலத் தெரிகிறது. ஆனால் நான் கொஞ்சம் வித்தியாசமான ஆள். நீ நூறுதடவை சொன்னாலும் நம்பமாட்டேன்'' என்று கூறி அவளை விடுவித்தான்.

''பையிலிருக்கும் திருட்டுப் பொருட்களை எல்லாம் மேசை மேல் கடைபரப்பு. முதலில் என்னுடையவற்றைப் பார்த்து எடுத்துக்கொள்கிறேன். ம்.... சீக்கிரம்'' என்றான் அதட்டலாக.

அவள் குற்றவாளிதான் என்று நிச்சயமாக எண்ணி விட்டானே! அந்த அளவுக்கு அவளிடம் அவனுக்கு என்ன வெறுப்பு? எதற்காக?

''என்ன பார்க்கிறாய்? இந்த முழிக்கெல்லாம் ஏமாறுகிற ஆளா நானல்ல. மரியாதையாகப் பையில் உள்ளதை எடுத்துப் போடுகிறாயா, அல்லது'' என்று மிரட்டினான் அவன்.

மேலோட்டமாக அதட்டி மிரட்டுகிற இவன் முகம் பைக்குள் [illegible] இல்லை என்பதை அறியும்போது எப்படி [illegible]?

அவளை முகத்தில் அசடு வழிவதைக் காணும் எண்ணத்தினால் [illegible] பையைத் திறந்து, உள்ளே இருந்ததை எல்லாம் [illegible] கொட்டினாள் அனுபமா.

[illegible] அவன் எதிர்பார்த்தது போல் அவன் முகத்தில் [illegible] அசடு கொட்டிவிடவில்லை.

[illegible] சாதாரணமான இரண்டு நூல் சேலைகளையும் [illegible] பார்த்தவன் கடைசியாக விழுந்த [illegible] கார்டு ''இது என்ன?'' என்று வினவினாள்.

[illegible] விபரம் கொடுத்ததில் நடந்து போய் மிச்சம்

பிடித்த காசு.... இருபத்தைந்து ரூபாய், ஐம்பது காசு இருக்கும். வேண்டுமானால் எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என் றாள் அவள் அல்ட்சியமாக.

அப்போதும் நம்பாமல், ''இந்தச் சேலைகளின் மடிப்பில்... எதற்கும் உதறிக்காட்டு'' என்றான் அவன்.

மற்ற இரு சேலைகளிலும் இருந்த லேசான கிழிசல்களை நினைத்து அனுபமாவின் மனம் ஒரு கணம் குன்றியது. மறுகணமே நிமிர்ந்தாள். பார்க்கட்டும். அதையும் கண்குளிரப் பார்க்கட்டும். நன்றாக வெளிச்சம் படும் இடத்தில் ஒற்றைத்தட் டாகப் பிரித்து விரித்துக் காட்டினாள்.

''இதெல்லாம்'' என்றான் அவன் யோசனையோடு.

''இதெல்லாம் முதல் பார்வையிலேயே உங்கள் ஏளனத்தை ஈட்டித் தந்த இந்தச் சேலைக்கு அடுத்த உடுமாற்றுகள் என்னுடையவை. இது என் சீப்பு, என் கண்ணாடி... இந்த இருபத்தைந்து ரூபாய் ஐம்பது காசு... என் மொத்த சொத்து'' என்றாள் அவள் ஏளனத்தைத் தனதாக்கி.

தாடையை ஒருதரம் தடவிவிட்டு, ''தவறாக எண்ணிவிட் டேன் போலத் தெரிகிறது'' என்றான் அவன். ''ஆனால் நீயும் தவறாகத்தான் ஊகித்திருக்கிறாய். முதலில் நான் ஏளனமாகப் பார்த்ததற்குக் காரணம் உன் ஏழ்மை அல்ல. இந்தச் சுற்று வட்டாரமும் சூழ்நிலையும்.... போகட்டும். இங்கே ஏன் எப்படி வந்து சேர்ந்தாய்.... என் அறைக்குள் ஏன் வந்தாய்? அதுவும் ஒளிந்து மறைந்து நின்றாயே, ஏன்?'' என்று விசாரித்தான் அவன்.

நிதானமுற்றிருந்த அவனது குரல் அவளுக்கு ஓரளவு நம்பிக்கை ஊட்டியது. மேலும் அவனது உதவியும் கிட்டும்விதமாக எப்படிப் பேசுவது என்று வேகமாக யோசித்துவிட்டு, ''நீங்கள் அயர்ந்து தூங்க வேண்டிய நேரம், என்னால் உங்கள் தூக்கம் கெட்டுவிட்டது'' என்று சற்று உபசாரமாகத் தொடங்கினாள்.

''தூக்கமா அதை நீ கெடுத்தாயா?'' என்று லேசாகச் சிரித்தான் அவன்.

அந்தச் சிரிப்பில் திகைத்தாள் அனுபமா. இவனுக்கு என்ன கூச்சம் இருக்கக்கூடும்? தூங்கக் கூட முடியாமல்?

அவன் தொடர்ந்தான். ''பார், இன்றைக்கு இது வரை எனக்குச் சிவராத்திரி தான். நித்திராதேவி என்னோடு காய் [illegible]விட்டாள் போல, பன்னிரண்டு மணி வரை படுக்கையில் [illegible] பார்த்துத் தோற்றுப் போனேன். ஒரு மணி நேரம் [illegible]யே நடந்து பார்த்தேன். அதுவும் பயனில்லை. கடுநீரில் [illegible]டு, சூடாகப் பால் குடித்தால் தூக்கம் வரும் என்று [illegible] அம்மா சொல்வார்கள். சரி, அதையும்தான் விடுவானேன் [illegible] பையனுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டுக் குளிக்கப் [illegible] நான் குளித்துக் கொண்டிருந்தபோது தான் நீ [illegible] வேண்டும். சரிதானா?'' என்று வினவினான்.

[illegible] என்று தலையாட்டினாள் அனுபமா.

[illegible] கண்டுவிட்ட பிறகு இதை யூகிப்பது கடினமல்ல [illegible] ஆனால் அவ்வளவு கனமான திரையின் மறைவில் [illegible] சத்தம் கூட இல்லாமல் நின்றதை அவன் கண்டு [illegible] அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

[illegible] என்ற மில்லை'' என்றான் அவன்.

[illegible] போகிறபோது கதவு திறந்த சத்தம் கேட்டது. [illegible] விட்டுச் செல்லாமலே போய்விட்டான்

என்று நினைத்தேன். அப்புறமாய் அவன் வந்து அழைத்ததுமே ஏதோ விஷயம் என்று நினைத்தேன். அவனை அனுப்பி விட்டுக் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தபடி கவனித்தேன். திரை ஓரமாய் உன் காலின் வரி வடிவம் தெரிந்தது. ஒரு பெண்ணின் பாதம். ஒரு பெண்ணைச் சமாளிக்க முடியாதா என்றுதான் அவனை அனுப்பிவிட்டு உன்னை அழைத்தேன். எல்லாக் குற்றவாளிகளுக்கும் போலத் திருட வருகிறவர்களுக்கும் ஏதாவது காரணக் கதை இருக்குமே. கேட்டால் மனதுக்குக் கொஞ்சம் மாறுதலாக இருக்குமே என்று நினைத்தேன். பசித் திருட்டு என்றால் கொடுப்பதற்காகப் பால் கூட வரவழைத் தேன். உனக்குப் பசியாயிருந்தால் அதைக் குடித்துவிட்டு உன் கதையைச் சொல்கிறாயா?''

இவன் அவளிடம் மனமிரங்கி அவளது கதையைக் கேட்க வில்லை; மனிதருக்கு மனிதராய் உதவும் அக்கறையோடும் விசாரிக்கவில்லை. சும்மா ஒரு பொழுதுபோக்கிற்காக அவ னது மனதை உறுத்திக் கொண்டிருக்கும் ஏதோ ஒன்றைச் சற்று மறந்திருக்கும் விருப்பத்தினால் கதை கேட்கிறான் என்பதை அவனது அசட்டையான குரலும் பேச்சும் அவளுக்கு உணர்த்தின. ஆனால்....

''உம்... உட்கார் உட்கார்ந்து சொல்லு. ஏதோ சித்தி என்றாயில்லை? உன் அப்பாவின் இரண்டாவது மனைவியா? கொடுமைக்காரியா? அவள் கொடுமை செய்தால் உன் அப்பா வாயே திறக்கமாட்டாராக்கும்? தலையணை மந்திரம் ரொம்ப பலம் போல'' என்று கிண்டலாகக் கூறிச் சிரித்தான் அவன்.

அவனது சிரிப்பு நிற்கும் வரை அவனை வெறித் பார்த்துவிட்டு, ''என் பத்தாவது வயதில் ஒரு விபத்தில் பெற்றோர் இருவரும் இறந்து போனார்கள். அதிலிரு சித்தப்பா வீட்டில் வளர வேண்டியதாயிற்று'' என் உணர்ச்சியற்ற குரலில் அவள்.

அவனது கண்களில் இருந்த கேலிச் சிரிப்பு மறைந்தது. ஒருதரம் விழிகளை மூடித் திறந்தவன், ''சாரி'' என்றான். ''மெய்யாகவே வருந்துகிறேன்.... பத்து வயதில்! எவ்வளவு துன்பமாக இருந்திருக்கும்!'' என்றான் இறங்கிய குரலில்.

அந்த இழப்பு அப்போதுதான் போலத் தொண்டையை அடைத்துக் கண்ணோரம் கரித்தது அனுபமாவுக்கு.

இவன் முன்னிலையில் தன் மனம் சட்டெனக் கட்டுப் பாட்டை இழப்பது போலத் தோன்றியது அனுபமாவுக்கு. அவமானத்தில் அதிகப்படியாகக் குன்றினாள்; கோபத்தில் அதிகப்படியாகக் கொதித்தாள். இப்போது அழுகையும் பொங் கிக்கொண்டு தான் வந்தது.

பெரும்பாலும் அவனிடம் காணப்பட்ட கடினம் நினைவு வர, அவன் முன்னிலையில் கண்ணீர் விட மனமற்று வெகு சிரமப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டாள்.

சிறு மவுனத்தின் பின் அவனே எடுத்துக் கொடுத்தான். ''அம்மா?''

அவளை மீறிய தோரணை எரிச்சலூட்ட, ''அதெல்லாம் [illegible] நா... நானாகத்தான்... என்று தொடங்கினாள்

''[illegible]'' என்ற அவன் முகத்தில் மீண்டும் பழைய [illegible] [illegible] தலை தூக்கின.

[illegible] தவறாக எண்ண அவனுக்குத்தான் எவ்வளவு [illegible]

[illegible] நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை'' என்று [illegible] பொழுதிற்கு இடம் கொடாமல் மடமடவென்று [illegible] சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

''நீ, சொல்லுகிறபடி அந்த ரகுபதி... நீ வழியில் நின்ற போது சாவி வாங்கி வந்தவன் தானே?'' என்று வினவியவன் அவள் தலையாட்டவும், ''அவனைப் பார்த்தாலே குள்ளநரித்தனம் தெரிகிறது. இருந்திருந்து அவனை நம்பி அவனோடு எப்படிக் கிளம்பினாய்?'' என்று வியந்தான்.

அவள் தன்னையே கேட்டுக்கொண்டுவிட்ட கேள்விதான். ''இங்கே தெரிகிற மாதிரி அங்கே ரகுபதியின் உண்மை உருவம் வெளிப்படையாகத் தெரியவில்லை. நல்லவர் போலத் தான் தோன்றியது'' என்றாள் குன்றிய குரலில்.

அவன் பார்வை இலக்கற்று வெறித்தது. ''உண்மைதான்... பச்சோந்தி போல அந்தந்தச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நடிப்பவர்களைக் கண்டு பிடிப்பது எளிதல்லதான்'' என்றான் ஏதோ கவனமாக.

தன் நிலையை விளக்கி அவனது உதவியைப் பெற்று விடும் ஆர்வத்துடன், ''அதுமட்டுமல்ல, மிஸ்டர்....'' என்று அவள் ஒரு கணம் தயங்கியபோது, ''வித்யாதர். என் பெயர் வித்யாதரன்'' என்றான் அவன்.

பதிலுக்கு அவளது பெயரைத் தெரிவித்தாள் அனுபமா. உடனே தொடர்ந்து, ''அங்கே இருந்தது புதைகுழி மிஸ்டர் வித்யாதரன். எதையேனும் பற்றி வெளியேறியே ஆக வேண்டிய நிலை. பழுதா பாம்பா என்ற ஆராய்வதற்கு நேரமும் இல்லை. வேண்டாம் என்று ஒதுக்கிவேறு [illegible] வழியும் இல்லை'' என்றாள்.

ஆனால், ''என்ன பெரிய புதைகுழி?'' என்றான் [illegible] வித்யாதரன் அலட்சியமாக. ''நீ ஒரேடியாக முடியாது என் உறுதியாக நின்றால், உன்னைக் கையைக் காலைக் கட்டி மணவறையில் வைத்துத் தாலி கட்டி விடுவார்கள்? சூட் கோல் என்றாய். சூடுபட்டுத்தான் ஆகவேண்டுமா? உன் [illegible] என்றால் உன்னைவிடக் கிட்டத்தட்ட இருமடங்கு [illegible]

அதிகமானவளாகத்தானே அவள் இருக்க வேண்டும்? அவளை எதிர்க்க உன் உடம்பில் பலம் இல்லாமல் போவானேன்? திட்டுவாள், கத்துவாள் என்றால் உன்னாலும் பேச முடியும்தானே? சுருக்கமாகச் சொல்லப் போனால் நீயும் முதுகெலும்பு உள்ள மனுஷிதானே? நிமிர்ந்து நிற்பதற்கென்ன?'' என்று ஓர் அழுத்தத்துடன் அவன் கேட்கையில் அப்படித்தான் செய்திருக்க வேண்டுமோ என்று தோன்றியது அவளுக்கும்.

சொன்னவனும் தான் உண்மையென்று நம்பியதைத்தான் சொன்னான். கேட்டவளுக்கும் அது சரியே என்றுதான் தோன்றியது.

ஆனால் கையைக் காலைக் கட்டிக் கூடக் கல்யாணம் செய்வார்கள். அதற்கு மேலும் போவார்கள் என்பதை இருவரும் பிறகுதான் அறிய நேர்ந்தது.

7

[illegible] வித்யாதரன் பேசப் பேச அனுபமாவுக்கு [illegible] அவமானமாக இருந்தது.

[illegible] அவளாலும் பேச முடியும்தானே. சித்தி [illegible] என்று குன்றிப் போய் குனிந்து குனிந்து கொடுத்த [illegible] இப்படி ஓங்கி ஒரு போடு போட அவளுக்குத் [illegible] பதிலுக்குத் திரும்ப இவளும் கத்தியிருந்தால் [illegible] அடியோடு மதிப்பு போய் விடுமே [illegible] சித்தி அடங்கியிருப்பாள்தானே!

[illegible] அவள் பேசினாலும், என் அப்பாவின் [illegible] கொடு, இல்லா விட்டால் கோர்ட்டுக்குப்

போவேன் என்று மிரட்டினால் தானாகச் சித்தி வாய் மூடிப் போயிருப்பாள். இதையெல்லாம் கொஞ்சமும் நினையாமல், என்னமோ வேறு வழியே இல்லாதது போலக் கலங்கி, நடுங்கி..... சை... அவன் சொன்ன அந்த முதுகெலும்பு இருப்பதே மறந்து விட்டது போல.

இனி அங்கேயே இருந்து எதிர்த்துப் போராட வேண்டியது தான் என்று நிமிரும் போதுதான் முதலில் இங்கிருந்து தப்பியாக வேண்டுமே என்பது மீண்டும் மனதில் உறைத்தது.

ஆனால் அவளாகவே போராடியிருக்க வேண்டும் என்பவனிடம் எப்படி உதவி கேட்பது என்று அவள் தயங்கியபோது அவனே தொடர்ந்தான். ''அப்படியே உன் சித்தப்பா, சித்தி இருவருமாகச் சேர்ந்து உன்னைப் பிடித்து சூடு போட்டு விட்டார்கள் என்றே வை. ஒன்றிரண்டு சூடுபட்டால் தான் என்ன? அதற்குப் பயந்து இந்த நரகத்திலா விழுவது?''

'நரகம் என்று தெரிந்தா வந்து விழுந்தேன்' என்று எழுந்த கேள்வியை அடக்கி, ''விழக்கூடாது என்பதற்காகத்தான் உங்கள் உதவியை வேண்டுகிறேன், மிஸ்டர் வித்யாதர்'' என்று ஒருவழியாகக் கேட்டு விட்டாள் அனுபமா.

ஆனால், ''என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?'' என்று அலட்டிக் கொள்ளாமல் கேட்டான் அவன். ''போலீசுக்குத் தகவல் கொடுப்பது என்றால் அதில் பயன் இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. அங்கே, உள்ளே ஆள் இல்லாமல் இவர்கள் இப்படி வெளிப்படையாகத் தொழில் நடத்த முடியாது.''

''மற்றபடி... சினிமாக் கதாநாயகன் போல வில்லன் களை எல்லோரையும் தனி ஆளாக நின்று அடித்து போட்டுவிட்டு உன்னை இங்கிருந்து மீட்க வேண்டும் என்றால்... அது முடிகிற காரியமா, சொல்லு? நீ சொல்லும் அளவில் பார்த்தாலும் ஐந்தாறு பேர் ஆகிறது. சினிமாவில்

மாதிரி இங்கே ஓர் ஓர் ஆளாக வந்து உதை வாங்கிச் செல்லமாட்டார்கள் இவர்கள். ஐந்தே நிமிடத்தில் என்னை அடித்துப் போட்டுவிட்டு உன்னையும் கோழிக்குஞ்சைப் பருந்து கவ்வுகிற மாதிரி கொண்டு போய் விடுவார்கள். இதற்குப் போய் நான் வேறு இதில் தலையிட்டு அனாவசிய மாய் தர்ம அடிவாங்க வேண்டுமா, சொல்லு?'' என்று கேட்டான் வித்யாதரன்.

அயர்ந்து போனாள் அனுபமா. ''அ... அப்படியானால் அடிக்குப் பயந்து என்னைக் காட்டிக் கொடுத்துவிடப் போகிறீர்களா?'' என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வினவினாள்.

வியப்புற்று நிமிர்ந்தான் வித்யாதரன். ''காட்டி... சேச்சே... என்னை அவ்வளவு மட்டமாகவா நினைத்து விட்டாய்? இந்த மாதிரி உதவிகளை கேட்டாயானால் உன்னோடு நானும் சேர்ந்து அம்பேல் ஆவது தவிர உருப்படியாக ஒன்றும் நடக்காது என்பதை விளக்கினேன். அவ்வளவுதான். மற்றபடி தனியாக இப்படிப்பட்ட அசிங்கத்துள் மாட்டிக் கொள்வது அவமானம் எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் அவமானம் என்ன செய்ய முடியும்? சொல்லு....''

அலட்சியம் விட்டேற்றியாகவே பேசினாலும், உதவக்கூடும் என்கிற நம்பிக்கை உண்டாகிவிட, அவனிடம் தன் திட்டத்தை விளக்கினாள் அனுபமா.

[redacted] கேட்டிருந்து விட்டு, ''செய்யலாம் தான். [redacted] உடையுடைய அந்த ஆள்... அவன் பெயரென்ன... [redacted] அந்த ரகுபதி உன் பின்னே ஆறு மாதம் [redacted] வைத்தாயே... அவன் உன் இரு சேலைகளையும் [redacted] பார்த்திருப்பான் தானே? பரிச்சயமான சேலையில் [redacted] அவனை முடிவானா?'' என்று வினவினான் வித்யாதரன்.

ரகுபதி முட்டாளும் அல்ல. அந்தச் சேலைகளை இனம் கண்டுகொள்ளாமல் விடக்கூடும் என்று நம்புவதற்கும் இட மில்லை. அந்த இரு சேலைகளிலும் முந்தானைக் கிழிசலையும், கால் ஓரம் நைந்திருந்ததையும் காட்டி ''உன் அழகுக்கு உருமாற்றுக்கே காஞ்சிப்பட்டு கட்ட வேண்டும். கிழிசலைக் கட்டியிருப்பதைக் கண்டு என் மனதில் இரத்தம் வடிகிறது'' என்று வசனம் பேசியவன் அவன். இரண்டில் எந்தச் சேலை என்றாலும் பரவாயில்லையே கண்டு பிடித்துவிடுவான் தான்.

மீண்டும் ஒய்ந்து உட்கார்ந்தாள் அனுபமா.

எழுந்து சென்று, பிளாஸ்கில் இருந்த பாலை கப்பில் ஊற்றி அவள் எதிரே வைத்தான் வித்யாதரன்.

அதைக் கருத்தில் கொள்ளாமல் அமர்ந்திருந்தவளிடம், ''என்னம்மா... இந்த ஓர் ஐடியா உடைந்து போனதால் உலகமே முழுகிவிட்டதாமா?'' என்று கிண்டலாகக் கேட்டான்.

விழிகளை மட்டும் உயர்த்தி அவனை வெறித்தாள் அனுபமா.

தோளைக் குலுக்கி விட்டு, ''உன் திட்டத்துக்கு முக்கியமாக உன் விடுதலைக்கு நான் உதவுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை.... என்றான் அவன்.

''என்னது?''

''முதலில் இந்தப் பாலைக் குடிக்க வேண்டும்.

''ச்சு...'' என்று முகத்தைத் திருப்பினாள் அவள்.

''மெய்யாகத்தான் சொல்லுகிறேன். உன் திட்டத்திற்கு நானால் உதவ முடியும். ஆனால் உன்னைப் பார்த்தால் நாள் பட்டினி மாதிரித் தெரிகிறது. நீ பாட்டில் பசிச் சோர்வு பாதி வழியில் மயக்கம் போட்டு வைத்தாயானால் இருவரும் மாட்டிக் கொள்வோம். அதனால் பாலைக் குடித்து முடி

னால் நான் உதவுகிற விதத்தைச் சொல்லுவேன்'' என்று பெட்டியைத் திறந்தான் அவன்.

சூடு ருசி எதையும் பாராமல் பாலைக் குடித்து முடித்தவளிடம் கப்பை வாங்கி ஒதுக்கமாய் வைத்து விட்டு, அவள் முன்னே ஓர் இளம் சிவப்பு வண்ணச் சேலையைப் போட்டான் வித்யாதரன். பச்சையில் சரிகை பளபளத்த பார்டர். உள்ளே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறு சரிகைப் பொட்டுகள்.

தெய்வப் படங்களில் மகாலட்சுமிக்கு இது போலச் சேலை வரைந்திருக்க அனுபமா கண்டிருக்கிறாள்.

'ரு மந்திரக்காளி' மாடலில் எதிரே வந்து விழுந்த சேலையின் பட்டு வழவழப்பை ஒரு விரலால் தொட்டுப் பார்த்து விட்டு ஆச்சரியத்துடன், ''இது... இது... ஏது?'' என்று விசாரித்தாள் அனுபமா.

மீண்டும் லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். ''இப்படி ஒரு தேவை உனக்கு ஏற்படக்கூடும் என்று யூகித்து முன்னாலேயே வாங்கி வைத்திருந்தேன் என்று நினைத்தாயானால் அது என்னுடைய இன்னொரு தப்பு'' என்று உதட்டைப் பிதுக்கினான்.

''நான் ஒன்றும் அப்படி மடத்தனமாக நினைக்கவில்லை'' பெரிதுக்கென மொழிந்து விட்டு நாக்கைக் கடித்துக் [illegible] அனுபமா.

[illegible] நாகரீகமும் ஏனனமும் அவளது பாணியாக இருக்கலாம். [illegible] அவளுக்கு உதவி செய்ய வருகிறவன். அதை முக்கியமாய் அவள் அவனது உதவியைப் பெற்றாக [illegible] நிலையில் இருப்பவள். அப்படியிருக்க அவனிடம் [illegible] எந்தவகையில் புத்திசாலித்தனம்?

[illegible] யோசி... வந்து இந்தச் சேலை யாருக்காக [illegible] அவர்கள் இந்தச் சேலையை நான்

கட்டுவதை ஒத்துக்கொள்வார்களா... என்று... அதற்காகத்தான் கேட்டேன்'' என்று சமாளிக்க முயன்றாள் அனுபமா.

ஒரு சிறு அமைதியின் பின், ''கேட்டுத் தெரிந்து என்ன செய்யப் போகிறாய்? அப்படி யாரும் ஆட்சேபிக்ககூடும் என்றால் அதற்காக இந்தச் சேலை வேண்டாம் என்று உன் சேலையையே உடுத்திக் கொள்ளப் போகிறாயா?'' பழைய குரலிலேயே கேட்டு அவளை வாயடைக்கச் செய்தான் வித்யாதரன்.

இவனிடம் வாய் கொடுத்ததே தப்பு.

உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தவளைச் சில வினாடிகள் நோக்கியவனுக்கு என்ன தோன்றியதோ, ''இதோ பார்... இந்த மாதிரி அனாவசியக் கவலைகள் உனக்கு வேண்டாம். உன் சங்கடம் மிகப் பெரியது. அதிலிருந்து தப்பிப்பதில் உன் முழு கவனத்தையும் செலுத்து. முதலில் குளியலறைக்குப் போய் இதைக் கட்டிக்கொண்டு வா...'' என்று அனுப்பினான்.

அதன்படி அவளும் மேலே பேசாமல் சேலையை மாற்றிக் கொண்டு வரவும், ''ம்... இந்த சட்டை பொருத்தம் இல்லை போலத் தெரிகிறது. ஆனால் நீதான் முக்காடு போட்டுக் கொள்ளப் போகிறாயே, சட்டை மறைந்து விடும். இப்போதும் நீ தனியே சென்றால் சந்தேகமாகத்தான் இருக்கும். அதனால் உன்னோடு நானும் வருகிறேன். வந்து உன்னை உன் வீட்டில்.... வீடு போவதாக உத்தேசமா, வேறே எங்காவது போகப் போகிறாயா?'' என்று கேட்டான் அவன்.

அவனும் உடன் வருவதாகச் சொன்னதுமே பெருமளவு பயமும் கவலையும் விலகிவிட்டாற்போல இருப்பதை எண்ணி வியந்தபடியே, ''நீங்கள் சொன்னது போல வீட்டிலேயே இருந்து கொண்டு போராடப் போகிறேன்'' என்று சின்னக் குரலில் கூறினாள் அவள்.

''குட்... அதுதான் நல்லது. நம் நாடு இருக்கும் நிலையில் பெண்கள் வீட்டை விட்டு வெளிவருவது அவ்வளவு சரியில்லை தான். அப்புறம் கையில் இருக்கும் வளையல்களைக் கழற்றிவிட்டு இதைப் போட்டுக்கொள், கைகள் கூட வித்தியாசமாகத் தோன்றும்'' என்று சில தங்க வளையல்களை எடுத்துக் கொடுத்தான் அவன்.

தங்கம்!

தயக்கமாக இருந்த போதும் அவன் சொன்ன காரணத்தின் பின்னரும் வேண்டாம் என்று சொல்லி மீண்டும் வாங்கிக் காட்டிக் கொள்ள மனம் இல்லாமல் அவன் கூறியது போலவே செய்தாள்.

வளையல்களை அணியும்போதே உள்ளூர மனம் குறுகுறுத்தது. இந்த நகை, சேலையெல்லாம் இவன் யாருக்காக வாங்கி வைத்திருக்கக்கூடும்? மனைவிக்கு? காதலிக்கு? இவர்களில் யாராயிருந்தாலும் அவன் இவற்றை இன்னொருத்திக்கு அணியக் கொடுப்பதை ஒப்புவார்களா? அது ஓர் அவசியத்துக்கு என்றாலும் கூட.....

''வாருங்கள்...'' என்று அவன் இன்னொரு நகைப் பெட்டியை எடுக்கவும், ''முக்காட்டில் முகத்தோடு கழுத்தும் சேர்ந்துதானே மறையும். அவசியமிராது'' என்று மறுத்தாள் அவள்.

''எதுவும் சரிதான்'' என்று பெட்டியை உள்ளே வைத்து விட்டுத் திரும்பினான் வித்யாதரன். ''கவனி, அனுபமா. நீ [illegible] வருவதைப் பற்றி யாரும் அதிகம் சந்தேகப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். தொழிலுக்குப் புதிது, [illegible] வெட்குகிறாள் என்று எண்ணவும் வழியுண்டு. ஆனால் முகத்தை மறைக்கிற தீவிரத்தில் வழி தெரியாமல் [illegible] கூடாது. அதனால் என் கையை பிடித்துக் [illegible] நடப்பது நலமானால் நல்லது. கொஞ்சம் ஒட்டினாற்போல

வந்தாயானால் இந்த இடத்துக்குப் பொருத்தமாகவும், இருக்கும்... அப்புறம் நீ உன் வீட்டிற்குக் காலை எத்தனை மணிக்குள் போய் விடுவது நல்லது?''

''சித்திக்குக் காலை ஏழு மணிக்குக் காபி கொடுக்க வேண்டும். ஆறு மணிக்குள் வீடு போய்ச் சேர்ந்து விட்டால் நல்லது. வீடு இங்கிருந்து கொஞ்சம் தூரம் அதிகம். ஆட்டோவில் வர ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆயிற்று. அதனால் சீக்கிரமாகவே... வந்து... உங்களுக்கு ரொம்பவும் தொந்திரவு.... கொடுக்கிறேன் சாரி'' என்றாள் அனுபமா தணிந்த குரலில்.

''தொல்லை... என்று ஒன்றுமில்லை. சும்மா போரடித்துக் கிடந்ததற்கு ஒரு வித்தியாசமான பொழுதுபோக்கு. 'த்ரில்' லானதும் கூட'' என்று இலகுவாகக் கூறி அவன் சிரிக்கவும், அவளுக்கும் மனம் கொஞ்சம் லேசாயிற்று.

சினிமா ஹீரோ மாதிரி அடிதடிச் சண்டை போட மாட்டேன் என்று மறுத்த போதும், இப்படித் துணை வருவதில் மட்டும் ஆபத்து இல்லையா? அதற்குத் துணிந்துதான் அவன் துணை வருகிறான் என்ற எண்ணத்திலேயே அவளது நெஞ்சில் நன்றி நிறைந்தது.

செய்வதைத் திருந்தச் செய்கிறவனாக, வித்யாதரன் ஒருதரம் வெளியே சென்று நோட்டமிட்டு விட்டு வந்தான்.

''உன்னைத் தேடும் பரபரப்பு ஓட்டலுக்குள் அடங்கி விட்டது. ஆனால் சுற்றுமதிலை அடுத்து வெளியே ஒன்றிரண்டு 'டார்ச்' வெளிச்சம் பார்த்தேன். ஏதேனும் மரங்களில் ஏறியோ, குத்துச் செடிகளின் பின்னேயோ ஒளிந்திருக்கிறாயா என்று தேடுகிறார்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் அங்கே தேடும்போதே நாம் வெளியேறி விடுவது நல்லது, கிளம்பு'' என்று கூறி, டிரஸ்சிங் டேபிளில், கட்டிலில் என்று வெளியே கிடந்த அவனது பொருட்களை எல்லாம் எடுத்து பெட்டியில்

அடைக்கத் தொடங்கினான்.

குளியலறையில் பார்த்தது நினைவுவர, அங்கே சென்று, அங்கிருந்த அவனது ஷேவிங் செட், சோப் போன்றவற்றை எடுத்து வந்து கொடுத்தாள் அனுபமா.

'குட்' என்று மெச்சிவிட்டு அவற்றையும் உள்ளே அடுக்கினான் அவன். ''உன் பையையும் உள்ளேயே வைத்து விடலாம். அதுவும் வேறு யார் கண்ணிலும் பட வேண்டாம்'' என்று அதையும் உள்ளே வைக்கையில் அனுபமாவுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று.

''வந்து.... நீங்கள் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்தால் [illegible] காலி பண்ணுகிறீர்களோ என்று சந்தேகப்பட மாட்டார்களா? கணக்கு முடிக்க வேண்டுமல்லவா?'' என்று கேட்டாள்.

''[illegible]போது கீழே போனபோது அதற்கு ஏற்பாடு செய்து [illegible]ன்...'' என்றவன் ஒரு கோணல் பார்வையுடன், ''நான்கே படுக்கை வசதியாக இல்லை. இரவைத் தாஜில் [illegible], நாளை வருவதாகச் சொல்லியிருக்கிறேன். [illegible] பணம் நாளைக்குச் சேர்த்து கொடுத்திருப்பதால் [illegible] விட்டான்'' என்று சிரித்தான் அவன்.

[illegible] பொருள் புரியவும் அவள் முகம் சிவந்தது. [illegible] பொய்யும் அவளது நன்மைக்காகவே என்[illegible] ஆத்திரப்படுவது?

[illegible] கொண்டு அவள் நிற்பதை கேலியாக நோக்கிய [illegible] குலுக்கி விட்டுக் குனிந்து பெட்டியை அழுத்தி [illegible]

[illegible] ஒரு கையில் தூக்கிக் கொண்டு மறு கரத்தை [illegible] நீட்டினான் வித்யாதரன். ''கிளம்பலாமா? [illegible]''

[illegible] மேல் நடவடிக்கை காட்டை நடந்து கடக்க வேண்டிய நேரம்

வந்து விட்டதை உணர்ந்து நெஞ்சு தடதடக்க, தில்லிட்டிருந்த தன் கையை அவன் கையில் வைத்தாள் அனுபமா.

அவனுக்கு அப்படிப்பட்ட பயம் ஒன்றும் இல்லையோ, என்னவோ? அவளது பயத்தை உணர்ந்து அழுத்திய அவனது கதகதப்பான பிடியில் அவளது கை நடுக்கம் மெல்ல அடங்கியது. அதற்குமேல் அவன் சொல்லத் தேவையிராமல் அவளாகவே அவனை ஒட்டிக்கொண்டு நடக்கத் தொடங்கினாள்.

யாரும் அவர்களைத் தடுத்து நிறுத்தாவிட்டாலும் கூடக் கார் அந்தக் காம்பவுண்டைக் கடந்து அடுத்திருந்த செடி கொடிப் பகுதியையும் கடந்து சாலையை வந்தடைந்த பிறகு தான் அனுபமாவுக்கு ஒழுங்காக மூச்சு விட முடிந்தது.

நெடுஞ்சாலைக்கு வந்து சேர்ந்ததும், சித்தப்பாவின் வீடு இருந்த பகுதியையும் செல்லும் வழியையும் உரைத்துவிட்டு அப்பாடி என்று இருக்கையில் சாய்ந்தாள்.

எந்தத் தீமையும் அணுக முடியாத இந்தக் கார்ப் பயணம் இப்படியே போய்க் கொண்டே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

''தூக்கம் வந்தால் அப்படியே சாய்ந்து கொண்டு தூங்கு. உன் வீடு இருக்கும் பகுதி வந்ததும் எழுப்புகிறேன்'' என்று அவன் குரல் கேட்கவும் சற்றுத் திடுக்குற்று நிமிர்ந்தாள் அவள்.

அவன் சொன்னது போல உறங்கிவிட உடலும் கண்ணும் கெஞ்சியபோதும் மூளை வேறு வழியில் சிந்தித்தது.

இந்தக் காரை அவனே ஓட்டுகிறான். அப்படியானால் அந்த ஓட்டலைத் தேடியும் அவனாகத்தான் சென்றிருக்க வேண்டும். யாரோ டாக்சி டிரைவர் இவனுக்கு இடம் புரியாமல் கொண்டு போய்ச் சேர்த்து விட்டான் என்று சொல்வதற்கு இல்லை. அங்கே ஏன் போனான் என்று யூகிக்க பிரமாத மூளை

தேவையில்லை.

அப்படிப்பட்ட ஒருவனை எந்த அளவுக்கு நம்பி உறங்குவது? எச்சரிக்கையுடன்தான் இருக்க வேண்டும்.

''தூக்கம் வரவில்லை'' என்று முணுமுணுத்தபடி முன்னுச்சியிலிருந்து நெற்றியில் விழுந்து புரண்ட கூந்தல் சுருளை ஒதுக்கிவிடக் கையைத் தூக்கியபோது பழக்கமற்ற கனத்துடன் கலகலத்து தாமிருப்பதைக் தங்க வளையல்கள் காட்டிக் கொண்டன.

அய்யோடா என்று அவசரமாகக் கழற்றிய படியே ''இதை எங்கே வைப்பது?'' என்று வினவினாள் அனுபமா.

''என்ன அவசரம்? வளையல் மட்டும் உனக்கு உரிமையற்றது அல்லவே. சேலையை என்ன செய்யப் போகிறாய்? அதையும் காரிலேயே அவிழ்த்து விடப் போகிறாயா?''

கலகலென்று விழுந்த கேள்வியில் விக்கித்துப் போனாள் அனுபமா.

என்ன மாதிரி மனிதன் இவன்? காப்பாற்றி அழைத்து வந்தான் என்று பார்த்தால் வலிக்கக் குத்துகிறானே! ஒரு [illegible] அவனிடம் ஐயம் கொண்டது புரிந்து விட்டதோ?

''இல்லை... அங்கே போனதும் நிலைமை எப்படியிருக்கும் [illegible] அதனால் காரில் சும்மா இருக்கும் நேரத்தில் கழற்றி [illegible] என்று...''

[illegible] முன்னே இருக்கும் 'கம்பார்ட்மென்'டைத் திறந்து [illegible]'' என்றான் அவன் பாதையில் கவனமாக.

[illegible] சொல்வதைச் செய்து விட்டு இடப்புறம் திரும்பி [illegible] அனுபமா.

[illegible] சிறு நேரம், பிறகு தனியாகப் போராட வேண்டும். [illegible] நரவும் சித்தி அஞ்சப் போவது இல்லை.

அவளும் அஞ்சிவிடக் கூடாது. போலீசு, கோர்ட்டு என்று மிரட்டி அவர்களை அடக்க வேண்டும் அடங்குவார்களா?

''உனக்குப் பெரிய வரவேற்பு காத்திருப்பது போலத் தோன்றுகிறது''

திடுமென அவன் குரல் கேட்கவும் திடுக்குற்றுத் திரும்பிய போது அவள் கண்ணிலும் அதுபட்டது. அவள் அணைத்து வைத்திருந்த விளக்குகள் எல்லாம் அவள் வீட்டில் எரிந்து கொண்டு இருந்தன.

வாயிலில் சித்தி சித்தப்பாவோடு மேலும் இருவர் நின்றிருந் தனர். அவர்களில் ஒருவர் அழகிய மணவாளப் பெருமாள்.

அருகில் இருப்பவளுக்கு உள்ளே உதறுவதைச் சற்றும் உணராதவன் போல காரின் வேகத்தைக் குறையாமலே வீட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்தினான் வித்யாதரன்.

காரைக் கண்டு திகைத்த தனபாக்கியத்தின் கண்களில் உள்ளிருந்த அனுபமா படவும், பாய்ந்து வந்து, கார்க் கதவைத் திறந்து, அவளை வெளியே இழுத்துப்போட்டாள். ''அடி, அவ்வளவு திமிர் இருக்குதாடி உனக்கு? இந்தத் துணிச்சல் இருக்குமின்னு தெரிந்திருந்தால் கல்யாணம் வரை உன்னைக் கையைக் காலைக் கட்டிப் போட்டிருப்பேனே. இப்போ உன்னை என்ன செய்கிறேன், பார்'' என்று அனுபமாவின் முதுகில் ஓங்கி ஓர் அறை வைத்தாள்.

காரிலிருந்து இழுபட்ட வேகத்தில் கீழே விழுந்து எ முயன்று கொண்டிருந்த அனுபமா இந்த அறையில் மீண்டு தடுமாறி விழுந்தாள்.

''இரண்டாம் ஆட்டம் முடிந்து வருகிறப்போ இ பொண்ணு ஒருத்தனோடு ஆட்டோவிலே போனாள்னு சான் சொன்னானென்று வந்து பார்த்தது நல்லதாய்ப் போ இனிமேலாவது இவள் கையைக் காலைக் கட்டிப் போடு

விடிந்தால் ஒரு முகூர்த்தம் இருக்குது. கை, கால் அவிழ்க்கா மலே மணமேடையிலே வைத்து தாலி கட்டினதும் அப்படியே என் ரூமிலே கொண்டு வந்து போட்டு விடுங்கள். அப்புறம் எப்படி ஓடுகிறாள் என்று நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று வீராப்பு பேசினான் அந்த ஆசை நரைக்காத நரை மீசைக் கிழவன்.

''அதுதான் சரி'' என்று நால்வருமாக, ''வேண்டாம் நான் மாட்டேன்'' என்று பதறியபடி விலக முயன்ற அனுபமாவை அலையக் குலைய இழுக்கையில் ''ஒரு நிமிடம்'' என்ற ஓர் அழுத்தமான குரல் அவர்களைச் சற்று தேக்கியது.

ஒரு பேதைப் பெண்ணிடம் வீரம் காட்டியவர்கள் காரை விட்டு இறங்கி, நிதானமான நடையுடன் நெருங்கி வந்த பார்ட்ட சாட்டமான ஓர் ஆண்மகனைக் கண்டதும் சற்று மலைத்து நோக்கினர்.

அருகில் வந்து நின்று, ''திருமணமான பெண்ணுக்குத் திருமணமும் கல்யாணம் செய்ய முயன்றால் சிறைக்கும் போக வேண்டியிருக்கும் என்பது உங்களில் ஒருவருக்கும் தெரி யாதா? யாராவது அவள் கழுத்தைப் பார்த்தீர்களா? நேற்றே திருமணம் முடிந்துவிட்டது. உங்களிடம் ஆசி பெற மட்டும் நான் நான் அவளை இங்கே அழைத்து வந்தேன்'' என்றான் [illegible]தமுடன் பிசிறற்று.

[illegible]களைப் போலவே அனுபமாவும் அவன் பேச்சில் [illegible] போனாள்.

8

சித்தி - சித்தப்பாவுடன் போராடி அந்தப் பொருந்தாத் திருமணத்தை நிறுத்த வேண்டும்; நிறுத்த முடியும் என்று உண்மையாகவே நம்பித்தான் அனுபமா வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

எடுத்த எடுப்பிலே தனபாக்கியம் அவளைப் பிடித்து இழுத்துத் தள்ளி அடித்த போது அனுபமா ஒன்றும் ரொம்பவும் பயந்து போய்விடவில்லை.

சித்தியின் சினம் எதிர்பார்த்த ஒன்றுதான். காலைக் காபியின் பின்னர் சந்திக்க நினைத்தது. இப்போதே தொடங்கி விட்டது என்றுதான் எண்ணினாள்.

சித்தியின் முரட்டுத்தனத்தில் தடுமாறி விழுந்தபோதும் கூட அவள் கலங்கி விடவில்லை. அவளது மனதில் இருந்த திடம், பல நாட்களாகப் பயமும் கவலையுமாக அரைகுறை உணவும், உறக்கமுமாக வலுவிழந்த உடலில் இல்லாததால் சித்தியின் பலம் மிஞ்சித் தெரிகிறது, அவ்வளவே என்றுதான் நினைத்தாள்.

அவளிடம் தான் இப்போது மன உறுதி என்னும் மகா சக்தி இருக்கிறதே, அது போதும் போராடி ஜெயிக்க என்று நம்பி, மறுப்பைமுடிந்த அளவு திடமாகவே தெரிவித்தாள்.

ஆனால் அவளது பேச்சைச் சற்றும் லட்சியம் செய்யாமல் கை காலைக் கட்டி... என்று அவர்கள் செயல்படத் தொடங்கவும் ஒரேயடியாய் அரண்டு போனாள் அவள். நெறிமுறைகள் அஞ்சாத இந்தச் செந்நாய்க் கூட்டத்தில் திரும்பவும் மாட்டி

கொண்டு விட்டோமே என்று கலங்கி, ''மாட்டேன், முடியாது'' என்று கதறிய போது, உடன் வந்த வித்யாதரின் நினைவு அவளுக்குக் கொஞ்சமும் இருக்கவில்லை. அவனாக ''ஒரு நிமிடம்'' என்று குரல் கொடுக்கும் வரை.

அவனது குரல் கேட்ட பிறகும் கூட அவன் தன்னைக் காப்பாற்றி விடக்கூடும் என்ற நம்பிக்கை ஒன்றும் பெரிதாக பிறந்து விடவில்லை.

ஐந்தாறு பேருடன் தனியே போராட மறுத்தவன் இப்போது நாலு பேருடன் தனியாகச் சண்டையிடுவானா? அதிலும் சித்தி இரண்டு ஆண்களுக்குச் சமம் என்பதைஅவள் அனுபமாவை இழுத்துப் போட்டதில் இருந்தே ஊகித்திருப்பானே! அதற்குப் பிறகு வித்யாதரனாவது பலப் போராட்டத்தில் இறங்குவதாவது?

ஒரு நொடிப்பொழுதில் அவள் மனதில் எண்ணம் ஓடும் போதே, அவன் நிதானமாக அருகில் வந்து நின்று யாரோ திருமணமான பெண்ணைப் பற்றி பேசத் தொடங்கினான்.

[illegible] இக்கட்டான நேரத்தில் இது என்ன வெட்டிப் பேச்சு என்று அவள் அலுப்புற்றபோது மற்றவர்கள் அவளை அவள் [illegible]தை ஆராய்வதை உணர்ந்து தானும் குனிந்து பார்த்தாள்.

[illegible]யிலில் ரகுபதி கொடுத்து, அவளே தனக்குத் தானே [illegible]ருந்த மஞ்சள் கயிறு, சற்று முன் நடந்த போராட்டத்தில் [illegible]யிலிருந்து வெளியே வந்து, வேகமாகப் பரவி [illegible]யின் வெளிச்சத்தில் பளிச்சென்று தெரிந்தது.

[illegible]தரன் என்ன சொல்கிறான் என்பது புரிபட அதிர்ந்து [illegible] நோக்கினாள்.

[illegible] பெரிதாக்கப்பட்ட பார்வையில் இருந்த எச்சரிப்பை [illegible] பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

[illegible] பரிமாறலைச் சற்றும் கவனியாமல்

''ஆங்!'' என்று அதிர்ந்து போய் நின்றது வரவேற்பு கமிட்டி. திகைத்து நின்ற நால்வரில் முதலில் சுய நிலையை அடைந்தவள் தனபாக்கியம்தான்.

ஏமாற்றமே உருவாகத் தாடை தொங்கி நின்ற மணவாளப் பெருமாளிடம் ஓடி, '' எல்லாம் சும்மா, மாப்பிள்ளை, புளுகு. இம்மா பெரிய கார் வைத்திருக்கிறவன்; இளவயசு; இவனுக்கு வேறே பெண்ணே கிடைக்காமல் இவளைக் கட்டிகிட்டா னாமா? அப்படிக் கட்டினாலும் நாமெல்லாம் ஒத்துவிடு வோமா? முதல்லே அதை அறுத்தெறிந்துவிட்டு நீங்கள் தாலியைக் கட்டுங்கள், மாப்பிள்ளை'' என்று படபடத்தாள்.

தூக்கம் கலைந்தாற்போல உலுக்கிக் கொண்டார் மணவா ளப் பெருமாள். ''எனக்கு முதலிலே ஒன்று தெரிந்தாக வேண்டும். இந்தாய்யா, நீ அவளுக்குத் தாலி மட்டும் தான் கட்டினாயா? இல்லை.... தொட்டு... கிட்டு.... இராத்திரி....'' என்று எண்ணியதைக் கேட்க முடியாமல் இழுத்தார்.

வித்யாதரனின் புருவங்கள் உச்சி மேட்டுக்குச் சென்றன. கைவந்த கலையான ஏளனப் பார்வையுடன், ''திருமணம் நடந்தது நேற்று என்றேன். ஆசிபெற வந்திருப்பதோ இன்று காலையில். இதற்கு மேல் கேள்விவேறு கேட்பதென்றா உங்கள் மூளையை மியூசியத்தில் வைக்கவேண்டும்'' என எகத்தாளமாக மொழிந்து விட்டு, அனுபமாவை நெருங் கையை நீட்டி, ''எழுந்திரு'' என்றான்.

விழுந்தவள், பாதி எழுந்த நிலையிலேயே இருப்ப அப்போதுதான் உணர்ந்தாள். கூடவே அவனது குறிப்பை உணர்ந்து, அவனது நீட்டிய கரத்தைப் பற்றி எழுந்து அவ ஒண்டி நின்றாள்.

மணவாளப் பெருமாளுக்கு வேறு விளக்கம் இருக்கவில்லை போலும். ''இதோ பாருங்க, தனபா

தம்மா, எச்சில் இலையிலே சோறு தின்கிறவன் நான் இல்லை. உங்கள் பெண் இல்லாட்டி எனக்கு வேறெ கிடைக்காமல் போகாது. முதல்ல நான் தந்த பட்டு, சங்கிலி, பணம், மான நஷ்டத்துக்காக மேலே ஒரு பத்தாயிரம் எல்லாம் ஐந்தே நிமிடத்தில் என் கைக்கு வந்து சேரவேணும். இல்லாவிட்டால்'' என்றார் மிரட்டலாக.

''அய்யோ, நான் தர மாட்டேன்'' என்று கிரீச்சிட்டாள் தனபாக்கியம். ஆத்திரத்துடன் அனுபமாவைப் பார்த்து, '' பாவி! பாதகி, பதினேழு வருடமா பட்டைச் சங்கிலி போட ஆசைப்பட்டேன். இன்னும் என்னென்ன நினைச்சிருந்தேன்! எல்லாத்தையும், நாசம் பண்ணிட்டியேடி, பாவி! உன்னை... உன்னை...'' என்று சுற்று முற்றும் பார்த்தவள் அங்கே கிடந்த துடைப்பத்தின் விறகுக் கட்டையை எடுத்து ஓங்கியபடி மைத்துனர் மகளை நெருங்கினாள்.

ஆனால், அனுபமாவைத் தன் பின்னே நகர்த்தி விட்டு, தன் முழு உயரத்துக்கு வித்யாதரன் நிமிர்ந்து நிற்கவும், தயங்கி, [illegible] எத்தனை நாளடி உனக்குச் சோறு போடுவான். [illegible] நாலே நாளில் உன்னை நடுத்தெருவுக்கு அனுப்பாட்டி [illegible] நாக்கை அறுக்கிறேன்'' என்று சூளுரைத்தாள்.

[illegible]தும் பேசாமல் ஓர் இகழ்ச்சியான முறுவலுடன் அவன் [illegible] போல் நிற்கவும் மேலே என்ன சொல்வது என்று [illegible] மணவாளப் பெருமாளிடம் திரும்பினாள். ''இந்தப் [illegible] நாங்களா இந்த ஆள் கூட அனுப்பினோம், [illegible]தைத், திரும்பித் தரத்துக்கு? எங்களாலே வஞ்சனை [illegible] இனி இவளை இந்த வீட்டுப் படி ஏற்றமாட் [illegible] மறுபடி இந்த ஆளை அடித்துப் போட்டு விட்டுப் [illegible] உங்கள் வீட்டுக்கு இழுத்துப் போகிறதோ, இல்லை [illegible] போகிறதோ உங்கள் இஷ்டம்.''

[illegible]தும் குடிமுழுகலை. அய்யா கையைக்

காலைப் பிடித்து, மன்னிப்பு கேட்டுகிட்டு அவர் வீட்டிலே ஒரு மூலையிலே விழுந்து கிட... இல்லாட்டா எங்கேயாணும் கிணறு குளம் பார்த்து விழுந்து சாவு. மற்றபடி சித்தி சித்தின்னு இந்த வீட்டுப் படி ஏறினே கொலை விழும்'' என்று மகளை மிரட்டிவிட்டு, ''என்ன வாய் பார்க்கிறீர்கள். உள்ளே வாருங்கள்'' என்று கணவனைக் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துப் போய் வீட்டினுள் சென்று கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டாள்.

ஒருவேளை, அனுபமா அவளுடைய சித்தியின் சொல்லுக்கி ணங்கித் தன் கையைக் காலைப் பிடித்து கெஞ்ச வருவானோ என்பது போல நப்பாசையுடன் அவளைப் பார்த்தார் மணவா ளப் பெருமாள்.

ஆனால் விறைப்பும் வெறுப்புமாக அவள் வெறித்து நின்ற தோற்றத்தில் நப்பாசை அற்பாயுளில் மடிய, 'இந்தப் பழம் புளிக்கும்' என்று ஓடிய திராட்சைப்பழ நரியாகி, ''சீச்சி! இன்னொருவன் தொட்ட பெண். கையில் ஆயிரம் பவுன் கொடுத்தால் கூடச் சீந்தமாட்டேன்'' என்று அறிவித்து விட்டு, தனபாக்கியம் தாளிட்ட கதவைத் தட்டி அழைத்தார். ஐந்து பெண் பெற்ற அந்த அழகிய மணவாளன், ''என்னாங்க அம்மா, நீங்கள் சொன்னால் நாங்கள் போயிடுவோமா, முதல்லே நகைகள், சாமான், பணம் எல்லாம் சப்ஜாடா வந்தாக வேணும்'' என்று கத்தத் தொடங்கினார்.

ஒரு பெண் தன்னை வெறுத்து ஒதுக்கி விட்டாள் என்பதை ஊருக்கு அறிவிக்கிறோமே என்கிற கூச்ச நாச்சம், குன்ற எதுவுமே இல்லை! ஆனால் அவையெல்லாம் இருந்திருந்தா இந்த வயதில் பெற்ற பெண்ணை விடச் சின்னவளா ஒருத்தியைத் தாரமாக்கவே முனைந்திருக்க முடியாதே!

இந்த மாதிரி மனிதனோடு போட்டி போடுவது போ அவனோடு கூடச் சேர்ந்த சித்தியின் வீட்டுக் கதவைத் த மீண்டும் தங்க இடம் தருமாறு கெஞ்சுவதா?

என்ன கெஞ்சினாலும் சித்தியம்மாள் கதவைத் திறக்கப்போவது இல்லை என்பதும், அப்படிக் கெஞ்சுவதற்கு மிகமிக அவமானமாக அவள் உணர்வதும் ஒருபுறம் இருக்க, அந்த மாதிரிப் புகலிடம் கேட்கும் வழியும் இப்போது அவளுக்கு அடைபட்டுப் போயிருந்தது.

திருமணம் ஆன ஒரு பெண் மறுநாளே பிறந்த வீட்டில் அதுவும் அவளாகவே வெறுத்து ஒதுக்கி விட்டிருந்த வீட்டில் புகலிடம் தேடுவாளா?

இந்த ராட்சசர்களிடம் திருமணம் பொய்யென்று வெளியிட வும் அவளுக்குத் தைரியம் இருக்கவில்லை.

அய்யோ பாவம் என்று இருதரம் உதவியவனை உடும் பாய்ப் பற்றிக் கொள்ளவும் அவள் மனம் ஒப்பவில்லை. அது நியாயம் இல்லை என்று அவள் எண்ணமிடுகையில்தான் அப்படிப் பற்றிக் கொள்ளும் வாய்ப்பை வித்யாதரன் அவளுக் கு தரவே இல்லை என்பது புரிந்தது.

அவளுக்குத் திருமணம் நடந்ததாகச் சொன்னானே தவிர தாலி கட்டியது யார் என்று தெளிவுபடுத்தவே இல்லையே.

தங்கையைக் காப்பாற்றிக் கொண்டான் என்று மெச்சுவதா. அல்லது உடும்பு என்று அவளை மட்டமாக எண்ணிவிட்டான் என்று வருந்துவதா?

விடியற்காலை ஓரளவு நன்றாகவே பரவிவிட, அங்கங்கே வீடுகளில் ஓசைகள் கேட்கத் தொடங்கின. இனி தண்ணீர், தாராளமாய், குடைப்பம் சகிதம் வெளியே வரத் தொடங்குவார் [illegible] களுக்கெல்லாம் காட்சிப் பொருளாக இங்கே [illegible] தா?

[illegible] ஏதாவது அனாதை இல்லம் மாதிரி ஏதாவது [illegible] தெரிந்திருந்தால் அங்கே கொண்டுவிடச் [illegible] கேட்டுக் கொள்ளலாம் என்று அவன் பக்கம் [illegible] அருமையா.

லேசாகப் புருவத்தை உயர்த்தி ''கதவு தட்டும் போட்டியில் கலந்து கொள்ளப் போவது இல்லையா?'' என்று வினவினான் அவன்.

அவளது ஆதரவற்ற நிலைக்காகச் சற்றும் இரக்கம் காட்டாமல் வித்யாதரன் பேசியது ஒருமாதிரி அனுபமாவுக்குத் திடமளித்தது. தலை நிமிர்ந்து, ''இல்லை'' என்றாள்.

''பிறகு?''

''உங்களுக்கு இன்னும் ஒரு சின்னத் தொந்தரவு கொடுக்க வேண்டியிருக்கிறது. என்னை இங்கிருந்து அழைத்துச் சென்று ஓர் அனாதை ஆசிரமத்தில் விட்டுவிட முடியுமா?'' என்று தணிந்த குரலில் வினவினாள்.

''போராட்டம் எல்லாம் அவ்வளவுதானா?''

மனிதர்களோடு போராடலாம். மிருகங்களோடு? அவற்றுக்கு நெறிமுறை ஒன்றுமே இல்லையே!

உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றவளை ஒரு தரம் கூர்ந்து நோக்கியவன், ''காரில், ஏறு'' என்றான்.

காரில் செல்லுகையில் அவன் அவளிடம் வேறு பேச்சுக் கொடுத்தான்.

''அனாதை ஆசிரமம் என்றாயே, என்ன ஏது, எங்கே இருக்கிறது என்று ஏதாவது உனக்குத் தெரியுமா?''

''தெரியாது'' என்றாள் அவள் சுருக்கமாக.

''ஏன்?''

தெரியாது என்றால் தெரியாதுதான். ஏன் என்றால் என்ன சொல்வது?

''புரியவில்லை'' என்றாள் மீண்டும் சுருக்கமாகவே.

''இந்த ஊர்க்காரி என்கிறாய்... எதெது எங்கெங்கே இருக்கிறது என்பது தெரியாது என்கிறாயே, கண்மறைத்த குதிரை மாதிரி ஒரே நோக்காய்க் கல்லூரிக்குப் போய் நேராக

திரும்பி வந்துவிடுவாயாக்கும்!'' என்று கேலிக் குரலில் கேட்டான் அவன்.

''ஆமாம்'' என்றாள் அவள் மீண்டும் முன் போலவே சுருக்கமாக.

அவனது பார்வை ஒரு தரம் அவள் மீது படிந்து மீண்டும் சாலைக்கு மீளவும், ''கல்லூரி முடிந்ததும் ஓடிஓடி வீடு வந்து சேர்ந்தால் வீட்டு வேலைகளை முடித்து விட்டு, வகுப்பில் நடந்த பாடங்களை ஒருதரமேனும் திரும்பிப் பார்க்க நேரம் இருக்கும். வேலையில் குறைவைத்தால் சித்தி படிப்பை நிறுத்தி விடுவார்கள் என்ற பயம்'' என்று சிறு விளக்கம் கொடுத்தாள்.

சற்று நேரம் பேசாமலே காரை ஓட்டியவன், ''இதோ பார் அனுபமா, எனக்கும் இந்தப் பக்கமெல்லாம் அதிகம் தெரியாது. நீ சொல்லுகிற மாதிரி ஆசிரமம் எங்கெங்கே இருக்கிறது என்றோ, அந்த ஆசிரமங்களில் உன் போல் இளம் பெண்களை சேர்ப்பார்களா மாட்டார்களா என்பது பற்றியோ எனக்கு ஒன்றும் தெரியாது. ஒருவகையில் உன்னைப் போலவேதான். சற்று வெளியே பார்த்தாயானால் நன்றாக விடிந்து விட்டது தெரியும். உனக்கு எப்படியோ எனக்குக் காலையில் காபி வேண்டும். காலை உணவு சற்றுக் கணமாக இருக்க வேண்டும். அதோடு இரவு முழுவதும் உறக்கம் இல்லை. சற்று ஓய்வு வேண்டும். இப்படி வெறும் வயிற்றோடு கார் ஓட்டிக் கொண்டே பேசுவதை விட இலகுவாக உட்கார்ந்து பேசுவது இருவருக்கும் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதனால்...'' என்று காரைப் பக்கவாட்டில் திருப்பினான்.

[illegible] ஐந்து நட்சத்திர ஓட்டலில் உள்ளே கார் [illegible] உடல் இறுக, ''இங்கே... எதற்காக?' என்று [illegible] அனுபமா.

''உணவு, ஓய்வு என்றெல்லாம் சொன்னேனே, அதற்காகத் தான். இந்த ஓட்டலில் எனக்கு அறை ஏற்பாடு செய்தி ருக்கிறது.''

ஓட்டல் அறை நல்ல மாட்டுக்கு ஒரு சூடு! மாட்டுக்கே ஒரு சூடு போதும் என்றால் மனிதர் அது கூட அவசியப்படாத படி சும்மாவே புத்தியோடு இருக்க வேண்டும். குறைந்த பட்சம் ஒரு சூடுபட்டபிறகேனும் ஆறாம் அறிவுவேலை செய்ய வேண்டாமா?

''நான் வரவில்லை... நீங்கள் மட்டும் உள்ளே போய்ச் சாப்பிட்டு, ஓய்வெடுத்து வாருங்கள்'' என்றாள் கவனத்துடன் உணர்ச்சி துடைத்த குரலில் அவள்.

''ஏன்?'' என்று அவன் குரல் சீறியது. ''ஏன் வரமாட்டாய்? உள்ளே போனதும் உன் ரகுபதிமாதிரி மேலே பாய்ந்து விடுவேன் என்றா? அப்படிப் பாய்வதற்கு எனக்கு இதற்குமுன் வாய்ப்பே இல்லையா?''

''.....''

''நன்றாகக் கவனி. ஒன்று என்னோடு ஓட்டல் அறைக்கு வா. அல்லது இப்போதே காரைவிட்டு இறங்கி உன் விருப்பம் போல எங்கே வேண்டுமானாலும் போ.... உள்ளே போய் உனக்கும் சேர்த்து கைகழுவி விடுகிறேன்''.

கார் நிறுத்துமிடத்தில் நின்றிருந்த ஓட்டல் பணியாளின் காதில் விழக் கூடாது என்பதற்காகக் குரலைத் தணித்திருந் தானோ என்னவோ, ஆனால், அந்தத் தணிந்த குரலிலோ, அழுத்தம் திருத்தமாக அவன் சொன்ன விதத்திலோ சற்றும் இளக்கம் இல்லை என்பதை உணர்ந்தாள் அனுபமா.

கூடவே அவன் சொன்னதும் மெய்தானே. அவனுக்கு வாய்ப்புகள் இல்லாதிருக்கவில்லையே. அந்த ஓட்டலில், வழியில்.... இவனிடம் சந்தேகம் காட்டியது தவறு என்று எண்ணியவளாய் அவனோடு சேர்ந்து காரைவிட்டு இறங்கி

அவன் அருகே சென்று நின்றாள்.

சற்று நின்று ஓட்டலின் முகப்புப் பகுதியை ரசித்தான் வித்யாதரன். ''ம்ம்... இது ஓட்டல். நேற்று.... அதைப் பார்த்தாலே மூன்றாம்தரம் என்று தெரிந்தது. அந்த ஓட்டலுக் குள் தயக்கமே இல்லாமல் சென்றாயே!''

''அது..... வந்து எனக்கு ஓட்டல் அது இது என்று போய் வந்து பழக்கமே இல்லையா... அவ்வளவாகப் புரிய வில்லை.... அத்தோடு கூட ர..... ரகுபதி...'' என்று குற்றவாளி யாய் நின்று தன்னிலை விளக்கத்தைத் தொடங்கியவள் சட்டெனச் சுதாரித்தாள். இவன் மட்டும் என்ன ஒழுங்கு? ''ஆமாம், என்னைக் கேட்கிறீர்களே, நீங்கள் ஏன் இந்த நல்ல ஓட்டலை விட்டு விட்டு அந்த மட்டமான ஓட்டலில் தங்கினீர் கள்?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

கீழ்க்கண்ணால் அவளை ஒருதரம் அளந்தான் வித்யாதரன். ''அதற்குக் காரணம் இருக்கிறது...''

''என்ன காரணமோ?'' தெரியாத விஷயமில்லை. ஆனால் [illegible] என்று தூக்கி எறிந்து பேசுகிற இவன் வாயாலேயே [illegible]டுமே.

''சற்று பொறு.... சொல்லுகிறேன்'' என்று கூறி, வரவேற்புப் [illegible]க்குச் சென்று சாவியை வாங்கி வந்தான்.

[illegible]க்குள் சென்று, அவனது பெட்டியைத் தூக்கி வந்த [illegible]க்கும் பணம் கொடுத்து அனுப்பி விட்டு, அறைக்குள் [illegible] தொலைபேசியில் காலை உணவுக்கு பட்டியல் [illegible]தான்.

[illegible] அலங்காரங்களைப் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டி [illegible]மாவின் எதிரே வந்து நின்றான். ''என்னவோ [illegible] கேட்டாயல்லவா? சொல்லுகிறேன் கேள். நான் [illegible] ஓட்டலில் தங்கியதற்கும், இப்போது உன்னை [illegible] வந்ததற்கும் காரணம் எனக்கு ஒரு பெண்

தேவை. ஓர் அழகான இளம் பெண். அது நீ என்பது இப்போதைக்கு என் முடிவு'' என்றான் தெளிவான உச்சரிப்பு டன்.

9

அனுபமா திகைத்துப் போனாள் என்று கூறினால் அது அவளது நிலையை மிகவும் குறைத்துச் சொல்வதாகும். பிரமிப்பில் சிலையாய் உறைந்து போனாள் என்று உரைத்தால் அது ஓரளவு சரியாக இருக்கக்கூடும்.

இமை தட்டவும் மறந்து, வேகமாக உள்ளிருந்த மூச்சை வெளியேற்றக் கூடத் தோன்றாமல் ஓர் உயிருள்ள சிலையாக நின்று விட்டிருந்தாள் அவள். சற்று முன் அவன் பேசிய பேச்சு என்ன? இங்கே அறைக்குள் வந்து விட்டாள் என்று ஆனபிறகு சுயரூபம் காட்டுகிறானா?

சில வினாடிகள் அவள் முகத்தைப் பார்த்திருந்து விட்டு, கையை அவள் முகத்தின் முன்னே நீட்டிச் சொடக்குப் போட்டான் வித்யாதரன்.

சுய உணர்வு பெற்றவள் சட்டெனப் பாய்ந்து அவனைச் சுற்றித் தாண்டி அறை வாயிலை நோக்கி ஓடத் தொடங்கினாள்.

ஒரு கையால் அனாயாசமாக அவளைத் தடுத்து நிறுத்தி, ''ஏன்? எதற்காக ஓட்டம்?'' என்று சற்று அதிகப்படி அக்கறை காட்டி விசாரித்தான் அவன்.

அவனது பிடியிலிருந்து விடுபடுவது எளிதல்ல என்பதை அறிந்திருந்ததால் ஆத்திரத்துடன் அவனை முறைத்துப் பார்த்தாள் அனுபமா. ''சற்று முன் நீங்கள் சொன்னதைக் கேட்டீர்

எப்போது பார்த்தாலும் இவனிடம் இப்படி வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமா?

நீ எக்கேடும் கெட்டுத் தொலை, எனக்கு ஒன்றும் இல்லை என்பது போல அலட்சியமாகப் போகிறானே. இவனிடம் பதிலுக்கு முகம் திருப்பிக் கொண்டு செல்ல அவளுக்கு வேறு போக்கிடம் இல்லையே!

போக்கிடம் இல்லாத அதிருஷ்டக்கட்டை நாக்கையும் காத்திருக்க வேண்டும். அதைவிட்டு....

ஆனால் தப்பாகப் பேசியது அவள் மட்டும் தானா? அவனும் ஒரு பெண் வேண்டும் என்று மட்டுமா சொன்னான்? அழகான பெண் என்று சொல்லவில்லையா? ஏதாவது வேலைக்கு ஆள் என்றால் அது அழகான பெண்ணாக இருக்க வேண்டுமா என்று வித்யாதரனைக் குற்றவாளியாக்க அவள் முயன்று கொண்டு இருந்தபோதே கீழே வரவேற்பில் நின்று கொண்டிருந்த இரு பெண்களின் நினைவு வந்தது. இருவருமே நல்ல அழகிகள்.

ஒருவேளை அப்படி ஒரு வேலையை மனதில் எண்ணித் தான் அப்படிச் சொன்னானோ? அய்யோ! நாவடக்கம் இல்லாமல் ஒரு நல்ல வாய்ப்பை இழந்துவிட்டாளோ?

நீ போவதானால் போய்க்கொள்; எனக்கு ஒன்றுமில்லை என்பது போல அவளது பையை எடுத்து வைத்துவிட்டுத் திரும்பிப் பாராமல் சென்ற அவன் பல் துலக்கி திரும்பி வரும்போது குத்துக்கல் மாதிரி அங்கேயே உட்கார்ந்திருக்க அவளுக்கு அவமானமாக இருந்தது.

ஆனால், ஒருவேளை அவன் மனம் இளகினால்.... எவ்வளவோ அவமானப்பட்டாயிற்று. இனி அவன் வாயால் 'வெளியே போ' என்று கூறக் கேட்பது ஒன்றும் மகாப் பெரிய அவமானமாகிவிடாது என்று தன்னைத்தானே திடப்படுத்திக்

கொண்டு உட்கார்ந்திருந்தாள் அனுபமா.

இதமாக அமுங்கிக் கொடுத்த சோபாவின் மென்மையோ, மிதமிஞ்சிய களைப்போ அல்லது இரண்டும் சேர்ந்துமோ கதவு திறந்த சத்தம் கூட அவளுக்குக் கேட்கவில்லை.

யாரோ மென்மையாகக் கன்னத்தில் தட்டுவதை உணர்ந்து தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தவள் எதிரே வித்யாதரனைக் கண்டதும் மலங்க விழித்தாள்.

''டிபன் வந்து விட்டது. விரைவாகப் பல் துலக்கிக் கொண்டு வந்தாயானால் சூடு ஆறுமுன் சாப்பிடலாம். பிறகு மெல்லக் குளித்துக் கொள்ளலாம். பேஸ்ட் பிரஷ் இருக்கிறதா? இல்லாவிட்டால் என்னிடம் புதிய பிரஷ் ஒன்று கிட்க்கும்...''

ஏனோ தொண்டை அடைத்து, கண்ணைக் கரித்தது அவளுக்கு. சட்டென இமைகளைத் தாழ்த்தியவள், ''இருக்கிறது'' என்று தெளிவற்ற குரலில் முணுமுணுத்துவிட்டு பையில் இருந்த பேஸ்ட் பிரஷ்சுடன் குளியலறை சென்றாள்.

அவசரமாகப் பல் துலக்கி முகம் கழுவி, அங்கே தாங்கியில் இருந்த மிருதுவான பூதுவாலையில் முகம் புதைத்தபோது தாயின் நினைவு வந்து மீண்டும் கண்ணைக் கரித்தது.

இப்படி அம்மாவின் மடியில் முகம் புதைக்க முடியுமானால் இந்தத் துன்பமெல்லாம் குறைந்து விடாதா?

ஆனால் அன்னை இருந்திருந்தால் இந்த அவலமே நேர்ந்தி[illegible]

[illegible] ஒருதரம் முகம் கழுவித் துடைத்துக் கொண்டு [illegible] வெளியே சென்றபோது அவளுக்கு ஒரு தட்டில் ஏதோ [illegible] வைத்துக் கொண்டிருந்தான் வித்யாதரன்.

[illegible] பொங்கல். முட்டையெல்லாம் சாப்பிடுவாயோ [illegible] என்று முழு சைவமாயும் வரவழைத்தேன்.

முட்டையும் நிறையவே இருக்கிறது. பிடிக்காது என்று இல்லை என்றால் எடுத்துச் சாப்பிடு'' என்று சொல்லிவிட்டு உண்ணத் தொடங்கினான் அவன்.

வாழ்க்கை அந்தரத்தில் ஊசலாடுகிறபோது உணவு எப்படி இறங்கும் என்று நினைத்தபடி கொறிக்கத் தொடங்கியவளுக்கு உண்பதை நிறுத்தவே முடியவில்லை. தட்டு காலியான வேகத்தைக் கண்டு, ''இன்னும் ஏதாவது கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்று அவன் கேட்கவும் வெட்கிப் போய் ''வேண்டாம். வயிறு புல்'' என்று மறுத்தாள்.

வெறும் கறுப்பு காபியை இரு கப்புகளில் ஊற்றியவன், ''பால், சர்க்கரை இருக்கிறது. வேண்டுமானால் சேர்த்துக் கொள்'' என்று கூறி விட்டு வெறும் காபியாகவே அருந்தத் தொடங்கினான்.

அவனைப் போலவே குடிக்க முயன்று, கசப்பில் முகம் களித்து, சர்க்கரையும் பாலும் சேர்த்து அருந்தினாள் அனுபமா. ''இது பழகிவிட்டால் அது குடிக்க மனம் வராது'' என்று முறுவலித்தான் வித்யாதரன்.

அவனது முறுவல் ஆறுதலைத் தர, ''வந்து... வந்து அப்போது உங்களைத் தப்பாக நினைத்ததற்கு சாரி....'' என்று அவனது மன்னிப்பை வேண்டினாள் அனுபமா.

லேசாகத் தலையை அசைத்து, ''மறந்து விடு'' என்று முறுவல் மாறாமலே இலகுவாகச் சொன்னான் அவன்.

மேலே அவனாக எதுவும் சொல்லக்கூடுமோ என்று எதிர்பார்த்தாள் அனுபமா. ஆனால், அவள் காபி அருந்தி முடிந்த கப்பை வைத்தபிறகும் அவன் மவுனமாகவே இருக்கவும் அவளாகவே தொடங்கினாள். ''நீங்.... நீங்கள் என்னை ஏதாவது வேலை தரலாமென்று.... வந்து, எனக்கு ஏதா

வேலை தரமுடியுமா? படிப்பை முடிக்கவில்லை. கடைசி ஆண்டு. கணக்கு மெயின். டைப்பிங்கில் லோயர் படித்திருக்கி றேன்'' என்று தன் தகுதிகளைச் சொல்ல முற்படுகையில், அதில் உருப்படியாக ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து அவளது குரல் தேய்ந்தது.

கவனத்துடன் 'ஜக்'கிலிருந்து இன்னொரு கப் காபியைத் தன் கோப்பையில் ஊற்றினான் வித்யாதரன். இரண்டு மிடறு காபியை விழுங்கியபின், ''இதை இப்போது பேச வேண்டாம் என்று நினைக்கிறேன் அனுபமா'' என்றான்.

சிறு வியப்பும் கேள்வியுமாக அவள் நோக்கவும், ''தூக்க மின்மை, அலைச்சல், உணர்ச்சிப் பரபரப்பு என்று நீ களைத்துப் போய் இருக்கிறாய். என்னுடையதும் கிட்டத்தட்ட அதே நிலைதான். நிதானமாக யோசித்துப் பேசுவது இருவருக்குமே சற்றுக் கடினமான காரியம். அதனால்...'' என்று திரையின் பின் கிடந்த கட்டில்களின் பக்கம் கையைக் காட்டினான் அவன். ''தூங்கி ஓய்வெடுத்துவிட்டு, மதிய உணவின் பின் இதைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன்.''

சற்றுமுன் நடந்த சச்சரவு நன்றாக நினைவு இருந்ததால வித்யாதரனிடம் அனுபமாவுக்கு மீண்டும் சந்தேகம் உண்டா யிற்று என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஒரு தனியறையில், மூடிய கதவின்பின் ஓர் ஆண்மகனோடு அமர்ந்திருப்பதே ஒரு சிறு சங்கடமாக இருக்கையில், படுத்துத் தூங்குவதை இயல்பாக இலகுவாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

மனத்தில் எந்தவித உணர்ச்சியும் பிரதிபலித்து விடாமல் இயல்பாக்கிக் கொண்டபோதும் அவளையும் மீறி அவளது முகம் வியர்த்து நிமிர்ந்தது.

இறுகிக்கொண்டாற்போல அவனது உதடுகள் வளைந்தன. இரண்டு கட்டில்களுக்கு இடையில் ஒன்றரை மீட்டர் இடை

வெளி இருக்கிறது. கட்டிலில் படுத்து வசதியாகத் தூங்குவதோ, சோபாவில் உட்கார்ந்தபடி சிரமத்துடன் தூங்குவதோ எதுவானாலும் உன் விருப்பம். அதில் நான் தலையிடப் போவது இல்லை'' என்று எழுந்து சென்று ஒரு சுவிட்சைத் தட்டினான். ''தெரியுமல்லவா? வெளியே விளக்கு எரியும். அதை அணைக்கும் வரை யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள்....'' என்று அவன் கூறுகையில் அதைப் பொய்ப்பிப்பது போல டெலிபோன் மணி கிணு கிணுத்தது.

உதடுகளை அழுத்தி விரியவிடாமல் தடுத்த போது அவளது கண்களில் சிரிப்பைக் கண்டு கொண்டு பதிலாக அவன் முகத்தில் பரவத் தொடங்கிய முறுவல் டெலிபோனைக் கையில் எடுத்ததும் மறைந்தது.

ஓர் இறுக்கத்துடன் ''நான்தான் வித்யா பேசுகிறேன். வேறெ... மாறுதல் ஏதும் தெரிகிறதா?'' என்று வினவினான்.

வந்த பதிலில் சற்று நிம்மதியுற்றாற்போல, ''ஒ.கே. ஒ.கே. பார்த்துக் கொள்ளுங்கள். நான் கொஞ்சம் வெயில் இறங்கிய தும் கிளம்புகிறேன். கேட்டால் சொல்லுங்கள்'' என்று முடித்தான்.

ரிசீவரை மெல்ல வைத்து விட்டு அதையே பார்த்தபடி சிலகணங்கள் நின்றான். அனுபமாவின் பக்கம் திரும்பி ஏதோ சொல்ல வாயெடுத்தவன், மறுப்பாக லேசாகத் தலையசைத்து ''நான் தூங்கப் போகிறேன், அனுபமா, தயவு செய்து நீயும் தூங்க முயற்சி செய்'' என்று கூறி விட்டு, சன்னல் பக்கம் இருந்த கட்டிலை நெருங்கி, ''பெட்ஷீட்'டைக் கீழிறக்கிவிட்டு வெளிப்புறம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

அதன்பின் அவனிடம் அசைவில்லை.

சற்றுநேரம் மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருந்த [illegible] நெருக்கும் கண் சொக்கியது. அப்போதும் அவன் அருகே [illegible]

கட்டிலில் படுத்து உறங்க மனம் வராமல், உட்கார்ந்திருந்த சோபாவை அடுத்துக் கிடந்த இரட்டை சோபாவில் கால மடித்துப் படுத்தாள்.

அடித்துப் போட்டாற் போலப் பல மணி நேரம் உறங்கி விட்டு எழுந்த போது உடலும் மனமும் வெகுவாகலேசாகியிருந்தன.

தலைக்கு அடியில் இதமாய் அழுந்திய தலையணையும், தொங்கிக் கிடந்த கால்களை இதமாகத் தாங்கி நின்ற டிபாயையும் கண்டு தென்பும் உண்டாயிற்று.

இவனுக்கு நிச்சயமாய் மனிதாபிமானம் இருக்கிறது. பரிவு [illegible]ருக்கிறது. 'எப்படியோ போ' என்று விட்டுவிடமாட்டான்.

ஆனால் குளியலறையில் இருந்து வெளிவந்து, அவளது சேலைகள் அந்த இடத்துக்குப் பொருந்தாது என்பதால் [illegible]ரண்டு சேலை செட்டாக வாங்கி வைத்திருப்பதாகக் கூறி, விரைவாகக் குளித்துவிட்டு அறைகளில் ஒன்றை அணிந்து, மாறுமாறு உத்தரவிட்ட அவனது குரலில் பரிவு கிரிவு ஒன்றும் இருக்கவில்லை.

[illegible]பிரளய மண்டிய புகைச்சலை அடக்கிக் கொண்டு, சம்பாதிக்க [illegible]தொடங்கியதும் முதல் சம்பளத்தில் சேலை விலையைத் திருப்பி விட வேண்டும் என்ற உறுதியோடு அவன் சொன்னபடி செய்தாள் அவள்.

[illegible]ரும்போது அவனது மனம் வேறெங்கோ இருந்ததை [illegible]மையால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''[illegible]நாளைக்கு கல்லூரிக்குப் போய் நேராக வருவேன். [illegible]ன் பயிலும் மாணவிகள், கற்றுக் கொடுக்கும் [illegible]கள்... இவர்கள் யாட்முமா உனக்குப் பழக்கம் [illegible]காரச் சம்பளம் வாங்குகிற அளவு நன்றாகப்

படிப்பவள் என்றால் அவர்களுக்கு ஒரு தனிப் பிரியம் வருமே?''

''வந்தது. ஆனால் நான் முன்பு சொன்னதுபோல எனக்குப் பேசிப் பழக நேரமும் இல்லை; பிரியமும் இல்லை'' என்றாள் அவள் சுருக்கமாக.

''ஏன்?'' என்று வித்யாதரன் விடாமல் கேட்கவும் அவளுக்கு எரிச்சல் வந்தது. இந்த மேட்டுக்குடிக்காரனுக்கு இல்லாதவர்களின் ஏக்கமும் அவமானமும் எங்கே புரிகிறது?

''ஏன் என்றால், ஒன்று வீட்டு வேலை, அடுத்தது அவரவர்கள் கார், வீடியோ, டெக் என்பார்கள். காஞ்சிப் பட்டு, கார்டன், விமல் என்பார்கள். இதில் கலந்து கொண்டு நான் எதைப் பற்றிப் பேச முடியும்? இல்லாதவள் என்றால் அய்யோ பாவம்! என்பார்கள். இரண்டும் பிடிக்காமல் ஒதுங்கியே போய் விடுவேன்.''

''உன்னுடன் படித்தவர்கள் எல்லோருமேவா பணக்காரப் பெண்கள் என்கிறாய்?'' என்று புருவங்களை உயர்த்திக் கேட்டான் அவன்.

அவனது நம்பாமை உசுப்ப, ''இல்லைதான். ஆனால் அவர்களுக்கும்கூட, வசதியில்லாத போது வாஞ்சை கிடைத்ததே. அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, அம்மா, அப்பா என்று அன்பான உறவுகள் இருந்தனவே. இவர்களிடம் நான் என்ன பேச முடியும்? நான்.... ச்சு... இது உங்களுக்குப் புரியாது. விட்டு விடுங்கள்'' என்று கூறிக் கை கழுவ எழுந்தாள் அனுபமா.

கூடவே எழுந்தபடி, ''இப்படி எல்லோரிடமிருந்தும் ஒதுங்கிப் போனவளுக்கு ரகுபதியோடு மட்டும் எப்படிப் பழக முடிந்தது? அதுவும் அவனோடு வீட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு? கண்டதும் காதலா?'' என்று சொல்லிவிடாமல்

விசாரித்தான் வித்யாதரன்.

மடக்குகிறானாக்கும்! பொறுமையை இழுத்துப் பிடித்தபடி பதில் சொன்னாள், ''கல்லூரி முடிந்து பஸ்சுக்காகக் காத்திருக்கும் போது, பஸ் காசை மிச்சம் பிடிப்பதற்காக நடக்கும் போது எல்லாம் அவராக ஏதாவது பேசிக் கொண்டே தொடர்வார். கிட்டத்தட்ட ஆறு மாதங்களாக விடாமல் தொடர்ந்ததால் கொஞ்சம் நம்பிக்கை உண்டாயிற்று. அதற்கு மேல் குடித்தனம் வைப்பதற்குக் குறைந்தபட்சத் தேவையான ஆயிரம் ரூபாய்க்காக, இருந்த ஒரே உடமையான கைக்கடிகாரத்தை விற்றேன் என்றபோது....

''என்னது? இரண்டாம் கையாகக் கைக்கடிகாரத்தை ஆயிரம் ரூபாய்க்கு விற்றேன் என்றால் நம்பத் தோன்றியதா? ஓரளவு நல்ல கடிகாரம். புதிதே ஐநூறு ரூபாய்க்குக் கிடைக்குமே. உபயோகித்ததை விற்பதற்கே ஆயிரம் ரூபாய் கிடைத்தது என்றால் அவன் மூவாயிரம் ரூபாய் வாட்சா கட்டியிருந்தான்? அந்த மாதிரிக் கடிகாரம் கட்டுகிறவன் கையில் வேறு பணம் இல்லாத ஏழையா? இந்த அளவு தெரியாதா?''

இழுத்துப் பிடித்து வைத்திருந்த பொறுமை பறந்தது. தெரியாது. வாட்ச் விலைகளைத் தெரிந்து வைத்திராதது என் முட்டாள் தனம். அந்த ரகுபதியை நம்பியது பெரிய முட்டாள் தனம். அவனை நம்பி வீட்டை விட்டு வெளியேறியது அதைவிடப் பெரிய முட்டாள் தனம். பேசாமல் கிணற்றில் விழுந்து சாகாமல் இருந்தது உலக மகா முட்டாள் தனம். போதுமா?'' என்று பொரிந்து கொட்டியவள் சட்டென எழுந்து ஜன்னல் பக்கம் சென்று வெளியே பார்த்துக் கொண்டு நின்றாள்.

பட்டென்று கதறி அழ வேண்டும் போல் வேகம் வந்தது. ஆனால் எதற்கும் அவளிடம் குற்றம் காணும் அவன் முன்

கண்ணீர் விடுவதை அவமானமாக உணர்ந்து பெரிய பெரிய மூச்சுகளை எடுத்து நெஞ்சிலும் தொண்டையிலும் அடைத்த தைச் சமாளிக்க முயன்றபோது, ''சாரி '' என்றது அவனது தணிவான குரல். ''வேலை ஏற்றபின் நீ வசிக்க வேண்டிய இடம். பல மனிதர்கள் புழங்கும் ஒரு பெரிய வீடு. சட்டென யாரையும் நம்பி ஏமாந்து விடக்கூடாது. அதனால் தான் இவ்வளவுதூரம் விசாரிக்கும்படி ஆயிற்று.''

வேலை ஏற்றபின்!

அவன் பேச்சில் மற்ற எதுவும் காதில் படாமல் ''வே... வேலை எனக்குத் தருகிறீர்களா?'' என்றாள் அனுபமா மலர்ந்து விகசித்த முகத்துடன்.

''ஆம்'' என்று தலையாட்டினான் வித்யாதரன். மாதச் சம்பளம் ஆயிரம் ரூபாய். சாப்பாடு, துணி மணி எல்லாம் இலவசம். ஓர்...ஓர். ஐந்தாறு மாத வேலைதான். வேலை முடிந்த பிறகு மொத்தமாய் ஒரு இலட்சம் ரூபாய் தருகிறேன்!

''எவ்.....வ்வளவு பணம்? வா...வ்!'' என்று வெகுவாக மலர்ந்த முகம் உடனே லேசாக மருள, ''சம்பளத்தைச் சொல்கிறீர்கள்... வேலை என்னவென்று சொல்லல்லை யே?'' என்று வினவினாள்.

''ஏன், தப்புத் தவறாக ஏதாவது செய்யச் சொல்வேன் என்று இன்னமும் பயமா?''

''இல்லை'' என்று உடனே மறுத்துரைத்தாள் அனுபமா. ''இவ்வளவு பணம் என்றால் வேலை என் சக்திக்கு மீறியதாக இருக்குமோ என்று தான் பயம்'' என்று முறுவலித்தாள்.

அவள் முகத்தில் பார்வையை நிறுத்தி மெல்லத் தலையசை தான் வித்யாதரன். ''எளிதான வேலைதான். என் கா என்கிற வேலை'' என்றான் நிதானமாக.

அவள் பேச்சிழந்து விழித்தாள்.

10

இவனோடு இதே தொல்லையாகிப் போயிற்று என்று எண்ணினாள் அனுபமா.

தப்பும் தவறுமாகப் பொருள் கொள்ளக்கூடிய விதமாக எதையாவது கூறுவது; அதன் பிரதிபலிப்பாக இவள் ஏதாவது சொன்னால் உடனே மட்டம் தட்டுவது என்றாகிவிட்டது என்று எரிச்சலுடன் நினைத்தாள்.

இப்போது அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று எண்ணி, இழுத்துப் பிடித்த அமைதியுடன் அவனது வார்த்தை களுக்கு ஏதாவது நல்லவிதமான அர்த்தம் இருக்கக்கூடுமோ என்று புரட்டிப் புரட்டி ஆராய்ந்து பார்த்தாள்.

ஆனால் அவன் ஒன்றும் பெரிய சொற்பொழிவாற்றி விடவில்லையே. என் காதலி என்கிற வேலை என்று எண்ணி நாலே வார்த்தைகள். இதை என்னதான் பிட்டுப் பிட்டுப் பார்த்தாலும் வருகிற பொருள் ஒன்றேதான்.

அப்படியானால் இதைச் சொல்ல அவனுக்கு எவ்வளவு தயங்கி இருக்க வேண்டும்!

ஆனால்... ஒருவேளை அவளது காதுகள்தான் ஏதும் பிசகாகி அவன் கூறியது சரியாக அவள் காதில் விழவில் லையோ?

பிரமையனையோடு அவனை நோக்கி, ''நீங்கள்... நீங்கள் என்னை வேலை என்று சொன்னீர்கள்?'' என்று கவனத்துடன்

டாள்.

தட்டளவில் லேசான முறுவல் ஒன்று தோன்றி மறைய,
ர் செவிகளிடம் உனக்கே சந்தேகமா?'' என்று பதிலுக்கு
ிக் குரலில் வினவினான் வித்யாதரன்...

ுல்லை... இல்லை. இதில் என்னவோ பொடி இருக்கிறது.
ு.... அனுபமா வேகமாக யோசித்தாள்.

நேற்றிரவு... நேற்றைய இரவேதானா அது? அவன் தூங்க
பலாமல் சுற்றி அலைந்தானே! தூக்கமா என்றபோது
ன்னில் தவிப்பு இருந்தது. இவனுக்கு என்ன கஷ்டம்
ருக்கக்கூடும் என்று நினைத்தாளோ... ஒரு பெண் தேவை
ன்றவன் 'இப்போதைக்கு நீ' என்றான். இப்போதைக்குத்
ான்....

அவளது பார்வை இரட்டைக் கட்டில்களின் பக்கம் பாய்ந்து
ண்டது.

இது இருவருக்கான அறை. இந்த அறை நேற்றிலிருந்து
இவனுக்காக 'ரிசர்வ்' செய்யப்பட்டிருக்கிறது.

அனுபமாவின் விழிகள் வித்யாதரனின் முகத்தில் கூர்மையு
டன் பதிந்தன.

அவன் மனம் நோகுமோ என்று ஒரு கணம் தயங்கினாள்.
ஆனால் அவன் அந்த மாதிரி எல்லாம் யோசித்துப் பேசியது
இல்லை என்பது நினைவு வர, ''உங்கள் ஒரிஜினல் காதலி
என்ன ஆனாள்?'' என்று கேட்டாள்.

''அவள் அமெரிக்காவில் இருக்கிறாள்'' என்றான் அவன்
சுருக்கமாக.

கட்டில்களைச் சுட்டிக்காட்டி, ''இதுவரை வருகிற காதலி?''
என்றாள் அனுபமா கேள்விக்குரலில்.

அவளையே ஆழப் பார்த்துக் கொண்டிருந்தவனின் முகத்தில் கடுமை பரவியது. ''வேலையை ஒத்துக் கொள்ளப் போவது இல்லையா?'' என்றான் முகபாவனைக்கு ஒத்ததான குரலில்.

அவளுக்கும் கோபம் வந்தது. ''என்னவோ செகரட்டரி வேலை, டைப்பிஸ்டு வேலை என்பது போலக் காதலி வேலை என்கிறீர்களே. இதனால் என் எதிர்காலமே பாழாகி விடாதா? அதுபற்றி யோசிக்க வேண்டியதே இல்லையா?'' என்றாள் அவளும் கோபத்தை மறையாமல்.

அவனது உதடுகள் வழக்கமாக ஏளனத்தில் வளைந்தன. ''காலம் கடந்த யோசனை. இந்த யோசனை உன் வீட்டை விட்டு ரகுபதியோடு கிளம்புமுன் வந்திருக்க வேண்டும். இப்போது உனக்கு எதிர்காலம் என்று பிரமாதமாக என்ன இருக்கிறதாம்?'' என்றான் எகத்தாளமாக.

உண்மைதான். அவளது எதிர்காலம் இப்போது திக்கு திசை தெரியாத கும்மிருட்டுதான். அதற்காக அதை விளக்கிக் காட்டி அவளை மேலும் வேதனைப் படுத்தியாக வேண்டுமா?

உண்மையை மறுக்க முடியாமல், ''பெரிதாக ஒன்றும் இருக்காதுதான்' என்று ஒத்துக் கொண்டாள் அனுபமா. ''ஆனால் எப்போதேனும் சந்துபொந்தில் வரக்கூடிய வெளிச்சத்தைக் கூட இழந்தாக 'காதலி' என்கிற பதவி கெடுத்து விடாதா? அத்தோடு உங்களையெல்லாம் எந்த அளவுக்கு நம்புவது? என் காதலியே ஏமாற்றியபோது, அவளைப் போலக் கட்டிலுக்கும் வா என்று அழைக்கமாட்டீர்கள் என்று என்ன நிச்சயம்?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

பதிலுக்குப் பதில் பேசும் வேகத்தில் பேசினாலும் பேசியறி யாத விஷயங்களைப் பேச நேர்கையில் அவள் முகம் சிவந்தது. இதெல்லாம் என்ன பேச்சு என்று உள்ளூரக்

கூசினாள். கூடவே இருமுறை அவளைக் காத்தவன்; மட்டம் தட்டிப் பேசவது நன்றி கெட்டதனமாகும்.

ஆனால், ''நானா? இன்னும் ஒரு பெண்ணைக் கட்டிலுக் கா?' என்றான். அவன் அருவெறுப்புடன். ''ஒன்று தெரிந்து கொள் பெண்ணே. உன் சந்தேகம் வெகு வெகு அனாவசியம். இன்றைய நிலையில் பெண்களை- சேலை கட்டிய பெண் வர்க்கத்தையே நான் அடியோடு வெறுக்கிறேன். சேலை கட்டிய மாதரை நம்பாதே என்று முன்னவர்கள் சும்மா சொல்லவில்லை'' என்றான் வெறுப்பும் கசப்புமாக.

மீண்டும் கள்ளென்று சினம் ஏறிற்று அனுபமாவுக்கு. முன்னவர்கள் சும்மா சொல்லவில்லையாமே. ஆண்கள் மட் டும் என்ன அழகு வழிகிறதாம்? அந்த அழகிய மணவாளப் பெருமாள்! அந்த ரகுபதி! இங்கே திருமணம் என்கிற பந்தம் இல்லாமலே ஒரு பெண்ணோடு எல்லை மீறிப் பழகிய இவன்! இதில் பெண்கள் மட்டம் போலப் பேச்சு வேறு. அவனை மடக்கிவிடும் வேகத்தில், ''உங்கள் அம்மா பத்து மாதம் சுமந்து உங்களைப் பெற்றவர்களும் சேலை கட்டிய ஒரு பெண்தானே? அல்லது அவர்கள் கவுன் போடுகிறவர்களோ?'' என்றாள் துடுக்காக.

தன் முழு உயரத்திற்குமாக நிமிர்ந்து அவளை வெறித்து நோக்கினான் வித்யாதரன். ''கொஞ்சம் நன்றாகவே கவனி அனுபமா. நான் தரும் வேலையை ஒத்து நீ எங்கள் வீட்டுக்கு வருவதனாலும் சரி; இல்லை இப்படியே வெளியேறுவதனா லும் சரி; நாம் இருவருமாக ஓர் இடத்தில் ஒருவரை ஒருவர் சகித்துத் தங்க வேண்டிய கால நேரம் குறுகியதானாலும் நெடியதானாலும் அந்த நேரம் முழுவதும் ஒன்று மட்டும் உன் நினைவில் நிற்க வேண்டும். என் தாயாரைப் பற்றி உதாசீனமாக ஒரு வார்த்தை, ஒரு பார்வை, ஒரு செய் உன்னிடம் இருந்து வெளிப்படக் கூடாது'' என்றான் தெ

வான உச்சரிப்புடன் நிதானமாக.

அவன் குரலை உயர்த்தவில்லை; கத்தவில்லை; முகத் தோற்றத்திலும் எந்தவித உணர்ச்சியும் காட்டவில்லை; புருவ மத்தியில் சிறு நெரிப்பு கூட இல்லை. ஆயினும் உள்ளுரக் குளிர் பரவுவதை அனுபமா உணர்ந்தாள்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''உங்கள் தாயாரை நான் குறைவாக எதுவும் சொல்லவில்லை. பெண் இனத்தையே வெறுப்பது சரியில்லை. ஏனெனில் உங்கள் அம்மாவும் பெண்தான் என்று நினைவுபடுத்தினேன். அவ்வளவுதான்'' என்றாள்.

''எல்லா வசதிகளுக்கும் விதிவிலக்கு என்று ஒன்று உண்டு. என் அம்மா அப்படி ஒரு விதிவிலக்கு. பெண்ணாகப் பிறந்தாலும் அவர்கள் தேவதை. அதனால்தான் அவர்களது மிச்சமிருக்கும் வாழ்நாளேனும் நிம்மதியாகக் கழிய வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி ஒரு வேலைக்கு உன்னை அழைக் கிறேன்'' என்றான் அவன் வறண்ட குரலில்.

மிச்சமிருக்கும் வாழ்நாளா? ''அவர்களுக்கு.... உங்கள் அம்மாவுக்கு உடம்புக்கு என்ன? ரொம்பக் கஷ்டமாக இல்லா மில் டால் எனக்கு... கொஞ்சம் விவரம் சொல்ல முடியுமா?'' என்று பரிவு தொனிக்கக் கேட்டாள் அனுபமா.

''சொல்வதற்கென்ன? இதில் சிதம்பர இரகசியம் ஒன்றும் இல்லையே'' என்றான் அவன் அலுப்புடன். சன்னல் புறம் சென்று சற்று நேரம் வெளியே வெறித்தான். பிறகு, ''சில ஆண்டுகளாகவே என் பாட்டி இறந்ததிலிருந்தே அம்மாவுக் கு 'ப்ரஷர்' இருந்திருக்கும் போல. ஒன்றும் கவனியாமலே இ ருந்திருக்கிறார்கள். திடீரென்று 'ஸ்ட்ரோக்'. பலமான பா திப்புக்கையில் இருக்கிறார்கள்.... பிழைக்கும் வாய்ப்பு மி குறைவு. கிட்டத்தட்ட இல்லை என்கிறார்கள் டாக்டர்

கள். மூன்று ஆண்டு காலமாகத் திருமணம் செய்து கொள்ளும் படி என்னிடம் சொல்லிச் சொல்லி அலுத்தவர்கள். ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் என்று எழுதியதுமே யார், என்ன என்று கூடக் கேளாமல் உடனே அழைத்து வருமாறு சொன்னார்கள். ஆனால்...''

''ஆனால்... அவள் அந்தப் பெண் என்ன ஆனாள்?''

அவன் திரும்பி அவளை நோக்கினான்.

''நீ வேலையில் சேர்வதாக இல்லை என்றால் இந்த விவரம் உன்னிடம் சொல்வது அனாவசியம்'' என்றான் நறுக்கென்று.

''வேலையை ஏற்பதாக இல்லை என்றால் இந்த விவரம் கேட்பது எனக்கும் அனாவசியம்தானே?'' என்று மெல்லக் கேட்டு அவனை நோக்கித் தயக்கத்துடன் முறுவலிக்க முயன் றாள் அனுபமா.

ஆனால், ''என்ன திடீர் மாற்றம்?'' என்று கறார்க் குரலில் கேட்டான் வித்யாதரன்.

''உங்கள் அம்மாவின் உடல்நிலை''

''முகம் பார்த்தறியாத என் அம்மாவிடம் திடீர் பாசமா?''

இல்லை என்று தலையசைத்தாள் அவள். ''நான் சிறுவயதில் தாயாரை இழந்தவள். எந்த வயதிலும் தாயை இழப்பது கொடுமை என்று...''

''என் மேல் பரிதாபம் பிறந்து விட்டதாக்கும்!'' என்றான் அவன் கிண்டலாக.

அவளைப் போலவே அவனுக்கும் பிறரின் பரிதாபம் பிடிக்காது போலும் என்று தோன்றவும் மற்ற காரணங்களை அடுக்கினாள். ''முக்கியமான விசயத்தில் உறுதிமொழி [illegible]

ருக்கிறீர்கள். நல்ல சம்பளம். எனக்கோ வேறு போக்கிடம் கிடையாது. இத்தனை காரணங்கள் இருக்கையில் மறுப்பா னேன்?''

''அதுதானே பார்த்தேன்'' என்றான் அவன் உதட்டோரம் வளைவு வளைவுடன்.

உள்ளே மூண்ட ஆத்திரத்தை மறைத்து, ''ஒரே ஒரு விசயம்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது'' என்று இழுத்தாள் அனுபமா.

''என்னது?''

''உன்... வந்து வேலைக்காலம் முடிந்ததுமே ஒரு இலட்சம் ரூபாய் மொத்தமாய்த் தருவதாகச் சொன்னீர்களே, உங்கள் தேவை முடிந்த பிறகும் தருவீர்கள் என்று என்ன நிச்சயம்?'' என்று யோசிப்பது போலத் தலையைச் சரித்து வினவினாள் அவள்.

புரிந்து கொண்டவனுக்குச் சட்டென முகம் கருத்தது. ''அதற்காக என்ன செய்யப் போகிறாய்?''

என்ன செய்வது என்று அனுபமா யோசித்திருக்கவில் லையே. அவனுக்கு ஒரு குட்டு கொடுக்க வேண்டும் என்று மட்டும்தான் அப்படிப் பேசினாள். ஆனாலும் அவனுக்குப் பதில் சொல்லிவிட வேண்டும் என்கிற வேகத்தில் அவசரமாக யோசித்து, ''அந்தப் பணத்தை முதலிலேயே வாங்கி வைத்து கொள்ள வேண்டியதுதான்'' என்றாள் அவள் இலகுவாக.

''ஆனால் பணத்தை வாங்கியதும் நீ இடையில் விட்டு விட்டு ஓடமாட்டாய் என்று எனக்கு என்னம்மா நிச்சயம்!''

தன்னைப் போலவே பேசி மடக்கிவிட்டானே என்று சிரிப்பு வந்த போதும், தன்னை மட்டமாக எண்ணுகிறானே என்று

தோன்றவும், ''ஒத்துக் கொண்டு இடையில் மாறுவது என் வழக்கமல்ல'' என்று உரைத்தாள் அவள்.

''சொன்ன சொல் மாறுவது எனக்குப் பழக்கம் இல்லை. ஆனால் உன் திருப்திக்காகவும் ஒன்று செய்கிறேன்'' என்றான் வித்யாதரன்.

அதன் பின் அவனுடைய காதலியை பற்றிய விவரங்களை அவளுக்குச் சொல்லலானான்.

''அவள் பெயர் அனுராகா. எனவே பெயரளவில் 'அனு' என்று அழைத்தால் உனக்குத் தடுமாற்றம் இராது என்று நினைக்கிறேன். உன்னைப் போலவே விபத்தில்தான் அவளு டைய பெற்றோரும் மாட்டியிருக்கிறார்கள். ஆனால் அது கார் விபத்து. எவனோ குடிகாரன் வந்து மோதிவிட்டு ஓடிவிட்டா னாம். பணவசதி இருக்கிறது. ஆனால் அவளுடைய கார்டி யனே அவளிடம் தப்பாக நடக்க முயற்சித்திருக்கிறார். பயந்து வீட்டை விட்டு வெளியேறி, எங்கே என்ன என்று இல்லாமல் தறிகெட்டு ஓடி அலைந்திருக்கிறாள். சாப்பாடு இல்லாமல் இரண்டு நாள் அலைந்து தவித்து என் கார் முன்னே வந்து விழுந்தாள். நல்ல வேளை, சற்று தொலைவு இருந்ததால் 'பிரேக்' போட்டு சமயத்தில் நிறுத்த முடிந்தது. என் அபார்ட் மென்'டுக்கு அழைத்துச் சென்றேன்.

''கார்டியனுக்கு அவள் உயிரோடு இருப்பதைத் தெரிவிக் கவே அவளுக்குப் பயம். என் 'ப்ளாட்'டிலேயே தங்கி விட்டாள். எப்படியோ இருவர் மனமும் ஒன்று பட்டுவிட்டது.

''மனம்பற்றி தொடர்பு இல்லாமலேயே ஆண்-பெண் உறவு கொள்ளுகிற தேசம் அது. காதல் என்று ஆன பின் பிரிந்து வாழ்வது அவசியம் என்று எங்களுக்குத் தோன்றவில்லை...''

''தேசம் அப்படி என்றாலும் நீங்கள் இருவரும் இந்தியர்கள் தானே. திருமணமும் செய்து கொண்டிருக்கலாமே'' என்று மனதில் பட்டதைச் சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண் டாள் அனுபமா. யாரோ எப்படியோ வாழ்ந்தால் அவளுக்கு என்ன வந்தது?

''செய்திருக்கலாம்தான்'' என்றான் வித்யாதரன் ''ஆனால் திருமணம் அம்மாவின் முன்நிலையில் நடக்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அத்தோடு, திருமணம் என்று நடந்தால் அவளுடைய 'கார்டியன்' அவள் இருக்கும் இடத்தை மோப் பம் பிடித்துவிடுவாரோ என்று அனுராகாவுக்கு அச்சம். அந்த அளவுக்கு அவளைக் கொடுமைப் படுத்தியிருக்கிறான் அந்த ராஸ்கல்...! அப்படித்தான் அவள் சொன்னாள்.

''இடையே அம்மாவுக்கு என் காதலைப் பற்றி எழுதினேன். கடிதம் கண்டதும் அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி உடனே போன் செய்தார்கள். அவளிடமும் பேசினார்கள். ஆசி வழங்கினார்கள். முடிந்த அளவு விரைவில் அனுராகாவோடு வீடு வந்து சேரும்படி எனக்கும் உத்தரவு...

எல்லாம் நல்லவிதமாக நடந்து கொண்டு இருந்த போது தான் திடீரென்று அம்மாவுக்கு இந்த 'ஸ்ட்ரோக்' கிடைத்த முதல் விமானத்தில் நான் வந்து சேர்ந்தேன்.

அம்மாவுக்குச் சில தினங்கள் சுயஉணர்வே இல்லாதிருந்த தால் கோமா மாதிரி ஆகிவிடுமோ என்று பயந்துதான் [illegible] தகவல் தெரிவித்தார்களாம். ஆனால் நல்லவேளை [illegible] அந்த மாதிரி இல்லை. ஆனாலும்கூட உடம்பில் [illegible] சிக்கல்கள். பிழைப்பது.... கிட்டத்தட்ட சாத்தியம்.... உடனடி ஆபத்து என்று இல்லை. ஆனால் [illegible] மெல்ல மெல்ல அடங்குவது நிச்சயம் என்கிறார்.

[illegible] பேராசிரியரின் பின் வித்யாதரன் மீண்டும் தொடர்ந்தான்.

''நான் வந்தபின் ஒருவாறு சுய உணர்வு பெற்றுக் கண் விழித்த என் அம்மா என்னைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி ''அனு எங்கே'' என்பதுதான். அந்தப் பேச்சுக்கூட அரைகுறை தான். கேட்டு முடிக்குமுன் உணர்வு மங்கிவிட்டது. பிறகு அவர்கள் விழித்த நேரங்களில் அனுராகாவை விரைவில் அழைத்து வருவதாக ஒருவாறு உணர்த்திவிட்டு, அவளுக்கு டிக்கெட், விசாவுக்கு ஏற்பாடு செய்துவிட்டு அவள் வருகைக் காகக் காத்திருந்தேன்...'' என்று கூறி அந்த அறையை ஒரு சுயவெறுப்புடன் நோக்கினான்.

''காத்திருந்ததால் அவள் வரவில்லை. விமானத்தில் வந்த யாரோ ஒரு பயணியிடம் கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கி றாள். 'ஸ்டேட்ஸ்'' என்கிற சொர்க்கபுரியில் வாழத்தான் அவளுக்கு ஆசையாம். இந்த 'வறட்டு' இந்தியாவில் ஒரு வயதான கிழவிக்குப் பணிவிடை செய்வதற்காக அவள் என்னோடு பழகவில்லையாம். இந்தியாவுக்குள் காலடி எடுத்து வைப்பதாக இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்திருந் தாள்...

''நான் என்ன செய்வது? அங்கே எல்லோரும் என் காதலியின் - என் வருங்கால மனைவியின் வரவை ஆவலா எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள். அங்கே தனியே போ முடியாது. இங்கே, எங்கள் இருவருக்குமாக 'ரிசர்வ்' செய் இந்த அறைக்கு வரவும் மனம் இல்லை. அறிந்தவர் தெரிந்த யார் கண்ணிலும் படமுடியாத இடம் என்றுதான் ஒதுக்குப் மாய் இருந்த அந்த ஓட்டலில் ரூம் எடுத்து, தனியே கிட யோசித்தேன்.

''அனுராகா வரவில்லை என்று அம்மாவிடம் சொ முடியாது. முடிந்த வைத்திய உதவிகள் அத்தனையும் செ கொண்டு இருக்கும்போதே இன்னமும் அதிகபட்சம் மாதங்கள் என்கிறார் டாக்டர். இதைச் சொன்னால் தாங்

களா? என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு இருந்தபோதுதான் நீ வந்து சேர்ந்தாய்.

''என் தாயார், அவர்களது கடைசிக் காலத்தை நிம்மதி யோடு கழிக்கவேண்டும் என்பதற்காகத்தான் உன்னை என் காதலியாக நடிக்கச் சொல்கிறேன். நடிப்பதற்கு நல்ல சம்பள மும் தருகிறேன்'' என்று முடித்தான் அவன்.

அவளது வாழ்க்கை ஒரு விதம் என்றால் வித்தியாதரனின் கதை இன்னொரு விதத்தில் பரிதாபமாக இருந்தது அனுபமா வுக்கு. ஆனால் அதை வெளிக்காட்டினால் அவனுக்குப் பிடிக்காது என்பதை அறிந்து கொண்டிருந்ததால் அந்தப் பரிதாபம் சற்றும் வெளிப்படாமல் மறைத்தாள்.

அந்த அனுராகாவைப் பற்றியும் அவளுக்குச் சில சந்தேகங் கள் எழுந்திருந்தன. காதலுக்கு இசைபவள் கல்யாணத்துக்கு மறுப்பானேன்? உண்மையான அன்பு இல்லாமல் எதற்கா கவோ ஒளிந்து மறைந்து வாழ்வதற்கு இவனைப் பயன்படுத் திக் கொண்டிருப்பாளோ என்று ஓர் ஐயம். ஆனால் இதை அவள் அப்போது வெளியிட்டுச் சொன்னால் அவள் மேல் அவனது ஆத்திரம் திரும்பக் கூடும் என்று அதையும் வெளியிடாமல் உள்ளேயே அடக்கினாள்.

உள்ளத்தை மறைத்து உடனடிப் பிரச்சினைக்கு மனதைத் திருப்பினாள். ''இப்போது அந்த அனுராகாவாக நான் நடிக்க வேண்டும் இல்லையா? அவளைப் பற்றி இன்னும் கொஞ்சம் தெளிவாக விவரிக்கிறீர்களா? அவள் பார்வைக்கு எப்படியி ருப்பாள்? எப்படிப் பழகுவாள்?'' என்று விசாரித்தாள்.

''அவளோடு அம்மா பழகியதில்லை என்பதால் அவள் பழகுமுறைதம் உனக்கு அவசியமில்லை. அனுராகாவின் தோற்றம் பற்றி அம்மாவுக்கு எழுதியிருக்கிறேன். 'சைனாடால்' மாதிரியே, அதுபோல மாசுமறுவற்ற தோற்றம். பிறைவடி

வான கைநுனிவரை மென்மையே உருவான தூய வழுவ
ழுப்பு.... என்ன விஷயம்? அவளது முகமாறுதலைக் கண்டு
விவரம் கேட்டான் அவன்.

''உங்கள் காதலி வேலை எனக்குச் சரிவராது என்று நினைக்கிறேன்.'' என்றாள் அவள்.

ஏன் என்று கேட்டவனுக்குப் பதிலாகத் தனது கைகளை அவன் முன்னே விரித்துக் காட்டினாள் அனுபமா.

11

முன்பின் அறியாத ஒருவனுடைய காதலியாக அவனது இடத்திற்குச் சென்று வசிக்க ஒரு பெண் சம்மதிப்பது கடினம். அந்தப் பெண் ஒரு குடும்பப் பெண்ணாகக் கிடைப்பது அதைவிட அரிதுதான்.

ஆனால், ஒய்ந்து உட்கார உறைவிடமோ, உண்டு பிழைக்க வருமானமோ, இருந்து சாப்பிடச் செல்வமோ இல்லாத அனுபமாவுக்கு இந்த மூன்றையும் கொடுத்தால் அவள் அதற்கு ஒப்புக் கொள்வாள் என்று வித்யாதரன் நம்பினான்.

அதிலும் பெரும் ஆபத்துகளிலிருந்து காத்தவன் என்பதால் நிச்சயமாக அவன் இழுத்த இழுப்புக்கு அனுபமா வருவாள் என எதிர்பார்த்தான்.

ஆனால் பல விஷயங்களில் அவள் உலகம் அறியாத முட்டாளாக இருந்தாலும் அவளிடம் சில பிடிவாதங்கள்

நிமிர்வுகள் இருந்தன. அவ்வப்போது அந்த நன்றிக் கடன் அவளுக்கு நினைவு இருந்ததாகவும் தெரியவில்லை.

ஆனால் இப்படிப் பலமாக குட்டுப்பட்ட பிறகும் ஒரு பெண்ணிடம் நன்றி உணர்வு போன்ற நல்ல தன்மைகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்தானே!

நீளக்குச்சியில் காரட்டைக் கட்டி அதைக் குதிரைக்கு முன்னே நீட்டிப் பிடித்தபடி குதிரையை ஓட வைப்பார்களாம். அதுபோல பணம், பெரும் பணத்தைக் காட்டவும் அவன் எண்ணியது போலவே அனுபமா ஒத்துக் கொண்டாள்.

அம்மாவிடம் பாசம், அவனிடம் பரிவு போன்ற அவளது பாவலாக்களை அவன் நம்பவில்லை. ஆனால் அந்தமட்டும் நடிக்கத் தெரிவது குறித்து சற்று நிம்மதியே உண்டாயிற்று.

எல்லாம் எண்ணியவாறு நடக்கையில் இது என்ன திடீர் பக்கரிப்பு?

ஏன் என்று கேட்டால் கையை விரித்து நாட்டியம் ஆடுகி றாள்.

கோபத்தை அடக்கிக் கொண்டு, ''என்ன விஷயம் என்று யாவயத்திறந்து சொல்லு'' என்றான்.

காதலி கை என்றால் பிறை வடிவமான நக நுனிவரை ரசித்து, மகிழ்ந்து வர்ணிக்கத் தோன்றுகிறதாக்கும். இவள் கையை விரித்து, திருப்பிக் காட்டினால்கூடக் கண்ணிலோ தெரிந்தோ ஒன்றும்பட மாட்டேன் என்கிறதே...அவள் கையை எத்தனை முறை தொட்டு வருடி முத்தமிட்டானோ?

காரணமற்று மூண்ட எரிச்சலுடன், ''அந்த அனுராகா, இவள்தான் உங்கள் வழுவழுப்புக் காதலி, பிறந்ததிலிருந்து ஒரு துரும்பைக்கூடத் தூக்கிப் போட்டிருக்க மாட்டாள்

போலிருக்கிறது. இந்தப் பத்து வயதிலிருந்து அடுப்புக்கரிப் பாத்திரம் தேய்த்து, துணி துவைத்து வீடு கூட்டி மாவாட்டி... இத்தியாதி வேலைகள் செய்த கைகள். அனுபவ முத்திரைகள் பதிந்த கைகள். சந்தேகத்துக்கு நீங்களே நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கைகளை மீண்டும் அவன் முன்னே நீட்டிக்காட்டிய போது ஏனோ கண்களில் மெலிதாய் நீர் அரும்பியது.

உழைப்பில் எந்தவிதக் கேவலமும் இல்லை என்று நினைத்தது மறந்து, இவன் ரசிக்கும் விதமாய்ப் பெருமையுடன் காட்ட அவளது கைகளில் மென்மையோ தூய்மையான வழுவழுப்போ இல்லையே என்று ஏக்கம் பிறந்தது.

பல ஆண்டுகளாக கரிப்பாத்திரங்கள் தேய்த்து முரட்டு வேலை செய்ததன் விளைவாக, விரல் ரேகைகளிடையேயும் நக இடுக்குகளிலும் படிந்திருந்த கறுப்பு, ஒடிந்திருந்த நகங்கள், ஆங்காங்கே காய்ப்புகள்...

இந்தக் கண்ணராவியை வித்யாதரன் கூர்ந்த நோக்குவதைத் தாங்க மாட்டாமல் சட்டெனக் கைகளைப் பின்னே இழுத்துக் கொண்டாள்.

''இதற்காகத்தான் சொன்னேன். கிடைத்தது வாய்ப்பு என்று கைவிரல் நக நுனிவரை வர்ணித்துத் தள்ளியிருக்கிறீர்கள், இன்றும் கால்களை வேறு எப்படியெல்லாம் வார்த்தைகளில் வடித்திருக்கிறீர்களோ, என் கால்கள் தண்ணீரில் நின்று வேலை செய்து தோல் வெடித்திருக்கும்... தன்வினை தன்னைச் சுடுமாம்... உங்கள் ரசனையும் வர்ணனையும் உங்களுக்கே எதிரியாகவிட்டன. அதனால் நீங்கள் வேறு யாரையேனும்...''

கண்களில் நீர்த்தாரையுடன் உதடுகளில் ஏளனமுறுவலோடு அவள் பேசுவதை ஒருவிதக் கூர்மையுடன் கேட்டிருந்தவன் இப்போது இடையிட்டுப் பேசினான். ''அவசியமில்லை''

''பி.... பின்னே இதைப் பார்த்ததும் உங்கள் அம்மா கண்டுபிடித்து விடமாட்டார்களா?''

அவன் முகத்தில் லேசாக நிழல் படிந்தது. ''இதையெல்லாம் கண்டு கொள்கிற அளவு கூர்மை இப்போது அம்மாவிடம் இல்லை'' என்றான் வருத்தமாக. உடனே சமாளித்து, ''அப்படிக் கண்டு கொள்கிற வாய்ப்பை அம்மா உட்பட யாருக்கும் நாம் கொடுக்கப் போவதும் இல்லை. அங்கே செல்லுமுன் இதைச் சீர்செய்து விடலாம்'' என்று அவளுக்குத் தெம்பூட்டும் விதமாகப் பேசினான்.

''எ... எப்படி?'' என்றாள் அனுபமா ஆர்வமும் அவநம்பிக்கையுமாக.

''இந்த ஓட்டலில் அழகு நிலையம் ஒன்று இருக்கிறது. அங்கே கை கால்களைச் சுத்தம் செய்து அழகுபடுத்தி விடுவார்கள். உன் கைகள் தானா என்று உனக்கே சந்தேகமாகி விடும்'' என்று கூறி மென்மையாக முறுவல் செய்தான் வித்யாதரன்.

அவன் சொன்ன சேதியை விட அவனது சிரிப்பில் மேலும் அதிசயித்துப் போனாள் அனுபமா.

இவனுக்குக்கூட இப்படி மென்மையாகச் சிரிக்கத் தெரியுமா?!

ஆச்சரியப்பட்டுக் கொண்டு நிற்கவிடாமல் உடனடியாக அவளை அழைத்துக் கொண்டு, கீழ்தளத்தில் இருந்த அழகு நிலையத்திற்குச் சென்றான் வித்யாதரன்.

அனுபமாவின் முகத்தைப் பார்த்ததும் மகிழ்வோடு முறுவலித்த வரவேற்பு அழகுக் கலைப் பெண், வித்யாதரனின் வேண்டுகோளைக் கேட்டு அவளது கைகளைப் பார்த்து திகைத்தாள். அந்தத் திகைப்பை உடனே மறைத்து வேலையில்

இறங்கினாள்.

அவளுக்கும், அவளுடைய உதவியாளர்களுக்குமே சவால் விட்ட வேலைதான். ஆனாலும் காய்ப்புகளைத் தேய்த்து எடுத்து, ஓரத்துப் பிளவுகளைச் சின்னஞ்சிறு கத்தரிக்கோல் கொண்டு வெட்டி எடுத்து, நகங்களைச் சீராக ஒரு வடிவத்துக்கு கொணர்ந்து, வெதுவெதுப்பான திரவத்தில் இதமாக ஊறவைத்து, மீண்டும் தேய்த்து, சுத்தம் செய்து, நகங்களுக்கு அழகாக ரோஜா வண்ணச்சாயம் தீட்டி.... ஒரு மணிநேரத்துக்கும் மேலாக அவர்களை உலுக்கி எடுத்தபின் மெய்யாகவே அந்தக் கைகால்கள் அவளுடையவைதான் என்று அவளால் நம்ப முடியவில்லைதான்.

அந்த அளவுக்கு அவை அழகாக மாறியிருந்தன. மென்மையாகத் தோற்றம் அளித்தன.

வந்து பார்த்த வித்யாதரனும் திருப்தியைக் காட்டினான்.

அவனிடம், ''இவர்கள் உங்கள்....'' என்று தொடங்கிய நிபுணரிடம், ''மனைவி...'' என்று உரைத்தவண்ணம் அனுபமாவிடம் புன்னகையோடு ஒரு பார்வையைச் செலுத்தியவன், ''....யாகப் போகிறவள்'' என்று முடித்தான்.

''ஒ...! ரொம்பவும் கொடுத்து வைத்தவர் நீங்கள். ரொம்பவும் அழகான முகம் இவர்களுக்கு. புருவங்களைத் தொடவோ தேவையில்லை. உதடுகளையும் சாயத்தால் பெரிதாக்கவோ, குறுக்கவோ வேண்டியதில்லை. சும்மா உடைக்குச் சரியாலேசாகத் தீற்றிக் கொண்டால் போதும்... உடல் உழைப்பு கொஞ்சம் அதிகம் போல. ஆனால் அதுவே அழகான உடல்வாகையும் தடிப்பில்லாத மெல்லிய விரல்களையும் கொடுத்து விட்டது. தொடர்ந்து கொஞ்ச நாள் பராமரித்து, நகங்களையும் இன்னும் கொஞ்சம் வளர்த்துவிட்டால் போதும். அப்புறம் அழகுப் போட்டிக்கே இவர்களை அனுப்பலாம். முதல் பரி

நிச்சயம்'' என்று முறுவல் செய்தாள் அந்த நிபுணர்.

வித்யாதரனின் ஆலோசனைப்படி அந்த நிபுணரிடம் சில குறிப்புகளையும், பயிற்சிகளையும் கேட்டு எழுதி வைத்துக் கொண்டாள் அனுபமா.

அங்கேயே சில நகச் சாயங்களையும் உதட்டுச் சாயங்களையும் வாங்கிக் கொண்டு திரும்பினார்கள்.

அறைக்குள் சென்றதுமே அவன் கழுத்தைக் காட்டிக் கேட்டான். ''அது எங்கே?''

''அருவெறுப்பாக இருந்தது. குளிக்கப் போன போது கழற்றிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டேன்'' என்றாள் அனுபமா.

''சொல்லியிருக்கக் கூடாது? அது கழுத்தில் இருக்குமே என்கிற நினைவில் நான் பாட்டுக்கு மனைவி என்று தொடங்கி விட்டு, பார்த்தால் காணவில்லை. எப்படியோ உளறிக் கொட்டி சமாளிக்கும்படி ஆயிற்று'' என்றான் அவன் குறை கூறுவது போல.

அவள் ஓர் அழகி என்று ஓர் அழகுக் கலை நிபுணரின் வாயாலேயே கேட்டு, உள்ளூர அனுபமாவுக்கு உண்டாகியிருந்த மகிழ்ச்சி மெல்ல வடிந்தது. முன்பு எரிச்சலாகத் தோன்றியது இப்போது ஏனோ மனதில் ஏக்கமாக உருவெடுத்தது.

அதுதான் அனுராகா என்றால் நக நுனிவரை துல்லியமாய் தெரிந்திருக்கத் தோன்றுகிறதே. இவள் கழுத்தில் இருந்த ஒன்று மட்டுமல்ல போனது கண்ணில்கூட அதற்காகத் தேட நேரும் அளவு பெரிதாக இல்லையே!

என்ன மடத்தனம் என்று தன்னையே கடிந்து கொண்டாள்

அனுபமா.

யாரோ ஒருவன் சம்பளம் கொடுக்கப் போகிற முதலாளி என்பது தவிர வேறு எந்தவிதத் தொடர்பும் இல்லாதவன். மனிதாபிமானத்தோடு ஆபத்தில் காத்தவன் என்றும் சொல்லலாம். அவ்வளவுதான் அப்படி ஒருவன் கையைக் கவனிக்க வில்லை. கழுத்தை நோக்கவில்லை என்று மனம் நோவது முட்டாள்தனம்தானே.

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் போலும்.

''என்ன வருத்தம்? அந்த மண் குதிரை ரகுபதி ஏக்கமா?'' என்றான் கிண்டலாக.

அவளுக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

இவன் எவளோ ஒருத்தியிடம் நன்றாக ஏமாந்து விட்டு, அகப்பட்டாள் ஒருத்தி என்று அவளை வறுத்து எடுப்பதா? இந்த வித்தை அவளுக்கு மட்டும் கைவராதா?

''உங்கள் நினைவு ஒருவேளை அவ்வப்போது அமெரிக்காவுக்கு ஓடிவிடுமோ என்னவோ? நான் வேறு யாரையும் எண்ணிக் கூடப் பார்க்கவில்லை. முழுக்க முழுக்க என்னைப் பற்றிய கவலைதான்'' என்றாள் குரலில் அலுப்புடன்.

''கவலைப்படுவானேன்? விள்ளாமல் குறையாமல் மொத்த மாய்க் கையில் கிடைக்கப் போகிற இலட்ச ரூபாயை நினைத்துப் பார்த்து சந்தோசப்பட வேண்டியதுதானே?'' என்றான் அவன் பழையபடியே

''கிடைக்கப் போவது கணிசமான தொகை மட்டும் இல்லையே. உங்கள் காதலி- அதிலும் உங்கள் வார்த்தைப்படி மனத்தொடர்பு இல்லாமலே ஆண் - பெண் உறவு கொள்கிற தேசத்திலேயே உங்களோடு பழகிய காதலி என்கிற பட்டமும் சேர்ந்து அல்லவா கிட்டும்? அப்புறம் எண்ணிப் பார்த்து

ஆனந்தப்பட என்ன மிச்சம் இருக்கும்?''

அவன் முகம் கறுப்பதை உள்ளூரத் திருப்தியோடு கண்டவள் மேலும் குத்தினாள். ''ஆனால் யாரோ ஓர் ஏழைப் பெண் அனுபமாவின் எதிர்காலத்தைப் பற்றி உங்களுக்கு என்ன வந்தது? உங்கள் அம்மா கடைசிக் காலத்தை நிம்மதியாகக் கழித்தால் அது போதாதா?'' என்று குத்தலாக மொழிந்தாள் அவள்.

ஆத்திரமடைந்து, ''நீயும் சம்மதித்தாய்தானே. இப்போது... வேண்டுமானாலும்...'' என்று தொடங்கியவன் சட்டெனத் தணிந்து, ''உனக்கு நான் எழுதித்தருகிறேன், அனுபமா. இங்கே நடப்பது எல்லாமே நாடகம் என்று எழுதுகிறேன். பின்னொரு வாழ்க்கை அமையும்போது இதைக் காட்டிவிட்டால் வேறு பிரச்சனை ஏதும் இராது?'' என்று விளக்கினான் வித்யாதரன்.

இவன் உண்மையாகவே நம்பித்தான் சொல்லுகிறானா? இவன் வீட்டில் இவனுடைய காதலி என்கிற நிலையில் சில மாதங்கள் வாழ்ந்த பிறகு 'அது நடிப்பு, தப்பாக ஏதும் நடக்கவில்லை' என்று இவன் எழுதித் தருவதை யார் நம்புவார்கள்? இவ்வளவு புரியாத வெகுளியா இவன்? ம்ம்.....!

விழிகளில் கூர்மையுடன் அவனை நேராய்ப் பார்த்தாள் அனுபமா.

வித்யாதரனின் பார்வை தளராத போதும், முகம் லேசாகக் கறுப்பதைக் கண்டு கொண்டாள் அவள்.

அவள் கண்டு கொண்டதை அவனும் புரிந்து கொண்டு, அப்படி எழுதிக் கொடுத்தாலும் அதையும்.... அதில் எந்த அளவு பயன் இருக்கும் என்று சொல்ல முடியாதுதான்.

ஆனால் இந்த வினாடியில் இந்த விஷயத்தில் என் தேவைக்கு உன் தேவை கொஞ்சமும் குறைவு இல்லை என்பதை மறக்க வேண்டாம்'' என்றான் அவன். நிமிர்வுடனேயே.

கீழ் உதட்டின் மேல் பற்கள் பதிந்த இடத்தில் அனுபமாவுக்கு இரத்தம் கசிந்தது

வக்கு இல்லாத அதிருஷ்டக் கட்டைகளுக்கு ஒரு கேடா? அவ்வப்போது வலிக்க வலிக்க குட்டு விழுந்த பிறகுதானே இது மண்டைக்குள் உறைக்கிறது!

உள்ள நிலைமை உள்ளபடி திரும்பவும் நினைவு வருகிறது! அவளது முகத்தில் குழம்பியிருந்த அவமானச் சிரிப்பைக் கவனித்தபடி எதிரே வித்யாதரன் நிற்பதுதான் அனுபமாவுக்கு இன்னமும் வேதனையாக இருந்தது. இந்தப் பிச்சைக்காரிக்கு இவ்வளவு திமிரா என்றுதானே அவன் நினைத்துக் கொண்டிருப்பான்?

தன்னைச் சமனப்படுத்திக் கொள்ள அனுபமா பாடுபடுவதைச் சில வினாடிகள் பேசாமல் பார்த்திருந்துவிட்டு, வித்யாதரன் சொன்னான், ''இதோ பார் அனுபமா, இந்த நிலைமை நம் இருவரில் யாரும் விரும்பி உருவானது இல்லை. நீ ஒருவனை நம்பி ஏமாந்தாய்; நானும் அதே மாதிரிதான். கொஞ்சமும் குறைவில்லை. இருவரின் புத்தியும் புல் மேய்ப் போனதற்கு ஒருவரை ஒருவர் குத்திக் காயப்படுத்திக் கொண்டே இருப்பதில் எந்தவித லாபமும் இல்லை. இப்போதைக்கு, நம் இருவரின் பிரச்சனைக்கும் இது ஒரு தற்காலிகத் தீர்வு என்கிற அளவில் மட்டும் இதை எடுத்துக் கொள்வது இருவருக்குமே நல்லது'' என்றான் அவன்.

அந்தமட்டும் மன்னிப்புக் கேட்கும் அளவுக்கு அவனை அவன் கீழிறக்கவில்லை! குற்றத்தில் தானும் பங்கேற்றதை

கொள்கிறான்.

அவன் கொடுத்த வாய்ப்பைப் பற்றி, ''அங்கே, உங்கள் வீட்டில் யார் யார் இருப்பார்கள்? அவர்களோடு எப்படிப் எப்படி பழக வேண்டும்?'' என்று தனிந்த குரலில் வினவினாள் அனுபமா.

அவனும் அவள் போக்கில் இணைந்து, அவன் வீட்டாரைப் பற்றிய விவரங்களைச் சொல்லத் தொடங்கினான்.

வீட்டில் பணிபுரிகிறவர்கள், அவர்களில் வெகு காலமாக உடன் இருப்பவர்கள், குடும்ப நண்பரான குடும்ப டாக்டர், அவருடைய குடும்பம்...

எல்லாரையும் பற்றி விவரம் கூறிமுடித்து விட்டுத் தாயாரைப் பற்றிச் சொல்லத் தொடங்கியவனுக்குத் தொண்டை அடைத்தது போலும்... செறுமித் தொண்டையைச் சீர்படுத்திக் கொண்டு ''உலகத்தில் என் அம்மாவைப் போல் யாருமே இருக்க மாட்டார்கள், அனுபமா. எல்லாப் பிள்ளைகளுக்கும் அவரவர் அம்மா அப்படித்தான் என்று நீ நினைக்கலாம். ஆனால் என் அம்மாவை நேரில் சந்தித்த பிறகு உனக்கே புரியும்.

''வீடு, தொழில் இரண்டிலுமே அவர்கள் அப்படித்தான். தொழில் பொறுப்பேற்றபின் பத்து மடங்காகப் பெருக்கியிருக்கிறார்கள்...'' என்றவன் அனுபமாவின் பார்வையில் இருந்த வேறுபாட்டை உணர்ந்து விளக்கினான். என் தந்தை என் [illegible]வது வயதிலேயே இறந்து போனார். அவர் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்திலேயே அம்மாவுக்குத் தொழிலைப் பற்றிய விவரங்கள் எல்லாம் கற்றுக் கொடுத்திருந்தாராம். [illegible]யும் பக்கபலமாக இருக்கவே அம்மாவே தொழிலை [illegible]த்துக் கொண்டார்கள்.

''என்னைப் பொறுத்தவரையில் அம்மா எனக்கு ஒரு மதிப்புக்குரிய சினேகிதி மாதிரிதான். அம்மா என்கிற அதிகாரத்தை அவர்கள் ஒருநாளுமே என்னிடம் காட்டியது கிடையாது. ஆனால் அதற்காகத் தப்புத் தவறு செய்துவிட முடியாது...''

அனுபமா சட்டென விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள். திருமணம் செய்து கொள்ளாமல் ஒரு பெண்ணுடன் சேர்ந்து வாழ்வது இவன் கணக்கில் தப்புத் தவறு இல்லையாமா?

அதைச் சொல்லி, இருக்கும் சூழ்நிலையைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்று அவள் இருந்தபோதும், அவளது மனதைப் படித்தவன் போல அவன், ''நீ என்னுவது புரிகிறது. ஆனால் அந்த நாட்டில் இருந்து கொண்டு அதை தப்பென்று எண்ணத் தோன்றவில்லை'' என்றான்.

முகத்தோற்றத்தில் இன்னமும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள் அனுபமா.

தாயாரைப் பற்றி பேச்சை நிறுத்தமாட்டாதவன் போல் மீண்டும் தொடங்கிய வித்யாதரன், உடனேயே தலையசைத்தான். ''உங்கள் அம்மாவை விற்கப் போகிறீர்களா? இவ்வளவு விளம்பரம் செய்கிறீர்களே என்பாள் அனு. நீதான் நேரிலேயே பார்க்கப் போகிறாயே'' என்று அந்தப் பேச்சை விடுத்து, ப்யணத்தைப் பற்றிப் பேசினான்.

''முதலில் அங்கே தங்கும் நாட்களுக்குத் தேவையான துணிமணிகள், உள்ளாடைகள், செருப்புகள், சிறு நகைகள் எல்லாம் உனக்கு வாங்க வேண்டும். இங்கே இந்த ஒட்டல் 'காம்ப்ளக்'சிலேயே எல்லாம் கிடைக்கும். இதுகூட நீ தூங்கி போது கீழே போய் வாங்கி வந்ததுதான். அங்கேயே போகலாமா?'' என்று அவள் அணிந்திருந்ததைக் காட்டினான் அவன்.

வேண்டாம் என்னிடம் இருப்பது போதும் என்று தலை நிமிர்ந்து சொல்ல வழியில்லை. ஆனால் அவனைப் பார்த்த நேரத்தில் இருந்து அவள் தயவில் உடை உடுத்தும்படியான நிலைமை அவளுக்கு, அவமானமாகவே இருந்தது. எனவே, ''இந்தத் துணிமணிகளுக்கு ஆகிற செலவை என் சம்பளத்தில் கழித்துவிட்டு மீதியைக் கொடுங்கள், போதும். அப்புறம்.... நகைகளை நான் திருப்பித் தந்து விடுவேன்'' என்றாள் அனுபமா.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு தோளைக் குலுக்கினான் அவன். ''அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். கிளம்பு சீக்கிரம் கிளம்பு!'' என்று அவசரப்படுத்தினான்.

விலையைப் பற்றிய கவலையே இல்லாமல் அவன் வாங்கிக் குவிப்பதுபோலத் தோன்றியது அவளுக்கு.

''எனக்குக் கட்டுபடியாகாது. வேண்டாம்'' என்று அவன் காதருகே முணுமுணுத்தாள்.

''என் காதலி என்கிற நிலையில் வாழ்ந்தவளுக்கு வாழப் போகிறவளுக்கு உரிய அளவுதான் வாங்குகிறேன்... பிற்பாடு நீ எடுத்துச் செல்வதை மட்டும் கணக்கில் கழித்துக் கொள்ளலாம்'' என்று அவன் கூறவும் அமைதியானாள்.

'ஷாப்பிங்' முடித்தபின் அவன் சற்றும் பொழுதை வீணடிக்கவில்லை. உடனடியாக அறையைக் காலி செய்துவிட்டு நேரேயே கிளம்பிவிட்டான்.

காரையும் மிகவும் வேகமாகவே ஓட்டினான். மிகவும் அதிகப்படி வேகம் என்று கூட அவளுக்குத் தோன்றியது. விமானமாகப் போய்ச் சேருவதைவிட முழுசாகப் போய்ச் சேருவது மேல்' என்று சொல்லலாமா என்று எண்ணி,

சொல்லாமல் விடுத்தாள். ஒன்று, கார் அவன் கட்டுப்பாட்டில் இருப்பது நன்றாகவே தெரிந்தது. அத்தோடு அவனது சொந்த உயிரைப் பற்றி அவனுக்கும் அக்கறை இருக்கும்தானே?

அவனது வீட்டை அடைந்தபோது வெகுவாகப் பின்னிரவா கியிருந்தது.

அப்போதும் விழித்திருந்து, வந்த உடன் அம்மா அழைத்து வரச் சொன்னார்கள் என்று வித்யாதரனுடைய தாயாரின் அறைக்கு அவர்களை அழைத்துச் சென்றார் காரியஸ்தர்.

முதலில் அறைக்குள் சென்ற வித்யாதரனை நோக்கி முறுவ லித்த சிவகாமி அம்மாளின் பார்வை உடனேயே மகனிடமி ருந்து விலகி, அவனைப் பின் தொடர்ந்து வந்த அனுபமாவி டம் பாய்ந்தது.

''வாம்மா!'' என்று ஈனசுரத்தில் வரவேற்றபடி அவளை நோக்கி அவர் சற்று சிரமத்துடனேயே கைநீட்டவும் விரைந்து சென்று அவரது கையைப் பற்றியவாறு அவரது முகத்தை ஏறிட்ட அனுபமா திகைத்தாள்.

வித்யாதரனுடைய அன்னை சிவகாமியின் கண்களில் ஒளிர்ந்தது அணையப் போகிற சுடரின் கடைசிப் பிரகாசமா?

முகத்தின் மீது நேரடியாக வெளிச்சம் படக்கூடாது என்றோ என்னவோ, அவரது தலைக்குப் பின்புறமாக மட்டுமே போடப்பட்டிருந்த விளக்கிலிருந்து பரவிய மெல்லொளியிலும் அவரது விழிகள் பளபளத்தன.

12

சென்னையிலிருந்து கிளம்பியபோது, பயண நேரத் தில் வித்யாதரனிடம் பல விசயங்கள் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தாள் அனுபமா.

ஆனால் வேகம் வேகமாய் ரேசில் கார் ஓட்டுவது போல கனவேகமாக அவன் கார் ஓட்டியபோது, லேசாக நெறித்த புருவமும், சாலையில் பதிந்திருந்த கண்ணுமாயிருந்த அவனது கவனத்தை இம்மியளவு ஈர்க்கவும் அவளுக்கு அச்சமாய் இருக்கவே அவள் வாயே திறக்கவில்லை.

அந்தப் பெண் அனுராகாவோடு அவன் வசித்த இடம், பழகிய நண்பர்கள், சென்ற ஊர்கள் என்று எதுவும் தெரியாமல் அவளைப் போல- அவளாகவே நடிப்பது எவ்வளவு கடினம்? 'இதென்ன சமையலா, சத்திரிக்காய் சாம்பார், வாழைக்காய்ப் பொரியல் பண்ணு என்று சொல்வதோடு கடமை முடிந்து விட்டாற்போல இருப்பதற்கு?

அவளது சிரமம் பற்றிய அக்கறையே இல்லாமல், அனுரா தமாக நடி' என்பதோடு தன் கடமை முடிந்து விட்டாற்போல அவன் நடந்து கொள்வதைக் காண்கையில் அவளுக்கு மீண்டும் கோபம் குமுறியது.

தவிர்க்கவேளை, அந்த அனுராகாவைப் பற்றி பேசினால் அவனை வலிப்பதால் அவளைப்பற்றிய பேச்சைத் தவிர்க்கி றானோ என்று தோன்றவும், விசித்திரமான வகையில் அதுவும்

அவளுக்கு உள்ளூரக் கோபம் குமுறியது.

எனவே வெளிப்புறக் காட்சிகளில் பார்வையைச் செலுத்தி, பிடிவாதமாய் அவைகளைப் பற்றி ஏதாவது எண்ணத் தொடங்கினாள்.

மாலைச் சிற்றுண்டி, காபியோடு இரவு உணவுக்கும் கூட அவன் தங்கியிருந்த ஓட்டலிலேயே வாங்கி வந்திருந்ததால் உணவுக்காக எங்கேயும் நிறுத்தி காத்திருக்க நேரவில்லை.

சாலை ஓரமாகக் காரை நிறுத்தி, சிற்றுண்டியையும் பிளாஸ்கில் காபியையும் பகிர்ந்து உண்டபோது அவன், ''இனி இருட்டிவிடும். வெளியே பார்க்க ஒன்றும் இராது. பின் சீட்டில் குஷன்கள் கிடக்கும். எடுத்து வைத்துக் கொண்டு தூக்கம் வந்தால் தூங்கு. பின்சீட்டில் படுத்துக்கூடத் தூங்கலாம். ஆனால் வேகமாகச் செல்ல வேண்டியிருப்பதால் இந்த வண்டியில் கூட தூக்கிப்போடும். அதனால் முன்பக்கமாகவே இருந்து தூங்கு'' என்றான்.

ஆனால் அவளுக்கு வேறு ஞாபகம் வந்தது. காரில் உடன் இருப்பவர்கள் தூங்கினால் ஓட்டுகிறவர்களுக்கும் உறக்கம் வரும் என்று யாரோ பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்த நினைவு.

இந்த வேகத்தில் கார் செல்லும்போது அவன் ஒரு கண அசப்பில் கண்ணயர்ந்தாலும் இரண்டு பேருக்குமே சொர்கமோ நரகமோ நிச்சயம் அல்லவா?

மொட்டு மொட்டென்று விழித்தபடி அமர்ந்திருந்தவளு அனுராகாவைப் பற்றி நினைத்து அல்லல் படுவதைவி சென்றவுடன் எதிர்கொள்ள வேண்டிய சிவகாமி அம்மாளை பற்றிச் சிந்திப்பது மேல் என்று பட்டது.

வித்யாதரனுடைய அன்னை என்றால்.... குறைந்தது

பதை நெருங்கிய வயதாயிருக்கும் என்று ஊகித்தாள்.

ஐம்பது வயது என்றால்.... இருபது வயதின் இளமையில் அது கிட்டத்தட்ட வாழ்வின் கடைசிப்படியாகவே தோன்றியது.

வெளேரென்று நரைத்த தலை. சருக்கம் விழுந்த சருமம், தளர்ந்தவிட்ட உடல்... இத்தோடு ஸ்ட்ரோக் வந்து பிழைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்கையில் உயிரொளி மழுங்கிப் பஞ்சடைந்த கண்கள்... பாவம்... என்று சிவகாமியைப் பற்றிக் கற்பனை செய்து வைத்திருந்தாள் அனுபமா.

அந்தப் பின்னிரவு வேளையிலும், கிட்டத்தட்ட மூன்று மணி அளவில் அந்த அம்மாள் விழித்திருப்பதே அவளுக்கு வியப்பளித்தது.

ஆனால் அறைக்குச் செல்லும்போது கூடவே வந்து, ''எவ்வளவு சொன்னாலும் அம்மா கேட்கவில்லை சார். மிளம்பும் போது போன் செய்தீர்களே, அதைக் கணக்கிட்டு [illegible]ரண்டரை மணிக்கு அலாரம் செட்பண்ணி கடிகாரத்தைப் [illegible]கத்தில் வைத்துவிட்டு, அவர்கள் தூங்கும்போது அதை [illegible]ற்றிவிடக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவு போட்டு [illegible]த்தான் இரவு தூங்கினார்கள். அம்மாவுக்குக் கீழ்படியா[illegible] எங்களால் இருக்க முடியாது சார். அதனால்தான்...'' [illegible]யின் தூக்கம் கெட்டிருப்பதை உணர்ந்து அதிருப்தி [illegible]ய முதலாளிக்குச் சமாதானம் கூறியபடியே காரியக்காரர் [illegible]ப்புறத்துச் சென்றபோது இன்னமும் அதிகப்படியாகக் [illegible]ற்று ஒய்ந்துக் கிடக்கும் ஒரு வயதான பெண்மணியை [illegible]ர்த்தபடி நோயாளியின் அறைக்குள் நுழைந்தாள் அனு[illegible]

[illegible]ருப்பவரின் முகத்திலோ கண்ணிலோ நேரடியாக [illegible]ட்டால் கஷ்டமாயிருக்கும் என்று நோயாளியின்

தலைப்புறத்துச் சுவரில் இருந்த கொத்து விளக்குகள் மட்டுமே போடப்பட்டிருந்தன. அந்த விளக்கு வெளிச்சத்தையும், நுண்ணிய வேலைப்பாடமைந்த கட்டிலின் தலைமாட்டுச் சட்டம் மறைத்துவிட, கட்டிலில் படுத்திருந்த சற்று மெலிவான உடல் மட்டும்தான் அறையினுள் சென்றதும் அனுபமாவின் கண்ணில் பட்டது.

ஆள் அரவம் உணர்ந்து மெல்லத் திறந்த விழிகள் முதலில் வந்து கொண்டிருந்த மகனைக் கண்டு சிறு முறுவலும், இமை அசைவுமாக நல்வரவு உணர்த்திவிட்டு, அவனை அடுத்து வந்த அனுபமாவிடம் திரும்பின.

நலிந்த குரலில் ''வாம்மா'' என்றழைத்து, சோர்ந்த கரத்தைச் சிரமத்துடன் நீட்டி வரவேற்பைக் காட்ட அந்த முதியவர் முயலவும் அனுபமாவுக்கு உள்ளம் உருகிவிட்டது.

வித்யாதரன் மேல் உரச நேர்ந்ததைக் கூட கவனியாமல் அவசரமாக முன்னே வந்து, சிவகாமியின் கையைக் குனிந்து ஆதரவாய்ப் பற்றியவாறு அவளது முகத்தைப் பார்த்தப்போது, அந்த விழிகளின் பளபளப்பு அவளுக்கு திகைப்பூட்டின.

கடுமையான நோய்வாய்பட்டவரின் கண்களில் இவ்வளவு பளபளப்பா என்று ஆச்சரியப்பட்டவர்களுக்கு 'அணைகிற தீபம் கடைசியாகச் சுடர் விட்டு எரிகிறது' என்று தோன்றவும் கவலையாகிப் போயிற்று.

தாயின் மேல் உயிரையே வைத்திருக்கும் இந்த மகன் இ எப்படித் தாங்கப் போகிறான் என்று உள்ளூர வருந்தியபடி தன் பிரிவைப் பார்வையால் தெரிவிக்க முயன்றவள் மீண் அதிர்ந்தாள்.

சிவகாமியின் பார்வையில் இருந்தது வேறு ஏதோ ஒன்

எதையோ.... எந்தச் சவாலிலோ வென்றுவிட்ட வெற்றிப் பெருமிதம்! ஏன்...?

ஆனால் அவள் குழப்பமுற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவள் கண்டது மாயையோ, கண்டதாக எண்ணியதே கற்பனையோ எனும் விதமாய் சிவகாமியின் விழிகளிலும் சிறு குழப்பம் பரவி, அதுவும் மறைந்து சோர்வுடன் அவரது விழிகள் மூடிக் கொண்டது.

நோயின் உபாதையையும் மீறி அவர்களுக்காக விழித்திருந் திருக்கிறார்கள், பாவம்!

மீண்டும் தூங்கிவிட்டார்; ஓசையற்று விலகி விடலாம் என்று பார்த்தால் அனுபமாவின் கை சிவகாமியின் பிடியில் இருந்தது.

என்ன செய்யலாம் என்று யோசித்தபோது சிவகாமியின் கண்கள் மீண்டும் திறந்தன.

இப்போது தாயின் பார்வை மகனை ஏறிடவும் அவன் அவசரமாக மண்டியிட்டு, ''என்னம்மா?'' என்று தொண்டைய வை க்க வினவினான்.

''ஒரவெல்லாம் காரில் வந்ததில் அலுத்திருப்பீர்கள். இரண்டு பேரும் போய்த் தூங்குங்கள். காலையில் விழுந்தடித்துக் கொண்டு எழுந்திருக்க வேண்டாம்...'' என்று மெல்லிய - ரில் மெல்லிய குரலில் கூறி லேசாக முறுவலித்தார். ''ஏனென் றால் டாக்டரைப் பதினோரு மணிக்கு மேல்தான் வரச் சொல்லியிருக்கிறேன். நீ டாக்டரிடம் என் உடம்பைப் பற்றி அப்போது தான் விசாரிக்க முடியும்!''

மெலிந்த குரல் கேலி தொனிக்கப் பேசுகையில் அனுபமா மனம் வெகுவாக நெகிழ்ந்தது.

மகனின் நலத்துக்காக இவ்வளவு பார்க்கிறாரே!